# திட்டம்

## மாத இதழ்

மலர் : 46
இதழ் : 7

மார்ச் 2015
பல்குண – சைத்ர 1936–37



முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
முதுநிலை ஆசிரியர்
**ஆ. இளங்கோவன்**



கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர் களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துகளை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.



**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 10.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ.100.00 |
| இரண்டாண்டு | ... | ரூ.180.00 |
| மூன்றாண்டு | ... | ரூ.250.00 |

சந்தா (DD அல்லது MO) அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
**திட்டம்**
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை,
சென்னை 600 006.
தொலைபேசி: 2827 2382



**முன்னேற்றத்தை நோக்கி துணிச்சலான பாதை வகுத்த ரயில்வே பட்ஜெட்**
– ஜி. சீனிவாசன்

**24 திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன**
– நிதியமைச்சர் உரை

**இந்தியாவில் ஏழைகளுக்கு உதவ, கூடுதலான அந்நிய நாட்டுப் பங்குகளை காப்பீட்டுத் துறையில் அனுமதிக்க வேண்டும்**
– தீரஜ் நய்யார்

**மத்திய பட்ஜெட் தயாரிப்பதில் உள்ள முன்னேற்பாட்டு செயல்களும் நடைமுறைகளும்**
– ரவீந்திர ஹெச்.தோலக்கியா

**பட்ஜெட் 2015–2016 சமூகப் பரிமாணம்**
– மணீஷ் கோவில்

**விவசாயத்துறை வளர்ச்சி மாநிலங்களின் பொறுப்பில்**
– புவன் பாஸ்கர்

**நாட்டில், வெளிநாடுகளில் கச்சா எண்ணெய் விலை நிர்ணய நிலைமை**
– ஹிரன்மாய் ராய்

**மத்திய அரசு ஆதரவு பெறும் எட்டு திட்டங்கள் விலக்கப்பட்டன கூட்டரசு முறை ஏன் தேவை**
– விநாயக் நரேன் ஜீவாஸ்தவா

**இந்தியாவின் வளர்ச்சியில் ஐந்தாண்டு திட்டங்களின் பங்கு**
– முனைவர்.கா.செல்வகுமார்,



அடுத்த இதழில்...
**உற்பத்தித்துறைப் பற்றிய கட்டுரைகள் இடம்பெறும்**

## தலையங்கம் தொடர்ச்சி....

இந்தியாவிலுள்ள இளைஞர்கள் சமுதாயத்தின் சக்தியை பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடனும், அவர்களின் வேலைவாய்ப்புத் திறனை அதிகரிக்கும் நோக்குடனும் ஏராளமான நடவடிக்கைகள் மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளன. 5 கி.மீ சுற்றளவுக்குள் ஒரு உயர்நிலைப்பள்ளி, தொழில்நுட்ப மற்றும் திறன் மேம்பாட்டுக்கான உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவை நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்படும். சிறுபான்மை சமுதாய இளைஞர்களின் கல்வி மற்றும் வாழ்வாதாரத்தை ஒருங்கிணைக்கும் நோக்குடன் நை மன்ஜில் அமைப்புகள் ஏற்படுத்தப்படும் என்றும், பட்டியலின மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு முன்னுரிமை அளித்து நுண்கடன் நிறுவனங்களுக்கு மறு நிதிஉதவி அளிப்பதற்காக முத்ரா வங்கி (Micro Units Development Refinance Agency -MUDRA) ஆகியவை ஏற்படுத்தப்படும் என்றும் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.புதிய தொழில் தொடங்குதல், சுயவேலைவாய்ப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றின் அனைத்து அம்சங்களுக்கும் ஆதரவளிக்கும் வகையில் சுயவேலைவாய்ப்பு மற்றும் திறமையை பயன்படுத்திக் கொள்ளுதல் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு அமைச்சகங்கள் சம்பந்தப்பட்ட திறன் மேம்பாட்டு திட்டங்களை ஒருங்கிணைக்கவும், அவற்றின் நடைமுறைகள் மற்றும் முடிவுகள் தரப்படுத்தப்படுவதை அனுமதிக்கவும் தேசிய திறன் இயக்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் தயாரிப்போம் இயக்கத்திற்கு புதிய உத்வேகம் அளிக்கும் நோக்குடன் பல்வேறு நடவடிக்கைகள் மத்திய நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. பெரு நிறுவனங்களுக்கான வரி அடுத்த நான்கு ஆண்டுகளில் இப்போதுள்ள 30 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக குறைக்கப்படும். பொருட்கள் மற்றும் சேவை வரி அடுத்த ஆண்டு ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்போது வரி வசூலிப்பு முறையில் இப்போதுள்ள குறைகள் களையப்படும் என்பதால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்.

நாட்டின் வளர்ச்சிக்கான இந்த முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் வலிமையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை அங்கீகரிக்கும் வகையில் இதற்காக ரூ.70,000 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதுதவிர தேசிய உட்கட்டமைப்பு முதலீட்டு நிதி மூலமாக ஆண்டுக்கு ரூ.20,000 கோடி கிடைக்கவும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

நிதிப்பற்றாக்குறையை சமாளிப்பதற்காக சேவைவரியின் அளவை 12.36 விழுக்காட்டிலிருந்து 14 விழுக்காடாக மத்திய நிதியமைச்சர் உயர்த்தியிருக்கிறார். இது மக்களின் ஆதரவை பெறாத நடவடிக்கை தான் என்ற போதிலும், பொருட்கள் மற்றும் சேவை வரி நடைமுறைப்படுத்தப்படும் போது இது சீரமைக்கப்படும்.

மாநிலங்கள் ஒருங்கிணைந்த அமைப்பின் ஓர் அங்கம் என்பதை அங்கீகரிக்கும் வகையில், வரி வருவாயில் மாநிலங்களின் பங்கை 32 விழுக்காட்டில் இருந்து 42 விழுக்காடாக உயர்த்த வேண்டும் என்ற 14ஆவது நிதி ஆணையத்தின் பரிந்துரையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இது மாநில அரசுகளுக்கான நிதி ஆதாரங்களை அதிகரிப்பது மட்டுமின்றி, மாநில அரசுகள் தங்களின் தேவைக்கேற்ப நிதித் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.

– ஆசிரியர்

# மத்திய அரசு ஆதரவு பெறும் எட்டு திட்டங்கள் விலக்கப்பட்டன 24 திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன அமைச்சர் அருண் ஜெட்லி

2015–16ம் நிதி ஆண்டில் மத்திய அரசு திட்ட ஒதுக்கீடாக பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 14வது நிதி குழுவின் பரிந்துரைப்படி 42% மத்திய அரசு அதன் வரியிலிருந்து மாநிலங்களுக்கு அளித்துள்ளது. இதை தொடர்ந்து மாநிலங்களில் செயல்படுத்தப்படும் சில திட்டங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும், வறுமை ஒழிப்பை இலக்காக கொண்டு தேசிய அளவில் சில திட்டங்களைச் செயல்படுத்த முன்னிரிமை அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்கும்.

2015–16ம் நிதி நிலை அறிக்கையின்படி, சமூக அளவில் அதிக பயன் தரும்படி வறுமையில் உள்ளவர்களுக்கு முழு பயன் அளிக்கும் வகையில் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய முடிவு செய்துள்ளது. அவை, மத்திய அரசு ஆதரவுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்; மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டங்கள். இதில் மாநில அரசு தனது பங்கை அதிக அளவு செலவிடும் வகையில் மாற்றி அமைக்கப்படும். மத்திய மாநில அரசுகளின் பங்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பின்னர் கணக்கிடப்படும்.

2015–16ம் நிதி நிலை அறிக்கையில் 31 திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்கும். 8 திட்டங்களுக்கான நிதி ஆதாரம் விலக்கி கொள்ளப்பட்டுள்ளது. நிதி மாற்று திட்டத்தின் கீழ் 24 திட்டங்கள், தற்போது செயல்படுத்தப்படும். இதற்காக 2014–15ம் ஆண்டில் மறு மதிப்பீடாக ரூ.1,92,378 கோடி மூலதன செலவு செய்யப்பட்டது. இது 2015–16ம் ஆண்டில் ரூ.2,41,431 கோடியாக இருக்கும்.

### (அ) மத்திய அரசு ஆதரவுடன் செயல்படுத் தப்படும் திட்டங்கள்

1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம்

2. சிறுபான்மையினருக்கான பல்முனை வளர்ச்சி திட்டம்

3. தூய்மையில்லா பணியில் ஈடுபட்டுள்ள சிறுவர்களுக்கு கல்வி முன் உதவி தொகை

4. பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட பழங்குடியினத்தவருக்கு கல்வி உதவி தொகை

5. 1995 குடியுரிமை பாதுகாப்பு சட்டம் மற்றும் 1989 வன்கொடுமை தடுப்பு சட்டத்தை அமலாக்க தேவையான ஆதரவு அளித்தல்

6. மாற்று திறனாளிகளுக்கான தேசிய திட்டம்

7. சிறுபான்மையினருக்கான கல்வி உதவித் திட்டம்

8. பழங்குடியின குழந்தைகளுக்கு கல்வி அளிக்கும் திட்டம்

9. இந்திரா காந்தி மகப்பேறு உதவித் திட்டம்

10. ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

11. ராஜீவ் காந்தி இளம் பெண்களுக்கான அதிகாரம் அளிக்கும் திட்டம்

12. தேசிய ஊட்டச்சத்து இயக்கம்

13. பெண்கள் வளர்ச்சி மற்றும் பாதுகாப்புத் திட்டம்

14. அரசியல் சட்டமைப்பு பிரிவு 275 திட்டத்திற்கான உதவித் திட்டம்

15. மத்திய பழங்குடியின மக்களுக்கான சிறப்பு துணைத் திட்டம்

16. அனைவருக்கும் கல்வி திட்டம்

17. மத்திய உணவுத் திட்டம்

18. வடகிழக்கு குழுவுக்கான திட்டம்

19. போடோ பிரதேச குழுவிற்கான சிறப்பு திட்டங்கள்

20. தேசிய சமூக உதவித் திட்டம் (அன்னபூர்னா)

*21.* வடகிழக்கு மண்டலத்திற்கும் சிக்கிமுக்குமான மத்திய வளங்கள் மையத்திலிருந்து நிதி

*22.* வரைமுறை படுத்தப்படாத துறையின் தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு திட்டம்

*23.* (ஆசிரியர் பயிற்சி மற்றும் முதியோர்) கல்வி வளர்ச்சிக்கான உதவி

*24.* எல்லை பகுதி வளர்ச்சி திட்டம்

*25.* நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு வளர்ச்சிக்கான திட்டம்

*26.* பிரதமர் கிராம சாலைகள் திட்டத்திற்கான வரி ஒதுக்கீடு

*27.* மத்திய சாலை நிதி மூலம் சாலைகள் மற்றும் மேம்பாலங்கள்

*28.* புலி பாதுகாப்பிற்கான திட்டம்

*29.* யானை பாதுகாப்பிற்கான திட்டம்

*30.* தனியார் உதவியுடன் திட்டங்களுக்கான மத்திய நிதி உதவி (கடனாக)

*31.* தனியார் உதவியுடன் திட்டங்களுக்கான மத்திய நிதி உதவி (நிதி)

### (ஆ) நிதி மாற்றத் திட்டம்

*1.* கால்நடை வளர்ச்சி

*2.* ஒருங்கிணைந்த தோட்டகலை மேம்பாட்டு இயக்கம்

*3.* தேசிய விவசாய நலத் திட்டம்

*4.* தேசிய கால்நடை இயக்கம்

*5.* திடமான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்

*6.* பால் பண்ணை நலத் திட்டம்

*7.* கால்நடை சேவை மற்றும் விலங்குகள் சுகாதாரம்

*8.* தேசிய ஊரக குடிநீர் திட்டம்

*9.* தூய்மையான பாரத திட்டம் (ஊரகம் மற்றம் நகர்புற)

*10.* தேசிய மரம் வளர்ப்புத் திட்டம்

*11.* கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான தேசிய திட்டம்

*12.* தேசிய எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்கள் தடுப்புத் திட்டம்

*13.* தேசிய சுகாதார இயக்கம்

*14.* தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம்

*15.* தேசிய நடுநிலைக் கல்வித் திட்டம்

*16.* உயர்நிலைக் கல்விக்கான உதவி

*17.* நிதித்துறை உள்கட்டமைப்பு வசதிக்கான வளர்ச்சி

*18.* தேசிய நில பதிவு நவீனத் திட்டம்

*19.* தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்

*20.* ஊரக வீட்டு வசதி, அனைவருக்கும் வீடு

*21.* ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி சேவை

*22.* ராஜீவ் காந்தி விளையாட்டுத் திட்டம்

*23.* பிரதம வேளாண் நுண் பாசன திட்டம்

*24.* விரைவுபடுத்தப்பட்ட நீர்ப்பாசன பலன் மற்றும் வெள்ள மேலாண்மை திட்டம்

### (இ) நிதி ஆதரவு விலக்கிக் கொள்ளப்பட்ட திட்டங்கள்

தேசிய இணைய அரசு முறைத் திட்டம்

பிற்படுத்தப்பட்ட மண்டல நிதி

காவல் படையை நவீனப்படுத்துதல்

ராஜீவ் காந்தி பஞ்சாயத்து அதிகாரம் அளித்தல் திட்டம்

ஏற்றுமதி உள்கட்டமைப்பை மாநிலங்கள் மேம்படுத்துவதற்கான மத்திய உதவித் திட்டம்

6000 மாதிரி பள்ளிகள் அமைப்பதற்கான திட்டம்

உணவு பதப்படுத்தலுக்கான தேசிய இயக்கம்

சுற்றுலா உள்கட்டமைப்பு

## மத்திய பட்ஜெட் 2015-2016

### விரைவில் தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியம்-நிதி அமைச்சர் அறிவிப்பு

**மத்திய அரசு விரைவில் தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியத்தை துவக்க உள்ளதாக மத்திய நிதி அமைச்சர் திரு. அருண் ஜெட்லி கூறியுள்ளார்.**

**இன்று 2015–16 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்த போது அவர் இதனை கூறினார். இந்த நிதியத்தில் ஆண்டுதோறும் ரூ. 20,000 கோடி பரிமாற்றம் செய்யப்படுவதை அரசு உறுதி செய்யும். இது கடன் அளிப்பதற்கான நம்பிக்கையை அதிகரிக்கும். இதன் மூலம் இந்திய ரயில்வே நிதி கழகம், தேசிய வீட்டுவசதி வங்கி போன்ற உள்கட்டமைப்பு நிதி நிறுவனங்களுக்கு பங்கு முதலீடு அதிகரிக்கும். இந்த பங்கு முதலீடுகளை நிதி நிறுவனங்கள் பல மடங்காக பெருக்க முடியும் என்று அமைச்சர் தெரிவித்தார்.**

# நாட்டில், வெளிநாடுகளில் கச்சா எண்ணெய் விலை நிர்ணய நிலைமை

ஹிரன்மாய் ராய்

சர்வதேச அளவில் கச்சா எண்ணெயின் தற்போதைய விலை நிலைமை 1970களுக்கும் 80களுக்குமிடையே இருந்ததை போலவே இருந்தது. அப்போது அதற்கு முந்தைய 10 ஆண்டுகளில் கச்சா எண்ணெயின் விலை வெகுவாக உயர்ந்ததால் மேற்கத்திய நாடுகளில் இதன் உற்பத்தி மிகவும் அதிகரித்தது. விலை குறைந்திருந்தபோது உற்பத்தி செய்யப்பட முடியாத எண்ணெய் வளங்களிலும் விலை உயர்வு காரணமாக உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. உலகளாவிய தேவையை பூர்த்தி செய்ய 1970களுக்குப்பின் அலாஸ்காவிலும் பிரிட்டனின் மேற்கு கடற்பகுதியிலும் உற்பத்தி அதிகரித்து தொடர்ந்து ஏறி வந்த கச்சா எண்ணெயின் விலை குறைந்தது. இதே நிலைமை 2000ஆவது ஆண்டு வரை நீடித்தது.

1973ல் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தபோது ஓபெக் எனக்கூறப்படும் பெட்ரோலியப்பொருட்கள் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு தேவையையும் உற்பத்தியையும் சமப்படுத்தும் பணியை மேற்கொண்டது. அதனிடம் பல மில்லியன் பேரல்கள் எண்ணெய் உற்பத்தி செய்யும் திறமை இருந்தது. தேவைப்படும் போது உற்பத்தியை பெருக்கவும் குறைக்கவும் அது உதவியது. 1973ல் விலை உயர்ந்தபின் 1980களின் முதல் வரை உலகளாவிய உபரி உற்பத்தி திறன் என்பது ஓபெக் நாடுகளின் உபரி உற்பத்தி திறமையாகவே இருந்தது. பிற நாடுகளில் அதாவது அமெரிக்கா, கனடா, ரஷ்யா போன்ற நாட்டு நிறுவனங்கள் கச்சா எண்ணெய் விலை எப்படி இருந்தாலும் தங்களால் முடிந்த அளவு உற்பத்தியை செய்து வந்தனர்.

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே இருந்த பனிப்போர் காலத்தில் வாஷிங்டன் தன்னுடைய கூட்டு நாடுகளுக்கு விதித்த கட்டாயத்தை மீறி, ஓபெக் தீர்மானித்த உற்பத்தி அளவுகளையும் மீறி அமெரிக்காவின் கூட்டு நாடுகள் உற்பத்தியை ஏன் அதிகரித்தன என்ற விவாதம் இன்னும் முடிவடையவில்லை. 1970களில் இருந்த நிலைமை தற்போது இல்லை என்பதால் சவுதி அரேபியா அதிகமாக எண்ணெய்யை உற்பத்தி செய்ததா என்று தெரியவில்லை.

ஓபெக்கின் பெரும்பாலான உபரி உற்பத்தித்திறன் சவுதி அரேபியாவிடம்தான் இருந்தது. 1970களுக்குப்பின் சவுதி அரேபியா எண்ணெய் விலையை அதிகரிக்கச்செய்வதற்காக உற்பத்தியை குறைத்துக்கொண்டது. அப்போது எண்ணெய் சந்தையை சமாளிப்பதில் சவுதி அரேபியாவுக்கும் ஓபெக்கிற்கும் கருத்து வேற்றுமை இருந்தது. உற்பத்தியை கட்டுப்படுத்தி உறபத்தி செய்யும் நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு அளவை நிர்ணயித்து, உற்பத்தியை பெருக்குவதையோ, குறைப்பதையே செய்ய வேண்டும் என்று ஓபெக் விரும்பியது. இதை எதிர்த்த சவுதி அரேபியா, ஒரு குறிப்பிட்ட விலையை பெறும் வகையில், உற்பத்தி இருக்க வேண்டும் என்று நினைத்தது. ஆகவே தான் விரும்பிய விலையை உலகச்சந்தையில் நிலைநாட்ட சவுதி அரேபியா தன்னுடைய எண்ணெய் உற்பத்தி அளவை நிர்ணயித்தது. இதனால், 1970களில் 10 மில்லியன் பேரல்கள் என்று இருந்த சவுதி அரேபியாவின் உற்பத்தி அளவு 1985ல் மூன்று பில்லியன் பேரல்களாக குறைந்தது.

இப்படியே கச்சா எண்ணெய்யின் விலை குறைந்து கொண்டே போகும் நிலைக்கு ஒரு வரையறை உண்டு. விலைகள் குறைய குறைய உற்பத்தியும் குறையும். முதலில் உற்பத்தி செலவு அதிகமாக உள்ள எண்ணெய்க் கிணறுகள். அடுத்ததாக பயன்படும் இடத்திலிருந்து

---

* ஹிரன்மாய் ராய் – டெஹராடுனிலுள்ள எண்ணெய் வளம் மற்றும் எரிசக்தி ஆய்வு பல்கலைக்கழகத்தில் பொருளாதார மற்றும் உலக வர்த்தகத் துறையில் பணியாற்றுகிறார். எரிசக்தி பயன்பாடு மற்றும் மனித வளர்ச்சி உள்ளிட்ட மூன்று புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார். தேசிய மற்றும் பன்னாட்டு இதழ்களில் முப்பது கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்குகளில் முப்பது ஆய்வு கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

மிக தூரத்தில் உள்ள கிணறுகள். இப்படி ஏற்படும் போது விலை நிர்ணயத் தன்மை மாறுபட்டு குறைந்த விலையில் உற்பத்தி செய்ய முடியாத கிணறுகளுக்கு மீண்டும் வாய்ப்புகள் கிடைக்கின்றன. ஆகவேதான் எண்ணெய் விலைகளை ஒரு குறிப்பிட்ட அளவில் வைத்துக்கொள்வதே சவுதி அரேபியாவின் எண்ணம் என்று கூறப்பட்டது. மேற்கத்திய நாடுகளின் எரிசக்தி தேவையை பாதிக்காத வகையிலும் உலக எண்ணெய் சந்தையை மிகவும் பாதிக்காத நிலையிலும் எண்ணெய் உற்பத்தியை நிர்ணயிப்பதை சவுதி அரேபியா விரும்பியது.

இன்றைய நிலைமை முற்றிலும் மாறுபட்டதாகும். உபரி உற்பத்தித் திறன் தற்போது சவுதி அரேபியாவிடம் இல்லை. ஆகவே மேற்கொண்டு உற்பத்தியை அதிகரித்து விநியோகம் செய்ய அதனால் முடியாது. 1990களுக்குப்பின் சவுதி அரேபியா எட்டிய அதிக பட்ச உற்பத்தி திறனில்தான் தற்போது நிலைத்து இருப்பதாக கருதப்படுகிறது. பல ஆண்டுகளாக ஓபெக் உறுப்பு நாடுகள் உற்பத்தி அளவு குறியீடுகள் சார்ந்த பிரச்சினைகளால் ஓபெக் தேவைக்குத் தகுந்த அளவில் உற்பத்தியை பெருக்கவோ குறைக்கவோ இயலவில்லை. ஆகவே உற்பத்தியின் அளவை குறைக்க கூட்டு நாடுகளுக்கு ஓபெக் கட்டளையிட முடியாத நிலைமை இப்போது உள்ளது.

1980களிலின் மத்தியிலிருந்து, பொருளாதார மேல்நிலை நிலைமைகளாலேயே எண்ணெய் விலைகள் உயர்ந்தன. 2000வது ஆண்டுக்குப்பின் நிதி நிலை காரணமாகவும் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது. 2004–2010 ஆண்டு காலத்தில் எண்ணெய் விலைகள் 65 சதவிகிதம் உயர்ந்ததில் 44 சதவிகிதம் நிதி நிலை தாக்கத்தினாலேயே ஏற்பட்டது. இதில் 2007–2008 ஆண்டுகளில் பொருளாதார மேல்நிலை நிலைமைகள் காரணிகளாக அமைந்தன.

தேவைகளுக்கு ஏற்ப கச்சா எண்ணெய் விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் ஆதரித்தாலும் நிதி நிலை தாக்கங்கள் மிகப்பெரிய அளவிலான மாறுதல்களை ஏற்படுத்துகிறது என்று உணருகிறோம். 2003க்குப்பிறகு கச்சா எண்ணெய் விலை உயர்ந்ததால் மேற்கத்திய நாடுகளின் உற்பத்தியிலும் இது போன்ற உயர்வு ஏற்பட்டது. அதில் பெரும்பான்மையானவை முதலில் கட்டுப்படியாகாத, மிகவும் கடுமையான உற்பத்தி நிலையங்களிலிருந்து, அதாவது எரிவாயு உற்பத்தி பாலைவனங்களிலிருந்து மற்றும் கனமான கச்சா எண்ணெய்கள் விளைநிலங்களிலிருந்துதான். இந்த புதிய எண்ணெய் வளங்களை பயன்படுத்துவதில் உயர் விலை மட்டுமல்லாமல் புதிய தொழில்நுட்பமும் பயன்பட்டதால் பாறை இடுக்குகளிலே சிக்கியிருந்த கனமான கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டு அமெரிக்காவின் உற்பத்தி அதிகரித்தது. 1970களிலிருந்து அமெரிக்காவின் எண்ணெய் உற்பத்தி குறைந்து 2008ஆம் ஆண்டில் 5 மில்லியன் பேரல்களுக்கு குறைந்தது. தற்போது அது 8½ மில்லியன் பேரல்களாக உள்ளது. இப்போது உள்ள கணக்கின்படி 2016ம் ஆண்டில் இது 9.5 மில்லியன் பேரல்களாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் பெரும்பான்மையான அளவு சாதாரணமாக கிடைக்குமிடங்களில் அல்லாதவை.

இன்று சந்தையில் கச்சா எண்ணெய் சப்ளை பெருமளவு இருப்பதற்கு காரணம் அமெரிக்காவின் இந்த உற்பத்தியோடு ஈராக் மீண்டும் உற்பத்தியை துவக்கியிருப்பதும், அங்கோலா போன்ற ஆப்ரிக்க நாடுகளில் உற்பத்தி அதிகரித்து இருப்பதும், சோவியத் யூனியனில் முன்பு இருந்த அளவிற்கு ரஷ்யாவின் கச்சா எண்ணெய் உற்பத்தி உயர்ந்திருப்பதும் காரணங்களாகும்.

எண்ணெய் விலை நிர்ணயிப்பது மிகவும் சிக்கலான விஷயம் என்பதும் ஒரு குறிப்பிட்ட அளவை மீறுவதால் பிரச்சினை வலுவாகும் என்பதால் சில ஆய்வாளர்கள் கருதுவது போல இந்த நிலைமைக்கு அரசியல் உள்நோக்கத்தை கற்பிக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட விலை நிலைமையை மீறி எண்ணெய் விலை உயர்ந்தோ குறைந்தோ மாறிக்கொண்டே இருந்தால் உற்பத்தி செயல்பாடுகளில் பெரும் விளைவுகள் ஏற்படும். இதில் உள்ள பெரும் முக்கியமான பிரச்சினை இந்த கனமான எண்ணெயை உற்பத்தி செய்வதுதான். சவுதி அரேபியாவில் உற்பத்தி செய்யப்படும் எண்ணெயின் விலை ஒரு பேரலுக்கு மூன்று டாலருக்கு அதிகமாக இருப்பதில்லை. ஆனால், பாறைகளின் இடுக்குகளில் சிக்கியிருக்கும் எண்ணெயை வெளிக் கொண்டு வருவது அல்லது பாலைவனத்திலுள்ள தார் மணல்களை உருக்கி எண்ணெய் உற்பத்தி செய்வதில் அதிகமான

அளவு வளங்களையும் எரிசக்தியையும் உபயோகப்படுத்த வேண்டியுள்ளது. ஆகவே எண்ணெய் விலை அதிகமாக குறைந்தால் இது போன்ற உற்பத்தியிலுள்ள எண்ணெய் நிறுவனங்கள் ஒரு பேரல் கச்சா எண்ணெய்யை ரூ.100க்கு உற்பத்தி செய்வதற்காக வாங்கிய பெரும் கடன் சுமையை ஈடுகட்ட முடியாமல் தங்களுடைய நிறுவனங்களை மூடவேண்டி இருக்கலாம்.

எரிசக்தி ஆலோசனை நிறுவனமான மெக்கின்சே கம்பனியின்படி அமெரிக்காவில் பெரும்பான்மையான நிலத்தடி எண்ணெய் உற்பத்தியாளர்கள் லாபத்தில் இயங்குவதற்கு ஒரு பேரலுக்கு ரூ. 75க்கு மிகுதியாக விலை தேவைப்படுகிறது. ரூ. 85க்கு கீழே விலை குறைந்தால் இந்நிறுவனங்கள் உற்பத்தியை குறைப்பதையோ அல்லது முழுமையாக நிறுத்திவிடுவதையோ செய்வார்கள். அமெரிக்கா பாதிக்கப்படுவதற்கு முன்பாக கனடாவின் கனரக கச்சா எண்ணெய் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவார்கள். கனடாவின் இந்த எண்ணெய் உற்பத்தி, உற்பத்தி செலவை மட்டும் சார்ந்தது அல்ல. அரேபிய நாடுகளில் உற்பத்தியாகும் கச்சா எண்ணெய் மற்ற இடங்களுக்கு எடுத்துச்செல்ல பேரலுக்கு மூன்று டாலர் செலவாகும். அதையே கனடாவிலிருந்து எடுத்துச்செல்ல 12 முதல் 15 டாலர்கள் தேவைப்படும்.

கனடாவின் உட்பகுதியில் நிலத்தில் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுவதால் அவற்றை கடலோரப்பகுதிகளுக்கும் ஏற்றுமதி மையங்களுக்கும் எடுத்துச்செல்ல வெகு தொலைவாகும். அது அல்லாமல் தார் மற்றும் அதைசார்ந்த பொருள்களிலிருந்து எடுக்கப்படும் கச்சா எண்ணெய் கனமாகவும் கெட்டியாகவும் இருப்பதால் அவற்றை பல ஆயிரம் மயில்களுக்கு குழாய்கள் மூலம் மெக்சிகோ வளைகுடாவிற்கு அல்லது அமெரிக்காவின் கிழக்கு கடலோரப்பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல மிகுந்த சிரமம் உள்ளது. ஏற்கனவே இந்த கச்சா எண்ணெய் தரமற்ற நிலையில் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. விலை சரியும் போது அல்லது உலக உற்பத்தி அதிகரிக்கும் போது கனடாவின் உற்பத்தியாளர்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படுகிறது.

1980களில், தன்னுடைய உற்பத்தி மொத்த திறனால் மற்றவர்களை அழிக்க முடியும் என்று சவுதி அரேபியா கூறி வந்தது. ஏனெனில் விலை மிகவும் சரிந்து மொத்த வருமானம் குறைந்த போதும் சவுதி அரேபியாவின் மொத்த உற்பத்தி இரட்டிப்பானதால் மொத்த வருவாய் இழப்பு ஏற்படவில்லை. எண்ணெய் சந்தைக்கும் மற்ற உற்பத்தியாளர்களுக்கும் இன்று சவுதி அரேபியா விடும் எச்சரிக்கை என்னவென்றால், தன்னுடைய எண்ணெய்தான் உலகளவில் அதிக விற்பனையாவதாகும், ஆகவே அவர்கள் மற்றவர்களைவிட கடைசியாகத்தான் பாதிக்கப் படுவார்கள் என்பதே. ஆகவே உலகச்சந்தையின் நிலை என்னவாக இருந்தாலும் சவுதி அரேபியா தன்னுடைய எண்ணெயைத்தான் விற்க முயலும்.

2003–2008 மற்றும் 2010–11ஆம் ஆண்டுகளில் முன்பு எப்போதும் இல்லாத அளவில் கச்சா எண்ணெயின் விலை உயர்ந்தபோது, கச்சா எண்ணெயின் விலை எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்ற விவாதம் எழுந்தது. இந்த காலகட்டத்தில் மிக அதிகப்படியான விலை உயர்வு எந்தவொரு பொருளாதார அடிப்படைத்தன்மையாலும் ஏற்படவில்லை என்று உணரப்பட்டது. அதற்கு மாறாக பங்குச்சந்தையின் முன் பேர வியாபாரத்தில் பதுக்கல்காரர்களினால் விலை உயர்ந்தது என்று கருதப்பட்டது. இதனால் உலகளவில் அரசியல்வாதிகள் பங்குச்சந்தை சார்ந்த முன்பேர வர்த்தகத்தை முறைப்படுத்த வேண்டும் என்று கூறினர்.

முன்பேர சந்தையில் விலை உயரும்போது தற்போதைய நடப்பு விலை உயரும் என்பது ஒரு கூற்றுதான். 2009ல் கௌஃப்மேன் மற்றும் உல்மான் ஆகியோர் மேற்கொண்ட ஆய்வில் பல ஆண்டுகளாக சந்தைசார்ந்த முன்பேர வர்த்தகத்தாலும், சூதாட்டத்தாலும் விலைகள் தொடர்ந்து உயருகின்றன என்று அறியப்பட்டது. 2010ல் ட்ரியுல்சி, டிஎக்ஸ்லிசியா மற்றும் பென்சிவெங்கா ஆகியோர் மேற்கொண்ட ஆய்வில் எண்ணெய் விலை சூதாட்டத்தாலும் டாலர் மற்றும் யூரோ நாணயங்களின் விலை ஏற்றத்தாழ்வுகளினாலும் எண்ணெய் விலைகள் மிகுந்த அளவில் ஏறி இறங்கி அதிர்ச்சி அளித்ததை பயனீட்டாளர்கள் உறுதி செய்துள்ளனர். 2008ல் ஸ்டீவன்ஸ் மற்றும் செஷன்ஸ் 2009ல் ஆச்சார்யா, ஆகியோரின் ஆய்வின்படி முன்பேர வர்த்தக விலைக்கும் தற்போதைய எண்ணெய் இருப்பிற்கும்

தொடர்பு உள்ளதாகவும், ஆகவே அன்றாட சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து காணப்படுகிறது என்றும் கூறியுள்ளனர். மேலும், முன்பேர வர்த்தக இழப்பை ஈடுகட்டும் நிதிகள் செயல்படும் விதத்திலும் மற்ற நிதிச்சந்தை நிலவரங்களாலும் முன்பேர ஒப்பந்தங்களுக்கும் தற்காலிக விலை நிலைமைகளுக்கும் மிகுந்த ஈடுபாடு இருப்பதாக கருதப்படுகிறது.

ஆனால், பெரும்பாலான ஆய்வுகளின்படி சந்தைசார் சூதாட்டத்தால் விலைகள் அதிகமாகவில்லை என்று அறியப்படுகிறது. 2011ல் அல்க்யூஸ்ட் மற்றும் ஜெர்வைஸ் ஆய்வின்படி எண்ணெய் விலையில் ஏற்படும் தீவிர மாற்றங்கள் உலகளாவிய பொருளாதார நிலைமையையும், எண்ணெய், கச்சா எண்ணெய் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை சார்ந்ததாகவும் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. 2012ல் லுட்ஸ் கில்லியன், பஸ்ஸாம் ஃபட்டௌ மற்றும் லாவன் மஹாதேவ் ஆகியோரின் ஆய்வின்படி முன்பேர வர்த்தக விலையும் தற்போதைய உடனடி விலையும், பொதுவான பொருளாதார அடிப்படைத் தன்மையை சார்ந்ததாகும் என்று வெளிப்படுகிறது. முன்பேர வர்த்தக மற்றும் நடப்பு எண்ணெய் விலைகள் ஒன்றாக இணைந்து செயல்படுவது பொதுவான பொருளாதார அடிப்படைத்தன்மைகளால்தான் என்பதற்கு வலிமையான ஆதாரங்கள் உள்ளன. 2005ஆம் ஆண்டுகளில் நடப்பு விலை மிக அதிக அளவு உயர்ந்ததற்கு காரணம் பொருளாதார அடிப்படைத்தன்மைகளையும் வேகமாக வளர்ந்துவரும் ஆசிய நாடுகளில் கச்சா எண்ணெய்களின் தேவைகளையும் பிரதிபலிப்பதாக இருந்தது.

எண்ணெய் விலையை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளான தேவையில் ஏற்படும் மாற்றங்கள், உற்பத்தியில் ஏற்படும் மாற்றங்கள், முன்பேர வர்த்தக விலைகள் நாணயங்களுக் கிடையேயான மாற்று விலைகள் மற்றும் சூதாட்டம் ஆகிய ஒவ்வொன்றும் தனித்தனியாக இயங்குவதாக எடுத்துக்கொள்ளாமல், ஒன்றாக சேர்ந்து இயங்குவதாகவும் ஒன்றை சார்ந்திருப்பதாகவும் உள்ளது.

1997–2011 இடையே ஏற்பட்ட கச்சா எண்ணெய் விலை மாற்றங்களை தேவை உற்பத்தி நிலைகளை வைத்து விளக்க இயலாது. இந்தக் கட்டுரை வேறு எந்தக் காரணங்களால் எண்ணெய் விலை உயர்வு ஏற்பட்டிருக்கலாம் என்பதை ஆராய்கிறது. இதுவரை ஆராயப்பட்ட விவரங்களிலிருந்து எண்ணெய் விலை உயர்வுக்கும் சூதாட்ட முன் பேர வியாபாரத்திற்கும் தொடர்பு இல்லை என்று தெரிகிறது. முன்பேர வியாபாரத்தில் பொருளை வாங்க விற்க நிதி நிலை ஆதாரம் கிடைக்கிறது, உண்மையான நிலையை கண்டறியவும் உதவுகிறது. ஆனால், இதனால் விலைகள் உயருகின்றன என்பதை உறுதி செய்யமுடியவில்லை. ஆகவே 1991 2011ஆம் ஆண்டுகளுக்கிடையே ஏற்பட்ட எண்ணெய் விலை மாற்றங்கள் தேவை உற்பத்தி நிலைமைகளை சார்ந்ததே என்று கூற வேண்டும்.

இந்தியாவில் காணப்படுகின்ற கச்சா எண்ணெய் விலை நிலைகள் உலகச்சந்தையையே சார்ந்துள்ளது. ஏனெனில் இந்தியா தற்போது போட்டி சந்தையை சார்ந்து செயல்பட்டு வருகிறது. ஆகவே, உலகச்சந்தையில் காணப்படும் அனைத்து நிகழ்வுகளும் இந்தியாவில் கச்சா எண்ணெயின் விலையை பாதிக்கிறது. ஆனாலும், இந்தியாவில் கச்சா எண்ணெயின் விலை அது நமக்கு எங்கிருந்து எவ்வளவு கிடைக்கிறது என்பதை அதிகமாக பொருத்துள்ளது. ஏனெனில் ஒரு நாட்டிலிருந்து கிடைக்கவில்லை என்றால் மற்ற நாடுகளை நாட வேண்டியுள்ளது. அது மட்டுமல்லாமல், இந்திய அரசின் கொள்கைகளும் சர்வதேச அரசியல் உறவுகளும் இந்தியாவின் எண்ணெய் விலைகளை நிர்ணயிக்கின்றன. சமீபத்தில் எண்ணெய் வள அமைச்சகத்தில் ஏற்பட்ட உளவுசார் குற்றங்களை பார்க்கும் போது சூதாட்டமும் எண்ணெய் விலைகளை நிர்ணயிக்கின்றன என்பது புரிகிறது. ஆகவே, 2015 மத்திய அரசின் பட்ஜெட்டில் எண்ணெய் துறையை பற்றி முடிவு செய்யும் போது இந்தியாவின் மொத்த வளர்ச்சியை மனதில் கொண்டு அதற்கு தேவையான கச்சா எண்ணெயை உறுதி செய்து அதற்கு தகுந்த முடிவுகளை எடுக்கவேண்டும். இந்த ஆய்வில் அறியப்படுவது போல, மேற்கண்ட காலகட்டங்களில் எண்ணெய் சந்தை சிறப்பாக செயல்படவில்லை என்பது புரிகிறது. அது மட்டுமல்லாமல் பல சந்தை நிகழ்வுகளான சூதாட்டம், மிகுதியான வியாபாரம், கச்சா எண்ணெய் விலையில் அடிக்கடி மாற்றங்கள் ஆகியவை, இந்த எண்ணெய் சந்தை ஒரு சூதாட்ட சூழ்நிலையில் சிக்கியிருப்பதை உணர்த்துகிறது. ●

# பட்ஜெட் 2015–2016 சமூகப் பரிமாணம்

– மணீஷ் கோவில்

2015–16ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் இராணுவப் பாதுகாப்பு, உள்நாட்டு பாதுகாப்பு ஆகிய செலவினங்களுக்கு அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டு இருப்பது போன்றே சமூக மற்றும் நலவாழ்வுத் தேவைகளுக்கும் அதிக அளவு நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது. சமூக நலத் திட்டங்களுக்கான கருத்துக்கள் ஏற்கனவே விரிவாக பிரச்சார முகாம்கள் மூலம் நிர்ணயிக்கப்பட்டு விட்டன. வங்கிச் சேவையில் அனைவரையும் இணைத்தல் செயலுக்கான ஜன்தான் யோஜனா, சுத்தம் மற்றும் சுத்திகரிப்புக்கான ஸ்வச்சிய பாரத், வளர்ச்சிக்காக இந்தியாவில் தயாரியுங்கள் போன்ற முதன்மைத் திட்டங்கள் மூலம் அரசு ஏற்கனவே சமூக நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தி விட்டது. இந்த எல்லாத் திட்டங்களும் பட்ஜெட்டில் முறைப்படி குறிப்பிடப்பட்டு உள்ளன. சமூக மற்றும் நலவாழ்வை மேம்படுத்தும் வாய்ப்பு மிக அதிகமாகவே உள்ள்து. சமூக மற்றும் நல்வாழ்வு நடவடிக்கைகளுக்கான கவனமும் நிறைவேற்றும் ஆர்வமும் நிதியமைச்சர் தமது பட்ஜெட் உரையில் இவற்றைப் பற்றிக் குறிப்பிட்டபோது தெளிவாகப் புலப்பட்டது.

"சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி அறிகுறிகளைப் பொறுத்த வரையில் கடந்த 70 ஆண்டுகளாக நாம் சதவீதம் மற்றும் பயனாளிகள் எண்ணிக்கை என்ற அளவீடுகளிலேயே செயல்பட்டு வந்துள்ளோம். சிறிது சிறிதான மாற்றங்கள் நம்மை எங்கும் கொண்டு சென்று சேர்க்காது என்பது வெளிப்படையான உண்மை. இதற்குப் பதிலாக பெருமளவில் தாண்டிச் செல்லுதல் என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் நாம் சிந்தித்தாக வேண்டும்".

திருத்தப்பட்ட மதிப்பீடுகளுக்கு மேலாக பொது முதலீட்டில் 1.25 லட்சம் கோடியாக திட்டமிடப்பட்டு உள்ளது என்ற உண்மை அதனை மேலும் வலியுறுத்திக் காட்டுகின்றது. 3% பற்றாக்குறை என்ற இலக்கு அடுத்த மூன்றாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டு உள்ளது. 2015–16ஆம் ஆண்டுக்கு 3.9%, 2016–17ஆம் ஆண்டுக்கு 3.5% மற்றும் 2017–18ஆம் ஆண்டுக்கு 3.0% என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடைய எஃப்.ஆர்.பி.எம் சட்டத்தில் திருத்தம் செய்தாக வேண்டும். சமூகத் துறைகளின் முக்கிய பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க பட்ஜெட் நடவடிக்கைகள் இனி கீழே தரப்பட்டு விவாதிக்கப்படுகின்றன.

### விவசாயம் மற்றும் பண்ணைப் பிரிவு

மக்கள்தொகையில் பெரும்பகுதியினர் ஊரகப் பகுதிகளில் வசித்து வருகின்றனர். இவர்கள் விவசாயம் மற்றும் பண்ணை வருமானத்தைச் சார்ந்தே உள்ளனர். இந்த பட்ஜெட்டில் பேசப்பட்டுள்ள இரண்டு முக்கிய பிரச்சனைகள் என்னவென்றால் மண் மற்றும் நீர் ஆகியவைதான். நெடுங்காலம் நீடித்து இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் மண் வளத்தை மேம்படுத்துவதற்காக மண் வளஅட்டைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இது "பரம்பரகத் கிருஷி விகாஸ் யோஜனா" திட்டத்துக்கு உதவியாக இருக்கும். இதே போன்று நீருக்காக" பிரதான் மந்திரி கிராம் சின்சாய் யோஜனா" திட்டமிடப்பட்டு உள்ளது. ஒவ்வொரு விவசாயினுடைய நிலத்துக்கும் நீர்ப்பாசனம் என்பது இதன் நோக்கமாகும். "ஒரு துளி நீர் பலப்பல தானியம்" என்ற உட்கருத்துடன் நீரின் பயன்பாட்டை திறம்பட சிக்கனமாகப் பயன்படுத்துவதும் இதன் மற்றொரு நோக்கமாகும். சொட்டுநீர்ப் பாசனம், நீர்த்தேக்க மேம்பாடு மற்றும் பிரதான் மந்திரி கிராம் சின்சாய் திட்டம் ஆகியவற்றுக்காக பட்ஜெட்டில் ரூ.5,300 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது.

**விவசாயிகளுக்கு நிதி ஆதாரம் கிடைப்பதற்காக பின்வரும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு உள்ளன:**

1. நபார்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள "ஊரக உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியத்துக்கு 2015–16ல் ரூ.25,000 கோடி

2. நீண்டகால ஊரகக் கடன் நிதியத்துக்கு ரூ.15,000 கோடி

3. குறுகிய கால கூட்டுறவு கிராம கடன் மறுநிதி நிதியத்துக்கு ரூ.45,000 கோடி

4. குறுகிய கால ஆர்.ஆர்.பி மறுநிதி நிதியத்துக்கு ரூ.15,000 கோடி

இவை எல்லாம் விவசாயத்திற்கு கடன் பெறுவதில் உள்ள சிக்கல்களைத் தீர்த்தது எளிதாக்க உதவும். குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறுவார்கள். 2015 16ஆம் ஆண்டில் வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்கு ரூ.8.5 லட்சம் கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதற்கு பிரதம மந்திரியின் மக்கள் நிதித்திட்டம் (ஜன் தன் யோஜனா) மூலமாக வங்கிச் சேவையில் அனைவரையும் இணைத்தல் என்பது உதவிகரமாக இருக்கும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புக்கு உதவும் வகையில் ரூ.34.699 கோடி தொடக்கநிலை ஒதுக்கீடாக செய்யப்பட்டு உள்ளது. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில் மாநில அரசுகளுக்கு மிக முக்கியமான பங்கு உள்ளது. அதிலும் குறிப்பாக மேற்கொள்ளப்படும் பணிகளின் தரத்தை மேம்படுத்துவதிலும் சமூகத் தணிக்கை போன்ற திறன்மிக்க வழிமுறைகள் மூலம் நிதியைச் சரியாகப் பயன்படுத்துவதிலும் மாநில அரசுகளுக்கு பெரும்பங்கு இருக்கின்றது.

தங்களது உற்பத்திக்கு மிகச்சிறந்த விலையை தேசிய அளவில் பெறுவதற்கு விவசாயிகளுக்கு என்.ஐ.டி.ஐ மூலம் உதவுவதற்கு ஒருங்கிணைந்த தேசிய வேளாண் சந்தை உருவாக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது. இன்றைக்கு நெருக்கடியில் இருக்கின்ற விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கான மிக முக்கிய நடவடிக்கையாக இது இருக்கும். போதுமான விலை உயர்வுப் பலன்கள் கிடைக்கவும் உள்ளூர் வர்த்தகர்களின் பிடியில் இருந்து விவசாயிகளை விடுவிக்கவும் இந்தத் திட்டம் உதவியாக இருக்கும்.

ஒருங்கிணைக்கப்படாத பிரிவினர், விளிம்புநிலை வியாபாரிகள் முதலானோருக்கு தொழில்முனைவு ஆதரவை மேம்படுத்துதல்

முறைசார் தொழில்பிரிவு அதிகபட்ச வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றது. தற்போது உள்ள 5.77 கோடி சிறு வர்த்தக யூனிட்டுகளில் 62% யூனிட்டுக்கள் தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் / இதர பிற்படுத்தப்பட்டோருக்குச் சொந்தமாக உள்ளன. பிரதான் மந்திரி முத்ரா யோஜனாவில் வளர்ச்சியில் அனைவரையும் உள்ளடக்கும் நோக்கத்தில் கடன் வழங்குவதில் முன்னுரிமை எஸ்.சி / எஸ்.டி பிரிவினர் நடத்தும் தொழில்களுக்கு கொடுக்கப்படுகின்றது. மேலும் குறுதொழில் பிரிவு வளர்ச்சி மறுநிதி ஏஜென்சி (முத்ரா) வங்கி ஒன்றை உருவாக்க முன்மொழியப்பட்டு உள்ளது. ரூ.20,000 கோடி தொடக்கநிலை முதலீட்டுடன் ரூ3,000 கோடி கடன் உத்திரவாதத்துடன் இது ஆரம்பிக்கப்பட உள்ளது. இந்த வங்கி நுண் நிதி (மைக்ரோஃபைனான்ஸ்) நிறுவனங்களுக்கு மறுநிதி வழங்கும். இந்தச் செயலானது தொழில்முனைவை மேம்படுத்துவதோடு திறன்பெற்ற அல்லது ஓரளவு திறன்பெற்ற பணியாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரும்.

இந்தப் பிரிவில் பிற முக்கியமான நடவடிக்கைகள் என்னவென்றால், எம்.எஸ்.எம்.இ பிரிவில் குறிப்பிடத்தக்க அளவு பணப்புழக்கம் அதிகரிப்பதற்காக ட்ரேட் ரிசீவப்ளஸ் டிஸ்கவுன்ட்டிங் சிஸ்டம் ஒன்றை மின்னணு வடிவில் நிறுவ இருப்பதைக் குறிப்பிடலாம். சட்டரீதியான நிச்சயத்தன்மையையும் வேகத்தையும் வழங்கக் கூடிய வங்கித் திவால் சட்ட சீர்திருத்தம் என்பது வர்த்தகம் மேற்கொள்ளுதலில் எளிமையை அதிகப்படுத்தும் முக்கியமான நடவடிக்கை என அடையாளம் காணப்பட்டு உள்ளது. 2015–16ல் வங்கித் திவால் நெறிமுறைகள் இதற்காக உருவாக்கப்படுகின்றன.

முறைசார் நிதியமைப்புகளோடு பொதுமக்கள் தொடர்பு கொள்வதை அதிகப்படுத்த நடவடிக்கைகளை பட்ஜெட் முன்மொழிந்துள்ளது. இதற்காக கிராமங்களில் உள்ள 1,54,000 சேவை இடங்களோடு பரந்து விரிந்துள்ள அஞ்சலக வலைப்பின்னல் முடுக்கி விடப்படுகின்றது. பட்டுவாடாக்களுக்கான உரிமத்தை அஞ்சல்துறை பெற்றாக வேண்டும். இந்த நடவடிக்கையானது பிரதம மந்திரி மக்கள்

நிதித் திட்டத்துக்கு மிகப்பெரிய பங்களிப்பைச் செய்யும். இதன்மூலம் சிறப்பான சமூக மதிப்பு ஏற்படும்.

எஸ்.இ.டி.யூ (சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயன்பாடு) என்று அழைக்கப்படும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. வர்த்தகத்தைத் தொடங்குவதில் அனைத்து அம்சங்களிலும் குறிப்பாக தொழில்நுட்பம் சார்ந்த தொழில்கள் உட்பட சுய வேலைவாய்ப்புக்கும் உதவும் வகையில் இந்த எஸ்.இ.டி.யூ இருக்கும். இது தொழில்நுட்பநிதி, தொடக்க நிலை மற்றும் ஊக்குவிப்பு நிலை சார்ந்த திட்டமாக இருக்கும். இந்த நோக்கத்துக்காக தொடக்க நிலையில் எஸ்.ஐ.டி.ஐ ஆயோக் மூலம் ரூ.1,000 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது.

குறிப்பாக ஏழைகள் மற்றும் வசதி குறைவானவர்களுக்கான ”அனைவருக்கும் சமூகக் காப்புறுதி”யை உருவாக்குதல் அவசியமாகும்.

சுகாதாரம், விபத்து அல்லது ஆயுள்காப்பீடு என எந்தவிதமான காப்பீடுகளும் இல்லாமல்தான் இந்திய மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் இருக்கின்றனர். பிரதம மந்திரி சுரக்ஷா பீமயோஜனா என்ற திட்டம் ஆண்டுக்கு வெறும் 2 ரூபாய் பிரீமியம் செலுத்துவதன் மூலம் விபத்துக்கால இறப்பு காப்பீடு ரூ.2 லட்சம் தருகின்றது. அதேபோன்று தொடங்கப்பட உள்ள மற்றொரு திட்டம் அடல் ஓய்வூதியத் திட்டமாகும். பங்களிப்புக்கு ஏற்பவும் காலவரையறைக்கு ஏற்பவும் ஓய்வூதியத்தை இத்திட்டம் வழங்கும். பயனாளி செலுத்தும் பிரீமியத்தில் 50 சதவிகிதத்தை அரசே செலுத்தும். ஆனால் இத்தொகை ஓராண்டுக்கு ரூ.1,000த்திற்கு அதிகமாகாமல் இருக்கும். ஐந்து ஆண்டுகளுக்கு அரசு இவ்வாறு பிரீமியம் செலுத்தும். இச்சலுகை 31 டிசம்பர் 2015க்கு முன்பு தொடங்கப்படும் புதிய கணக்குகளுக்குதான் செல்லுபடியாகும்.

பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா என்பது மற்றுமொரு திட்டமாகும். இதில் இயற்கையான மரணம் மற்றும் விபத்து மரணம் என இரண்டும் அடங்கும். இதற்கு காப்பீடு ரூ.2 லட்சமாக இருக்கும். 18–50 வயதுப் பிரிவினருக்கு பிரீமியம் ஆண்டுக்கு ரூ.330 ஆகும். ஒரு நாளைக்கு பிரீமியம் ஒரு ரூபாய்க்கு குறைவாகவே இருக்கும். வருங்கால வைப்பு நிதித் தொகையில் கோரப்படாமல் உள்ள டெபாசிட் தொகையான ரூ.3,000 கோடியைக் கொண்டும் இ.பி.எஃப் தொகுப்பு நிதி ரூ.6,000 கோடியைக் கொண்டும் மூத்த குடிமக்கள் நல்வாழ்வு நிதியம் உருவாக்கும் திட்டமும் உள்ளது.

மிகவும் பின்தங்கிய குழுவினரான அகவை முதிர்ந்தவர்களுக்கான ஓய்வூதியம் பெறுபவர்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளோர் என்ற அட்டை வைத்திருப்பவர்கள், விளிம்பு நிலை விவசாயிகள் போன்றோருக்கு பிரீமியத்தில் சலுகை வழங்கும் வகையில் இத்திட்டம் இருக்கும். இதேபோன்று வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மூத்த குடிமக்களுக்கு உடலியக்க உதவி உபகரணங்கள் மற்றும் உயிர்காப்பு உதவி கருவிகள் வழங்கும் புதிய திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டு வருகின்றது. முறையான பள்ளிக் கல்வி வரையிலான சான்றிதழ் இல்லாத சிறுபான்மை .இளைஞர்களுக்கு கல்வி மற்றும் வாழ்வாதாரம் இரண்டும் ஒருங்கிணைந்த வகையில் வழங்கும் ”நய் மன்சில்” என்ற திட்டம் தொடங்கப்பட உள்ளது. இதன் மூலம் கல்விச் சான்றிதழ் பெறுவதோடு நல்ல வேலை கிடைப்பதற்கான வாய்ப்பும் கிடைக்கும்.

மத்திய நிதி ஒதுக்கீடுகளில் பல தீவிரமான தடைகள் இருந்தபோதிலும் இந்த ஆண்டு அவர்களுக்கு கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

தாழ்த்தப்பட்டோர் : ரூ.30,851 கோடி

பழங்குடியினர் : ரூ.19,980 கோடி

பெண்கள் : ரூ. 79,258 கோடி

பெண்களுக்கான பாதுகாப்பு, ஆதரவு திரட்டுதல், விழிப்புணர்வு ஆகியவற்றுக்காக நிர்பயா நிதியத்துக்கு ரூ.1,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏழைகள், முன்னுரிமை இல்லாதவர்கள், பாதிக்கப்பட்டோர் ஆகிய பிரிவினர்களின் தேவைகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த சமூக பாதுகாப்பு திட்டங்கள் மக்கள் நிதித்திட்டத்தின் (ஜன் தன்) அடித்தளத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் எந்த ஒரு இந்தியக் குடிமகனும் தனது தள்ளாத வயதில் நோய், விபத்து, பட்டினி

பற்றி கவலைப்படத் தேவையில்லை. ஆனால் பலன்களை விநியோகிக்கும் வழிமுறையும் மாநில அரசுகளின் சம்பந்தப்பட்ட பங்கும் ஒன்றேபோல் இருந்தாக வேண்டும். அப்போதுதான் இந்தத் திட்டங்கள் திறம்பட நடைமுறைப்படுத்தப்படும்.

**உள்கட்டமைப்பு வசதிகள்**

சாலைகள் மற்றும் ரெயில்வே ஆகிய இரண்டு துறைகளுக்கும் ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சாலைகளுக்கு ரூ.14,031 கோடியும் ரெயில்வேக்கான ஒட்டுமொத்த பட்ஜெட் ஆதரவுக்கான தொகை ரூ.10,050 கோடியும் ஆகும். உள்கட்டமைப்பு வசதிகள் மீது அரசு கொண்டுள்ள கவனம் இந்த அதிகப்படியான ஒதுக்கீடு மூலம் தெளிவாகின்றது. வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக இருப்பது உள்கட்டமைப்பு வசதிதான். பொதுத்துறை யூனிட்டுகளின் கேபக்ஸ் ரூ.3,17,889 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது 2014–15 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளை விட தோராயமாக ரூ.80,844 கோடி அதிகமாகும். உள்கட்டமைப்பு வசதிகளில் முதலீடு என்பது 2015–16ல் ரூ.70,000 கோடியாக இருக்கும். இது 2014–15ஆம் ஆண்டைவிட அதிகமாகும். அரசு தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியம் (என்.ஐ.ஐ.எஃப்) ஒன்றை நிறுவ உத்தேசித்து உள்ளது. ரெயில்வே, சாலை, நீர்ப்பாசனத் துறைகளின் திட்டங்களுக்காக வரி இல்லாத உள்கட்டமைப்பு பத்திரங்களை வெளியிட அனுமதியும் வழங்கப்பட்டு உள்ளது. உள்கட்டமைப்பை பி.பி.பி முறையில் அபிவிருத்தி செய்தல் என்பது புதுப்பிக்கப்படும். இது முதலீட்டைப் பெருக்கவும் வேலைவாய்ப்பை உருவாக்கவும் செய்யும்.

அடல் புத்தாக்க இயக்கம் (ஏ.ஐ.எம்) நிறுவுதல் என்பது என்.ஐ.டி.ஐயின் புத்தாக்க மேம்பாட்டு அடித்தளத்தை பயன்படுத்தி கல்வியாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் ஆய்வாளர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட இருக்கின்றது. இந்தியாவில் புத்தாக்க கலாச்சாரத்தை உருவாக்குதல், ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சியை மேம்படுத்துதல் ஆகியவற்றில் தேசிய மற்றும் சர்வதேச அனுபவங்களில் இருந்து பாடங்கள் எடுத்துக் கொள்ளப்படும். இந்த அடித்தளமானது உலகத் தரம் வாய்ந்த புத்தாக்க மையங்கள் மற்றும் இந்தியாவுக்கான மாபெரும் சவால்களுக்கான வலைப்பின்னலாக இருக்கும். இந்த நோக்கத்துக்காக ரூ.150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**நிதிச் சந்தைகள்**

முறையாகச் செயல்படும் மூலதனச் சந்தைக்கு முறையான நுகர்வோர் பாதுகாப்பு தேவைப்படுகின்றது. துறை சார்பு இல்லாத நிதி குறை தீர்ப்பு ஏஜென்சி ஒன்றை அனைத்து விதமான நிதிச் சேவைகளையும் வழங்குபவர்களுக்கு எதிரான புகார்களை விசாரிப்பதற்காக அமைப்பதை பட்ஜெட் முன்வைத்துள்ளது. இந்திய நிதிச் சட்டம் (ஐ.எஃப்.சி) என்பதை அறிமுகப்படுத்தவும் கவனம் செலுத்தப்படுகின்றது. நிதிசார் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பொறுத்து தவறான வழிகாட்டுதல் மற்றும் தவறான விற்பனை ஆகியவற்றில் இருந்து நுகர்வோரைப் பாதுகாக்க இது உதவும்.

**வரி விதிப்பு**

இந்த ஆண்டுக்கான பட்ஜெட் நேரடி வரிவிதிப்பு தொகுப்பை மையப்படுத்தி உள்ளது. வரி விகிதங்கள் சர்வதேச அளவில் போட்டிக்குரிய விகிதங்களாக உள்ளன. சலுகைகள் ஏதும் இல்லை. சேமிப்புக்கு ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இடைநிலைகளில் இருந்து வரி வசூலிப்பு இல்லை. ஜி.எஸ்.டிஐ மையப்படுத்துவதன் மூலம் நவீன்படுத்தப்படும் மறைமுக வரித் தொகுப்புக்கு இணையாக இது உள்ளது. சேவை வரி தற்போதைய 12.36 சதவிகிதத்தில் இருந்து 14 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு உள்ளது. இது ஜி.எஸ்.டிஉடன் ஒருங்கிணைக்கப்பட்டு விதிக்கப்படும். இது 2016–17ஆம் ஆண்டில் இருந்து அமலுக்கு வரும்.

வரிவிதிப்பைச் சீரமைத்தல் மற்றும் ஜி.எஸ்.டிஉடன் ஒருங்கிணைத்தல் போன்ற செயல்பாடுகள் மறைமுக வரிவிதிப்பு பல தடவை விதிக்கப்படும் பாதிப்பைக் குறைக்கின்றது. இவ்வாறு குறைக்காவிட்டால் இறுதியில் நுகர்வோரை விலை உயர்வு என்ற நடவடிக்கை பாதிப்புக்கு உள்ளாக்கும். வரிவிதிப்பைச் சீரமைப்பதன் மூலம் விலை குறைப்பை அரசு உறுதி செய்தால் இது உதவிகரமானதாக இருக்கும். இந்தப் பயன்

நுகர்வோர் வரை சென்றடையும். விலைகளை நவீனப்படுத்துவதால் பெரும் அளவில் சமூகத் தாக்கம் ஏற்படும்.

மாதச் சம்பளம் குறிப்பிட்ட அளவு வரை உள்ள ஊழியர்களுக்கு உதவும் வகையில் இ.பி.எஃப், இ.எஸ்.ஐ மற்றும் என்.பி.எஸ் ஆகியவற்றில் மாற்றங்கள் முன் மொழியப்பட்டுள்ளன. இந்த வருமான வரம்பு தற்போது ஒரு மாதத்திற்கு ரூ.15,000 என உள்ளது. இந்த வருமான வரம்புக்குள் உள்ள ஊழியர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உறுப்பினராக இருப்பதோடு வீட்டுக்கு எடுத்துச் செல்லும் ஊதியம் கணிசமானதாக இருக்கவும் இந்த மாற்றங்கள் வழிவகை செய்யும்.

சி.எஸ்.ஆர் தவிர தூய்மை இந்தியாவுக்கு அளிக்கப்படும் நன்கொடைக்கு 100% வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. பசுமை இந்தியா, சுற்றுலா வளர்ச்சி, ஐ.ஐ.டி, ஏ.ஐ.ஐ.எம் மற்றும் பிற கல்வி நிறுவனங்களை பல்வேறு மாநிலங்களில் திறத்தல் போன்ற பட்ஜெட்டின் பிற முன்மொழிவுகள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் மற்றும் இதர சமூகக் காரணிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன. உள்ளார்ந்த மடை மாற்றம் இருந்தாலும்கூட வேலைவாய்ப்பை உருவாக்குதல், வறுமை நீக்குதல், உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் ஒட்டுமொத்த சூழல் பாதிக்கப்படாது. பொருளாதார வளர்ச்சியில் மாநிலங்களும் பங்குதாரர்களாக இருக்குமாறு செய்யப்பட்டுள்ளன. பயனாளிகளுக்கு நேரடி பலன் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் பலன்கள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் மானியங்கள் சீரமைக்கப்படுகின்றன.

கல்வி உதவித் தொகைகளைப் பொறுத்த அளவில், பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. தற்போதைய உதவித் தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 1 கோடி என்பது 10.3 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று 13.5 கோடி சமையல் எரிவாயு வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக எரிவாயு சிலிண்டர் மானியமாக ரூ.6,335 கோடி மாற்றித் தரப்பட்டுள்ளது. உண்மையான பயனாளிகளுக்கு பலன்கள் சிந்தாமல் சிதறாமல் திறம்பட போய்ச் சேருவதை இது உறுதி செய்கிறது. எனினும் இத்திட்டத்தின் திறன்மிக்க நடைமுறையாக்கல் என்பது மாநில அரசுகளின் பங்கேற்பைப் பொறுத்தே அமையும்.

திறன்களை மேம்படுத்துவதற்கும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. அனைத்து ஏழை மற்றும் மத்தியதர வர்க்க மாணவர்கள் தங்கள் விருப்பத்துக்கேற்றவாறு உயர் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான மாணவர் நிதி உதவி ஆணையம் அமைக்கப்படுகின்றது. இது உதவித்தொகைகளை வழங்குதல், கண்காணித்தல் ஆகிய செயல்களை மேற்கொள்வதோடு, பிரதம மந்திரி வித்யாலட்சுமி கார்யகிரன் மூலமான கல்விக் கடன் திட்டங்களையும் கண்காணிக்கும். திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சகத்தின் மூலமாக தேசிய திறன்கள் இயக்கம் தொடங்கப்பட உள்ளது. இது "இந்தியாவில் தயாரியுங்கள்" என்ற கருத்தாக்கத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டதாக இருக்கும். பொருளாதார மற்றும் சமூக உயர்வுக்கு முக்கிய உந்துதல் சக்தியாக இது இருக்கும். கூடுதல் மூலவள ஆதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் மாநிலங்களுக்கு சுயாட்சி ஆகிய கருத்தாக்கங்களுடன் கூட்டுறவு ஐக்கிய முறை, பிரதம மந்திரியின் "டீம் இந்தியா" ஆகியன பட்ஜெட்டின் சமூக பலன்களை விநியோகிப்பதில் குறிப்பிடத்தக்க பங்காற்றும்.●

## பட்ஜெட் 2015 - 2016 தொழிலாளர் வைப்பு நிதி பயனாளிகளுக்கு வாய்ப்பு

**தொழிலாளர் வைப்பு நிதியை பொருத்தவரை மத்திய நிதி அமைச்சர் திரு.அருண் ஜெட்லி தொழிலாளர்களுக்கு இரண்டு வாய்ப்புகள் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். இதன்படி, முதலாவதாக தொழிலாளர்கள் வைப்பு நிதியோ அல்லது புதிய ஓய்வுதிய திட்டத்தையோ தேர்ந்தெடுக்கலாம். இரண்டாவதாக, மாத வருவாய் குறைவாக உள்ள தொழிலாளர்கள், தொழிலாளர் வைப்பு நிதியில் பணம் செலுத்துவது அவருடைய விருப்பமாகும். இவர்களை பாதிக்காத வகையிலும், அல்லது தொழில் அதிபர் இந்த நிதிக்கு செலுத்தும் தொகையை குறைக்காத நிலையில் தேர்ந்தெடுத்து கொள்ளலாம். இந்திய தொழிலாளர் ஈட்டுறுதி கழகத்தை பொறுத்த வரையில் இதில் தொழிலாளர்கள், தொழிலாளர் ஈட்டுறுதி காப்பீட்டில் பணம் செலுத்தவோ அல்லது தங்களுக்கு ஏற்ற சுகாதார காப்பீட்டு திட்டங்களைத் தேர்ந்தெடுத்து பணம் செலுத்துவதற்கு காப்பீடு ஒழுங்குமுறை மேம்பாட்டு ஆணையம் அங்கீகரித்துள்ளது.**

# விவசாயத்துறை வளர்ச்சி மாநிலங்களின் பொறுப்பில்

– புவன் பாஸ்கர்

2015–16க்கான பட்ஜெட்டை மத்திய நிதியமைச்சர் மக்களவையில் அளித்தபோது தனியார்களுடைய எதிர்பார்ப்புகள் தவிர, நிறுவனங்கள், வல்லுனர்கள், பொருளாதார நிபுணர்கள் ஆகியவர்களின் எதிர்பார்ப்பு களையும் எதிர்நோக்கியிருந்தார். இந்திய பொருளாதாரத்தில் ஒரு புதிய யுகத்தை படைக்க இது ஒரு வாய்ப்பாக கருதப்பட்டது. குறிப்பாக 2014–15க்கான பொருளாதார ஆய்வு அறிக்கையில் இந்த ஆண்டின் வளர்ச்சி விகிதம் 8.5 சதவிகிதம் உயர்ந்து விரைவில் 10 சதவிகிதத்தைக்கூட எட்ட வாய்ப்புள்ளது என்று கூறியபோது, விவசாயத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. தற்போது 1.1 சதவிகித வளர்ச்சியாக உள்ள விவசாயத்துறை (ஆய்வு அறிக்கையின்படி) இந்த 10 சதவிகித வளர்ச்சியை அடைவதற்கு குந்தகமாக உள்ளது. ஆனால், பட்ஜெட் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு எல்லா விவரங்களும் தெரிந்தபின், விவசாயத்துறை புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

2015–16ல் விவசாயத்துறைக்கான ஆதரவை நிதியமைச்சர் 2014–15க்கான மறுமதிப்பீட்டின் அளவைவிட 14.3 சதவிகிதம் குறைத்து விட்டார். 2014–15ல் ரூ.31,322 கோடியாக இருந்தது. 2015 16ல் ரூ.28,050 கோடியாக குறைந்துள்ளது. மத்திய விவசாய அமைச்சகத்தின் ஆண்டு ஒதுக்கீட்டில் பெரும் பகுதி அதன் முக்கிய திட்டமான தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்திற்கு செலவிடப்படுகிறது. இந்த ஆண்டு இதற்கான ஒதுக்கீடு 2014–15ன் மறுமதிப்பீட்டில் ரூ.8,444 கோடியிலிருந்து பாதி குறைந்து ரூ.4,500 கோடியாக இருந்தது. பருப்புகள், எண்ணெய் வித்துக்கள், கோதுமை மற்றும் அரிசி உற்பத்தியை மேம்படுத்த உருவாக்கப்பட்ட தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்திற்கான ஒதுக்கீடு 2015–16ல் ரூ.530கோடி வரை குறைக்கப்பட்டுள்ளது. 2014–15ன் பட்ஜெட் ஒதுக்கீட்டை விட இது ரூ.630 கோடி குறைவானதாகும். இந்தத்துறையில் கணிசமான அதிக ஒதுக்கீடு பெற்ற ஒரே திட்டமாக பிரதம மந்திரியின் விவசாய பாசன திட்டத்திற்கு சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ.1000 கோடியை ஒப்பிடுகையில் 2015–16ல் ரூ.1800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மற்ற நீர்ப்பாசன திட்டங்களுக்கு 2015–16ல் ரூ.3500 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில் குறு நீர்ப்பாசனம், நீர் ஆதார மேம்பாடு மற்றும் பிரதம மந்திரியின் விவசாய நீர்ப்பாசன திட்டம் ஆகிய எல்லாவற்றிற்குமாக சேர்த்து ரூ.5300 கோடியே ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டின் பட்ஜெட் ஒதுக்கீட்டைவிட ரூ.322 கோடி குறைவானதே.

ஆகவே 10 சதவிகிதத்திற்கு மேலான வளர்ச்சியை அடைய நினைக்கும் நிதியமைச்சர் எதற்காக விவசாயத்துறைக்கான ஒதுக்கீட்டை குறைத்தார்? அவருடைய வார்த்தைகளில்: "மாநிலங்கள் பெருமளவு இந்தத்துறையில் ஈடுபடவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்". என்று நிதியமைச்சர் பலமுறை கூறியுள்ளது என்னவென்றால் பதினான்காவது நிதிக்கமிஷ னின் பரிந்துரைகளின்படி மாநிலங்களுக்கு ரூ.1,76,00,000 கோடி மத்திய நிதி ஒதுக்கப்பட்டபின் மத்திய அரசிற்கு நிதி ஆதாரம் குறைவாகவே உள்ளது என்பதுதான்.

நியாயம்தான். ஆனால் மாநிலங்கள் எந்த வகையில் விவசாயத்துறைக்கு ஆதரவளிக்கவேண்டும் என்று குறிப்பிட்ட பரிந்துரை எதுவும் அளிக்கப்படவில்லை. மாநில அரசுகள் ஏற்கனவே விவசாயத்துறைக்கு அதிக செலவு செய்யாத நிலையில் நிதியமைச்சரின் எதிர்பார்ப்பு உயர்ந்த அளவு இருந்தாலும் செயல்படுத்தக்கூடிய திட்டங்கள் எதுவும் இல்லை. உதாரணமாக கிராமப்புற கடன் வசதிக்கு குறியீட்டளவு உயர்த்தப்பட்டிருந்தாலும், மத்திய அரசு திட்டங்களான தேசிய விவசாய வளர்ச்சி திட்டம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் ஆகியவற்றிற்கான மத்திய அரசின் பங்கு ரூ.5500 கோடி குறைக்கப்பட்டு, மாநிலங்கள் தற்போது பெறக்கூடிய அதிக நிதி ஒதுக்கீட்டிலிருந்து இந்த திட்டங்களுக்கு செலவு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத்திட்டங்களுக்கு மத்திய அரசும் மாநில அரசும் எந்த விகிதத்தில் செலவு செய்யவேண்டும் என்பது தெளிவு படுத்தப்படவில்லை. ஆகவே, *2004–05* முதல் *2013–14*வரை விவசாயத்துறையில் *3.5* சதவிகிதம் வளர்ச்சிக்கான காரணமாக இருந்த பெரும் திட்டங்களான தேசிய விவசாய வளர்ச்சி திட்டம், மற்றும் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளன. இதுவே, அரசு விவசாயத்துறைக்கு புத்துணர்வு ஊட்டும் முயற்சிக்கு பெரும் பாதகமாக அமையும். நிதி பற்றாக்குறை காரணம் காட்டுவதால், விவசாயத்துறையிலுள்ள பிரச்சினைகளை தவிர்க்க முடியாது. *11*வது ஐந்தாண்டு திட்டக்காலமான *2007–08* முதல் *2011–12* கால கட்டத்தில் விவசாயத்துறை *4.1* சதவிகித வளர்ச்சி கண்டது. அடுத்த மூன்று ஆண்டுகளில் ஒன்றுக்கும் இரண்டு சதவிகிதத்திற்கும் இடையேதான் வளர்ச்சி உள்ளது. தற்போது அரசு *8* சதவிகித பொது வளர்ச்சி அடைந்து விவசாயத்துறை மேம்படாவிட்டால் நாட்டின் சமூகத்துறையின் குறியீடுகளை அடைய முடியாது. *65* சதவிகித இந்திய மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு விவசாயத்தை நம்பியிருப்பதால், கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களுக்கிடையே மிகப்பெரிய இடைவெளியை ஏற்படுத்தக்கூடும்.

கிராமப்புற கடன் வசதி திட்டத்தின்கீழ் பட்ஜெட்டில் அதிக எதிர்பார்ப்பு உள்ள வகையில் ரூ.*8,50,00,000* கோடி அதாவது சென்ற ஆண்டை விட ரூ.*50,000* கோடி அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. "விவசாயக் கடன் கடுமையாக உழைக்கும் விவசாயிகளுக்கு ஆதரவான திட்டம். ஆகவே மிக அதிக எதிர்ப்பார்ப்புடன் *2015–16*ல் ரூ.*8.5* லட்சம் கோடி ஒதுக்கியிருக்கிறேன். வங்கிகள் இதைவிட அதிகமாக வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்", என்று நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்யும் போது கூறினார். இங்கேயும் கூட இதை செயல்படுத்துவதில்தான் சூட்சுமம் உள்ளது. உணவுக் கொள்கை நிபுணர் தேவேந்தர்ஷர்மா குறிப்பிட்டுள்ளதுபோல *4* சதவிகித வட்டியில் விவசாய கடனாக கொடுக்கப்படும் ரூ.*8.5*லட்சம் கோடியில் *94* சதவிகிதம் விவசாயத் தொழில் துறைக்கே செல்கிறது. நிதியமைச்சர் இதைக் கணக்கில் கொண்டுதான் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான நபார்டு மூலமாக வழங்கப்படும் நிதிக்கு ரூ.*1* லட்சம் கோடி ஒதுக்கியுள்ளார். விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான நோக்கம் கொண்டு நபார்டு மூலம் விநியோகிக்கப்படும் தொகையாக ரூ.*25,000* கோடி, கிராமப்புற உள்கட்டமைப்புத் திட்டத்திற்காகவும் ரூ.*15,000* கோடி நீண்ட கால கிராமப்புற கடன் திட்டத்திற்கும், ரூ. *45000* கோடி குறுகிய கால கூட்டுறவு கிராமப்புற கடன் திட்டங்களுக்காகவும், ரூ.*15,000* கோடி குறுகிய கால கிராமப்புற கடன் வழங்குவதற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற உள் கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி சிறு மற்றும் குறு விவசாயிகளின் விவசாயத் தேவைகளை தொல்லையில்லாமல் பூர்த்தி செய்ய உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் கிராமப்புற தொடர்பு மேம்பாட்டிற்காக ரூ. *25000* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2014* மார்ச் *31*வரை நபார்டு அளித்துள்ள இவ்வகையான கடன்களில் சாலைகள் அமைப்பதற்கும், பாலங்கள் அமைப்பதற்கும் *43* சதவிகிதம் செலவிடப்பட்டுள்ளது. விவசாயத்துறைக்கு *43* சதவிகிதமும் அவை சார்ந்த திட்டங்களுக்கு *14* சதவிகிதமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் பிரிவு படாத ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு, குஜராத், உத்திர பிரதேசம், மத்திய பிரதேசம், மேற்கு வங்கம் மற்றும் இராஜஸ்தான் மாநிலங்கள் மிகுந்த பயன் பெற்றுள்ளன. அடுத்த ஆண்டிற்கு கிராமப்புற நீண்ட கால கடன் திட்டங்களுக்கு ஒதுக்கீடு சென்ற ஆண்டின் ரூ.*5000* கோடியிலிருந்து ரூ.*15000* கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. விவசாயம் மற்றும் அதைச்சார்ந்த தொழில்களுக்கும் விவசாய உள் கட்டமைப்பு நிறுவனங்களுக்கும் விவசாய கிடங்குகளை அமைக்கும் நிறுவனங்களுக்கும் இது பயனளிக்கும் என்று நிதி மற்றும் தொழில்நுட்ப இந்திய கடன் தர நிர்ணய நிறுவனமான இந்தியா ரேட்டிங்ஸ் அண்ட் ரிசர்ச் கூறியுள்ளது. நபார்டிடமிருந்து நிதி வசதி பெற்று மேற்கண்ட பணிகளுக்காக கூட்டுறவு மற்றும் வட்டார கிராமப்புற வங்கிகள் மூலமாக கடன் வசதி அளிக்க கூடுதல் ஆதாரம் கிடைக்கும். இதனால், நீண்ட கால விவசாய உற்பத்தியும் உற்பத்தி திறனும் மேம்படும்.

இது அல்லாமல் 2015–16ஆம் ஆண்டில் நபார்டுக்கு அதனுடைய முதலீட்டை அதிகரிக்கும் வண்ணம் மேலும் ரூ.300 கோடி வழங்கப்பட்டுள்ளது. நபார்டு தலைவர் ஹர்ஷ்குமார் பான்வாலாசுட்டிக் காட்டியதுபோல இந்திய விவசாயத்துறையின் அடிப்படை பிரச்சினைகளை சமாளிக்கும் விதமாக இது அமையும். "பல ஆண்டுகளாக விவசாய மொத்த உற்பத்தியில், முதலீட்டுத் தொகை 17 சதவிகிதத்திலிருந்து 14 சதவிகிதமாக குறைந்துள்ளது. ஆகவே, இந்தத் தொகை விவசாயிகள் எந்த ஒரு சூழ்நிலையையும் சந்திக்க ஏதுவாக அமையும்", என்று பான்வாலா கூறினார்.

ஆனால், கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக ஒதுக்கப் பட்டிருக்கும் ரூ.1500 கோடி போதுமானதாக இல்லை. நில வள சோதனை தற்போதைய அரசின் ஒரு முக்கிய திட்டமாக திகழ்கிறது. இதனால், அதிகப்படியாக தேவையற்ற உரங்களை பயன்படுத்துவதை தடுத்து விவசாய உற்பத்தி திறனை அதிகரிக்க முடியும். கடந்த ஆண்டு இந்த திட்டத்திற்கு ரூ.156 கோடி ஒதுக்கப்பட்டது. இது இந்த ஆண்டு ரூ.200 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் நாட்டிலுள்ள 14.5 கோடி விவசாயிகளுக்கும் மண் வளப்பரிசோதனை அட்டைகள் வழங்கப்படும். "எல்லா விவசாயிகளுக்கும் தீவிர திட்ட அடிப்படையில் இந்த மண் வள சோதனை அட்டை வழங்கப்படும். இதற்காக 100 கோடி ரூபாயும், நடமாடும் மண் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் 100ம் அமைக்க ரூபாய் 56 கோடியும் ஒதுக்கப்படுகிறது." என்று கடந்த ஆண்டு பட்ஜெட் உரையில் கூறிய நிதியமைச்சர் இந்த ஆண்டு "மண் வள பரிசோதனை அட்டை திட்டம் விரைவில் துவங்கப்படும். 47 மண்வள பரிசோதனை ஆய்வுக்கூடங்களை அமைக்க 12 மாநிலங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது." என்று பட்ஜெட் உரையில் கூறினார். இதனால் இந்த அட்டை வழங்கும் திட்டம் இதுவரை செயல்படவில்லை என்று நன்றாக தெரிகிறது.

"பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டதைவிட விவ சாயத்துறையில் முதலீட்டிற்கும், ஆராய்ச்சிக்கும் அதிகமான தேவை உண்டு. ஆனால், திட்ட ஒதுக்கீட்டில் கணிசமான உயர்வு இல்லை. இதில் ஆதரவான ஒரே நிலை நிதிக்கமிஷன் மூலம் மாநிலங்களுக்கான ஒதுக்கீடு 32 சதவிகிதத் திலிருந்து 42 சதவிகிதமாக உயர்ந்திருப்பதுதான். ஆகவே, மாநிலங்கள்தான் இனிமேல் விவசாயத் துறையில் அக்கறை காட்டவேண்டும். அப்படி அவர்கள் செய்வார்கள் என்று தெரியவில்லை. ஏனென்றால் இன்னமும் செய்யவேண்டியது அநேகம் உள்ளது. பல மாநிலங்களில் சம்பளம் கொடுக்கக்கூட பணம் இல்லை." என்று இன்ஃபோசிஸ்ஸை சேர்ந்த விவசாயத்துறை பேராசிரியர் அசோக் குலாட்டி பன்னாட்டு பொருளாதார உறவுகள் ஆய்வுக்கான இந்திய கவுன்சிலின் கூட்டத்தில் கூறினார்.

மானியங்களை பொறுத்தவரை கடந்த நிதியாண்டில் திருத்தப்பட்ட கணிப்புத் தொகையான 2,66,692 கோடி என்ற நிலையிலிருந்து இந்த ஆண்டு பட்ஜெட் ஒதுக்கீடு 2,43,00,811 கோடியாக உள்ளது. இது முழுக்க முழுக்க உலக அளவில் கச்சா எண்ணெய் விலை சரிந்ததால் பெட்ரோலியம் பொருட்கள் சார்ந்த மானியங்களின் தேவை ரூ.30,000 கோடியாக குறைந்துள்ளதால்தான். இது அல்லாமல் சல்ஃப்யூரிக் அமிலம் இறக்குமதி சுங்கத்தீர்வை 7.5 சதவிகிதத்திலிருந்து 5சதவிகிதமாக குறைக் கப்பட்டிருப்பதால் விவசாயத்திற்கான இடு பொருள் விலை குறைய வாய்ப்புள்ளது. ஆகவே, உணவு மற்றும் உரத்திற்கு மானியம் அதிகரிக்கப்பட்டுள்ளது. கூட்டு உரத்திற்கான மானியம் சென்ற ஆண்டைவிட 9 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. உரத்திற்கான மொத்த மானியம் 3 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மானியங்கள் வழங்கப்படுவது முறையாக்கப்படும் என்று நினைத்திருந்த காலத்தில் இப்படி செய்யப்பட்டது சிறிது வருத்தமளிக்கிறது. இது செய்யப்படாததற்கான காரணத்தை நிதி நிலை அறிக்கையில் நிதி அமைச்சர்விளக்கியிருக்கிறார். இந்திய விவசாயத்துறையும் விவசாயிகளும் தொல்லைகள் அனுபவிக்கும் நேரம் இது என்று அவர் கூறியிருக்கிறார். பல இடங்களில் மழைக் குறைவாக இருந்ததும் விளை பொருள்களின் விலை சற்று குறைந்ததும் விவசாயிகளுக்கு கடும் தொல்லையை கொடுத்திருக்கிறது. ஆகவே விவசாய பொருட்கள் விலை உயர்ந்து விவசாயிகளின் நிலை உயரும் என்று அரசு சும்மா இருக்க முடியாது. ஆகவே, விவசாயிகளுக்கு வருமானம் அதிகரிப்பதற்காக தேசிய விவசாய சந்தை அமைக்க வேண்டிய அவசியத்தை நிதியமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

"விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த தேசிய விவசாய சந்தை ஒன்றை நாம் அமைக்க வேண்டி உள்ளது. விலை உயர்வை நிலைப்படுத்த அது உதவும். இந்த ஆண்டு மாநிலங்களோடு இணைந்து இதை செய்ய நான் முயற்சி செய்வேன்" என்று நிதியமைச்சர் கூறினார். இது விவசாயத்துறை சார்ந்த ஒரு மிகப்பெரிய கொள்கை முன்னேற்றமாகும். இதனால், விவசாய சந்தை வியாபாரம் வளர வாய்ப்புள்ளது. இதனால், இடைத்தரகர்களின் பங்கு குறைந்து விலைகள் ஒருநிலைப்பட்டு விவசாயிகளுக்கு கூடிய வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. ஆனால், நிதியமைச்சர் பேச்சிலேயே ஒரு சிக்கல் இருப்பது தெரிகிறது. மத்திய அரசு மாநில அரசுகளோடு சேர்ந்து செயல்பட வேண்டும். இதனால் பல சிக்கல்களை தீர்க்க தாமதமாகலாம். தேசிய விவசாய சந்தை பற்றிய கருத்து முதன்முதலாக கடந்த பட்ஜெட்டில் வெளியிடப்பட்டது. "மாநிலங்கள் தங்களுடைய அடிப்படை விவசாய சந்தைசார் சட்டங்களை சீர்செய்துள்ளதாகவும் அதனால் விவசாயிகள் நேரடியாக வியாபாரம் செய்யவும் ஒப்பந்தத்தின் பேரில் விவசாயம் செய்யவும், தனியார் சந்தைகளை அமைக்கவும் இது வகை செய்யும். நான்கு மாநிலங்கள் இந்த சட்டம் சார்ந்த விதிகளை செயல்படுத்தி விட்டன. மாதிரி சட்டத்தின் படி மாநிலங்கள் தொடர்ந்து சீர்திருத்தம் செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது." என்று நிதியமைச்சர் கூறினார். ஆனாலும் மத்திய அரசின் 2014–15க்கான பொருளாதார அறிக்கையில் "விவசாய பொருட்களுக்கான தேசிய சந்தை சில பிரச்சினைகளும் இனி செய்ய வேண்டியதும்" என்ற தலைப்பில் எட்டாவது அத்தியாயத்தில், கர்நாடக மாநிலத்தின் ஒரு உதாரணம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. "கர்நாடகத்தில் 155 முக்கிய சந்தைகளிலும் 354 துணை சந்தைகளிலும் 51 சந்தைகள் உரிமம் பெற்ற ஒரு தனி அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. தேசிய கணிணி சந்தை சேவைகள் என்ற பெயரில் மாநில அரசு மற்றும் தேசிய பொருள்சார் உடனடி வியாபார சந்தையோடு சேர்ந்து கூட்டு நிறுவனம் ஒன்றை அமைத்துள்ளது. இதன் மூலம் கணிணிசார் ஏலம், அவை சார்ந்த சேவைகளான எடை மற்றும் பில் போடுதல், சந்தைக்கான தீர்வை வசூல் செய்தல், கணக்கு வைப்பது, கிடங்கில் பொருட்களை வைத்திருந்து, வியாபாரிகள் அதை கணிணி மூலம் வியாபாரம் செய்வது, அப்பொருட்களை உற்பத்தி செய்து வைக்க நிதியை பெறுவது மற்றும் தொழில்நுட்பம் மூலம் அவ்வப்போதான விலையை கணிணி மூலம் தெரியப்படுத்துவது போன்ற சேவைகளை துவக்கியுள்ளது. விவசாயத்துறை சார்ந்த சந்தைகள் சிறிய அளவில் பிளவு பட்டிருப்பதால் இவ்வகையான சந்தை உள் கட்டமைப்பை ஏற்படுத்த தனியார் துறைக்கு நல்ல வாய்ப்புள்ளது". என்று பொருளாதார ஆய்வறிக்கையில் கூறப்பட்டள்ளது. மற்ற மாநிலங்களும் கர்நாடகாவின் வழியை பின்பற்றினால் இந்த முக்கியமான சீர்திருத்தம் உண்மையில் உருவெடுக்க வாய்ப்புள்ளது.

இது அல்லாமல் 2022ஆம் ஆண்டுக்குள் நான்கு கோடி வீடுகள் கிராமப்புறங்களில் கட்டப்படும் என்று கூறியிருப்பது ஒரு பெரிய நல்ல நிகழ்வாகும். இதனால் கிராமப்புற பொருளாதாரம் உயரும். ஆனால், பட்ஜெட்டில் சில முக்கியமான துணை துறைகள் முற்றிலுமாக கவனிக்கப்படவில்லை. விவசாயிகளுக்கான வருமானம் உயர வேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்திய நிதியமைச்சர் உணவு பதனீட்டு துறையைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. இந்தியாவில் பொருள் செய்வோம் என்ற கொள்கையை வலியுறுத்தும் அரசு இந்தத் துறையில் ஒரு பெரிய சீர்திருத்தத்தை எதிர்பார்த்தது. ஏனென்றால், இந்தியாவில் பொருள் செய்வோம் என்ற கொள்கையில் இந்தத் துறை ஒரு முதன்மையான துறையாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், குளிர்சாதன வசதியில், பழங்களையும் காய்கறிகளையும் சேமித்து வைப்பதற்கு முன் செய்யப்படும் சில சேவைகளுக்கான சேவை வரி விலக்கப்பட்டுள்ளதுதான் இந்தத்துறைக்கு கிடைத்த ஒரே சலுகை. இந்தத்துறைக்கு சேவை வரி விலக்கு அளிப்பதன் மூலம் விவசாய பொருட்களின் மதிப்பீட்டை உயர்த்தமுடியும் என்று நிதியமைச்சர் பட்ஜெட்டில் கூறினார். குளிர்சாதன அறையில் வைப்பதற்கு முன்பான செயல்களானவை பழுக்க வைப்பது, மெழுகு பூசுவது, சிறிய பெட்டிகளில் அடைப்பது,

லேபிள்கள் ஒட்டுவது போன்றவை இந்த சேவைகளாகும். ரயில் மற்றும் சாலைகள் வழியாக எடுத்துச் செல்லப்படும் உணவு பொருட்களுக்கான சேவை வரி விலக்கு அரிசி, பருப்புகள், மாவுகள், பால் மற்றும் உப்புக்கு மட்டும் பொருந்தும் என்று அரசு விளக்கமளித்துள்ளது. இவை விரைவில் அழுகும் பொருள்களாவதால் இந்த சலுகை விவசாயிகளுக்கு அதிகம் பயனளிப்பதாக தெரியவில்லை.

மிகவும் ஏமாற்றமடைந்த இன்னொரு துறை விவசாய பொருட்கள் ஏற்று மதியாகும். இந்தத்துறையில் நல்ல முன்னேற்ற மடைந்துள்ளதால் தகுந்த ஆதரவு அளித்திருந்தால் அரசாங்கம் ஒரே செயலில் இரண்டு பெரிய பயன்களை அடைந்திருக்கமுடியும். ஒரு புறம் அரிய அந்நிய செலாவணி கிடைத்திருக்கும். அதே சமயம் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்திருக்கும். இந்தத்துறை சார்ந்த வரையில் பட்ஜெட் கிட்டத்தட்ட மவுனமாகவே உள்ளது.

பயிர்க்காப்பீடு பற்றி நிதியமைச்சர் மவுனமாகவே இருந்து விட்டார். விவசாய உள் கட்டமைப்பு வசதிகளில் குளிர் சாதனம் செய்யப்பட்ட கிடங்குகளும் பொதுவான கிடங்குகளும் மிகவும் முக்கியமானதாகும். பல பொருள் சில்லறை வியாபாரத்தில் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்கு இந்தத் துறைகளின் முன்னேற்றம் மிகவும் அவசியம். குளிர் சாதனம் செய்யப்பட்ட கிடங்குகளும், பொது கிடங்குகளும் விவசாயிகளுக்கு வலிமையை சேர்க்கின்றன. அவர்கள் தங்களுடைய உற்பத்தியை உடனடியாக விற்காமல் சேமித்து வைத்திருந்து நல்ல விலை வரும்போது விற்க முடியும். ஆகவே இந்தத் துறையில் நல்ல திட்டத்தை நிதியமைச்சர்அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கிராமப்புற உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியம் தவிர வேறு எந்த இது சார்ந்த அறிவிப்பும் பட்ஜெட்டில் செய்யப்பட வில்லை.

முடிவாக 2015-16 பட்ஜெட்டில் விவசாயிகளின் அடிப்படை பிரச்சினைகளான நீர்ப்பாசனம் விவசாயக்கடன், மண் வளம், கிராமப்புற உள் கட்டமைப்பு வசதி மற்றும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதை உறுதி செய்வது போன்றவைகளுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணம் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், இவைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதுமானதாக இல்லை. ஆகவே இவற்றில் மாநிலங்கள் பெரிய அளவில் ஈடுபட வேண்டியுள்ளது. ஆனால், மாநிலங்கள் இந்தத்துறையில் பெரிய அளவில் செலவு செய்ய வேண்டும் என்று எந்த கட்டாயம் இல்லாத நிலையில் இவைகள் வெற்றி பெறுமா என்று தெரியவில்லை. முக்கியமான துறைகளான பயிர்க்காப்பீடு, உணவு பொருட்கள் பதனிடுதல், உணவு பொருட்கள் ஏற்றுமதி, உணவு பொருட்களை சேமித்து வைக்கும் கிடங்குகள், ஆகியவைகளுக்கு போதிய கவனம் காட்டாதது விவசாயத்துறை ஆய்வாளர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ●

---

## ரயில்வே பட்ஜெட் : 2015-2016

### ஈ கேட்ரிங்க் - சிறந்த உணவு கூடங்கள் இணைக்க ரயில்வே திட்டம்

**பயணிகள் தாங்கள் விரும்பிய உணவை பெரும் வகையில் கணினி வழி உணவு தெரிவு செய்யும் வசதி இந்த ஆண்டு ஜனவரி முதல் முன்னோடி திட்டமாக துவங்கப்பட்டது. மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு. சுரேஷ் பிரபாகர் பிரபு தெரிவித்துள்ளார். பயண ச்சீட்டுகளை இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழகம் (ஐ.ஆர்.சி.டி.சி) இணையதளத்தில் பதிவு செய்யும் போதே தேவையான உணவு வகையை பதிவு செய்து கொள்ளலாம். இது குறித்து மேலும் அமைச்சர் தெரிவித்ததாவது: நாட்டில் உள்ள சிறந்த உணவு கூடங்களை இந்தத் திட்டத்தில் இணைக்க ரயில்வே நடவடிக்கை எடுத்து வருகிறது. வாடிக்கையாளர்களின் வரவேற்பின்படி இந்த வசதி அனைத்து ரயில்களிலும் கொண்டு வரப்படும். தரமான உணவு வழங்க குறிப்பிட்ட ரயில்வே கோட்டங்களில் சமையல் அரைக்கூடங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது குடிநீர் வழங்கும் கருவிகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இந்த வசதி அனைத்து ரயில்வே நிலையங்களுக்கும் கொண்டுவரப்படும். சுற்றுச்சூழலுக்கு ஏற்ப வசதியாக மட்டும் இல்லாமல் மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் சுத்தமான குடிநீர் வழங்கவும் இது உதவியாக இருக்கும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

# முன்னேற்றத்தை நோக்கி துணிச்சலான பாதை வகுத்த ரயில்வே பட்ஜெட்

– ஜி. சீனிவாசன்

இந்திய விடுதலைக்குப் பிறகு தொடர் வண்டித்துறை நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த தொடர்வண்டித் துறை அமைச்சர்களில் வெகுசிலர் மட்டுமே மக்களைக் கவரும் வகையிலான அறிவிப்புகளை வெளியிடுவது மற்றும் ஏராளமான புதிய திட்டங்கள் மற்றும் புதிய தொடர்வண்டிகளை அறிவிப்பது போன்ற வழக்கமான நடைமுறையைத் தேர்ந்தெடுக்காமல் இருந்திருக்கின்றனர். கடந்த பிப்ரவரி 26ம் தேதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட, ஏப்ரல் ஒன்றாம் தேதி தொடங்கும் அடுத்த நிதியாண்டிற்கான தொடர்வண்டித் துறை நிதிநிலை அறிக்கை, கடந்த கால நடைமுறைகளில் இருந்து விலகி இருந்ததுடன், எதிர்காலத்தை நம்பிக்கையுடன் கடப்பதற்கான அம்சங்களையும், தொடர் வண்டித்துறையின் வளர்ச்சிக்கான அம்சங்களையும் கொண்டிருந்ததால், இது சந்தேகமே இல்லாமல் ஒரு துணிச்சலான முயற்சிதான். அடுத்த 5 ஆண்டுகளில் 8.56 லட்சம் கோடியை முதலீடு செய்வதற்கான மத்திய கால பெரு முதலீட்டுத் திட்டம். பயணிகள் கட்டணத்தை உயர்த்தாமல் மனிதப் பயன்பாட்டுக்கான உப்பு, சிமெண்ட், நிலக்கரி மற்றும் நிலக்கரி கட்டி, இரும்பு மற்றும் எஃகு, இரும்புத் தாது, கரி கலந்த இரும்பு, பெட்ரோலியப் பொருட்கள் ஆகியவை தவிர்த்த சரக்குகளுக்கான கட்டணத்தை மட்டும் 10 விழுக்காடு அளவுக்கு உயர்த்தியது. பயண தொலைவு பிரிவுகளை மாற்றியமைத்தது ஆகியவை 2015–16 ஆம் ஆண்டுக்கான தொடர்வண்டித் துறை நிதிநிலை அறிக்கையின் முக்கிய அம்சங்களாகும். தொடர்வண்டித்துறையின் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தொடர்வண்டி வாரியத்தின் மூத்த அதிகாரிகள், “பல்வேறு வகையான பொருட் களின் வகைகளும், சரக்குக் கட்டண விகிதமும் இந்த நிதிநிலை அறிக்கையில் சற்றே மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன” என்று தெரிவித்தனர். கட்டண விகிதம் மாற்றியமைக் கப்பட்ட பிறகு, சில பொருட்களுக்கான சரக்குப் போக்குவரத்துக் கட்டணம் மற்றும் அதிகபட்சமாக 10% வரை அதிகரித்திருப்பதை பார்க்க முடிகிறது. அதே நேரத்தில், வேறு சில சரக்குகளின் போக்குவரத்துக்கட்டணம் குறைக்கப்பட்டிருப்பதையும் பார்க்க முடிகிறது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, சரக்கு களின் வகைகளும், கட்டண விகிதமும் மாற்றியமைக்கப்பட்டதன் மூலமாக, 4,000கோடி ரூபாய் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்றும், தொடர் வண்டித்துறைக்கு சரக்குக் கட்டணம் மூலம் மொத்தம் 1,21,423 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தப் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, சரக்குக் கட்டணம் சராசரியாக 3% அளவுக்கு மட்டுமே உயர்த்தப்பட்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற மக்களவையில் தொடர் வண்டித்துறை நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து பேசிய தொடர் வண்டித்துறை அமைச்சர், சரியான கருத்துகளை முன்வைத்தார். “தொடர் வண்டித்துறை கட்டமைப்பு என்பது, இந்தியப் பொருளாதாரத்தின் இதயத்திற்கு உயிர்கொடுக்கும் ரத்தத்தை கொண்டுசெல்லும் நரம்புகளின் கட்டமைப்பு போன்றது” என்று குறிப்பிட்ட தொடர் வண்டித்துறை அமைச்சர், தொடர் வண்டியைப் பயன்படுத்தும் தனிநபருக்கும், தொழில்துறைக்கும் பயன்கிடைக்கும் நிலையில், தொடர் வண்டித்துறை தொடர்ந்து மோசமான நிலையிலேயே இருப்பது துரதிருஷ்டவசமானது என்றும் குறிப்பிட்டார். தொடர்வண்டித்துறையின்

---

**ஜி. சீனிவாசன்**, முன்னாள் துணை ஆசிரியர், தி இந்து – பிஸ்னஸ் லைன்.

வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவையை வழங்கமுடியாமல் இருப்பதற்குக் காரணம், அத்துறையில் போதிய அளவு முதலீடு செய்யப்படாததுதான் என்ற உண்மையை பட்டவர்த்தனமாக அமைச்சர் தமது உரையில் தெரிவித்தார். போதிய அளவு முதலீடு செய்யப்படாததன் காரணமாக, தொடர்வண்டித்துறையின் திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன; பாதுகாப்பு என்பது சவாலான ஒன்றாக மாறிவிட்டது. பயணிகளுக்கு வழங்கப்படும் சேவையின் தரம் மிக மோசமான நிலைக்குச் சென்றுவிட்டது. இதனால், தொடர்வண்டித்துறையின் மனோதிடம் குறைந்துவிட்டது; சேவைத்திறன் சரிந்துவிட்டது; சரக்குப் போக்குவரத்தும், பயணிகள் போக்குவரத்தும் போதிய அளவுக்கு இல்லாமல் போய்விட்டது; நிதி ஆதாரங்களும் குறைந்துவிட்டன என்றும் தொடர்வண்டித்துறை அமைச்சர் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தார்.

தொடர்வண்டித்துறையில் முதலீடு செய்வதால் கிடைக்கும் பயன்களையும் தொடர்வண்டித் துறை அமைச்சர் நேர்மையான முறையில் விளக்கினார். தொடர் வண்டித்துறையில் அதிக அளவு முதலீடு செய்வதால், அது இந்தியப் பொருளாதாரத்தின் பிற அம்சங்களிலும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமின்றி, ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குதல், சுற்றுச் சூழல் நீடித்தத் தன்மையை உறுதி செய்தல் ஆகிய நன்மைகளையும் வழங்கும் என்று அமைச்சர் குறிப்பிட்டார். போக்குவரத்து அடர்த்தி அதிகமாக உள்ள தொடர்வண்டிப் பாதை கட்டமைப்புகளின் திறனை மேம்படுத்துவது மிகவும் அவசியம் என்பதையும் அவர் சரியாக கணித்து அறிவித்துள்ளார். இத்தகைய தொடர்வண்டிப் பாதை கட்டமைப்பில் திறனை அதிகரிப்பதற்காக பெரிய அளவில் நிலங்களை கையகப்படுத்தவேண்டிய தேவையில்லை என்பதாலும், இதற்கான பணிகளை விரைவாக செய்து முடிக்கலாம் என்பதாலும், குறைந்த செலவில் இதை சாதிக்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். எனவே, தொடர்வண்டிப் பாதைகளை குறுகிய பாதையில் இருந்து அகலப் பாதையாக மாற்றுதல், இரட்டைப் பாதைகளை அமைத்தல், சில இடங்களில் மூன்றாவது பாதைகளை அமைத்தல், தொடர்வண்டிப் பாதைகளை மின்மயமாக்குதல் ஆகியப் பணிகளை மேற்கொள்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அதன் மூலம்தான் தொடர் வண்டிகளின் வேகத்தை அதிகப்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு நீடித்த பயன்களை வழங்க முடியும். தொடர்வண்டித் துறையின் சரக்குப் போக்குவரத்தின் பெரும்பகுதி, இந்தியாவின் 4 பெருநகரங்களை இணைக்கக்கூடிய 6 பாதைகளில் மட்டும்தான் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த 6 பாதைகளிலும் அளவுக்கு அதிகமாக போக்குவரத்து இருப்பதால், இந்த வழித்தடங்களில் புதிய பாதைகளை அமைத்து, திறனை மேம்படுத்துவதன் மூலம் நெரிசலை குறைக்க முடியும். பயணிகளின் வசதியை கருத்தில் கொண்டு சேவைகளை வழங்குதல், பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல், தொடர்வண்டித்துறை எதிர்காலத்தில் தற்சார்பு கொண்ட நீடிக்கத்தக்க நிறுவனமாக மாற்றுதல் ஆகியவையும் இந்த நிதிநிலை அறிக்கையின் முக்கியமான அம்சங்களாகும்.

தொடர் வண்டித்துறையில் அறிவிக்கப்பட்டுள்ள புதுமையான அம்சம் என்னவென்றால், 2015–16 ஆம் ஆண்டில் தொடர் வண்டிப்பாதைகளை மின்மயமாக்குவதற்கான திட்டத்திற்கு மிக அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதுதான். நடப்பு நிதியாண்டில் 462 கிலோமீட்டர் நீள பாதைகளை மட்டுமே மின்மயமாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், அடுத்த ஆண்டில் (2015–16) 6,608 கிலோமீட்டர் நீளப் பாதைகளை மின்மயமாக்க ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. இது முந்தைய ஆண்டைவிட, 1,330% அதிகமாகும். அதேநேரத்தில் இந்தியாவின் மின்சாரம் பெரும்பாலும் நிலக்கரியைப் பயன்படுத்தி, அனல்மின் நிலையங்கள் மூலமாகவே தயாரிக்கப்படுகிறது என்பதால், இந்திய அரசு கடைபிடிக்க உத்தேசித்துள்ள கார்பன் இல்லாத இந்திய வளர்ச்சிப் போக்கு என்ற கொள்கைக்கு எதிரானதாகும். சுற்றுச்சூழலை கெடுக்கக்கூடிய எரிபொருளில் இயங்கும் சாலைப் போக்குவரத்து வாகனங்களில் பயணம் செய்வதைவிடுத்து, தொடர்வண்டிகளில் பயணம் செய்வதற்கு

அனைவரும் விரும்புவதற்கான காரணம், அதன் சுற்றுச்சூழலை பாதிக்காத தன்மை, குறைந்த அளவிலான எரிபொருள் பயன்பாடு ஆகியவைதான். இத்தகைய சூழலில், சூழலியல் சமநிலையை பாதிக்காமல், அடுத்த ஆண்டில் சரக்கு மற்றும் பயணிகள் தொடர்வண்டிகளை அதிக அளவில் இயக்கும் நோக்குடன் அதிக அளவிலான மின்மயமாக்கல் இலக்கை தொடர் வண்டித்துறை அமைச்சர் எவ்வாறு சாதிக்கப்போகிறார் என்பது தெளிவாக தெரியவில்லை. எனினும் இத்தகைய கவலைகளுக்கு மறைமுகமாக தீர்வுசொல்லும் வகையில், 1,000 மெகாவாட் அளவுக்கு சூரியஒளி மின்சாரத்தை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தொடர் வண்டித்துறை நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

1. தொடர்வண்டிப் பயணிகளின் அனுப வத்தை தொடர்ச்சியாகவும், அளவிடக்கூடிய அளவிலும் மேம்படுத்துவது, தொடர் வண்டிப் பயணத்தை பாதுகாப்பான பயணமாக மாற்றுவது, 2. தொடர் வண்டிகளின் நாள் ஒன்றுக்கு 2.1 கோடி பேர் பயணம் செய்து வரும் நிலையில், இந்த எண்ணிக்கையை 3 கோடியாக உயர்த்தும் அளவுக்கு கட்டமைப்பு வசதிகள் நவீனப்படுத்துவதற்காக திறன் மேம்பாட்டுப் பணிகளை மேம்படுத்துவது, 3. தொடர் வண்டிப் பாதையின் நீளத்தை தற்போதுள்ள 1.14 லட்சம் கிலோமீட்டர் தொலைவிற்கு 20% அதிகரித்து, 1.38 லட்சம் கிலோமீட்டராக உயர்த்துவது, 4. சரக்கு கையாளும் திறனை ஆண்டுக்கு 100 கோடி டன் என்ற அளவில் இருந்து 150 கோடி டன்னாக உயர்த்துவது ஆகிய 4 நோக்கங்களும் சாதிப்பதற்கு சாத்தியமானவைதான். எனினும், இதற்காக தயாரிக்கப்பட்ட திட்டம், சரியாக செயல்படுத்தப்படுவதை அமைச்சர் கண்காணித்து உறுதி செய்ததால்தான் இதை சாதிக்க முடியும். சிறப்புப் பயன்பாட்டு நிறுவனங்களை அமைப்பதன்மூலம், தொடர்வண்டித் திட்டங்களைச் செயல்படுத்துவதில், மாநில அரசுகளையும் கூட்டாளிகளாக இணைத்துக்கொள்ளுதல், நிலக்கரி, இரும்புத்தாது, சிமெண்ட் போன்ற சரக்குகளை கொண்டுசெல்வதற்கு போதிய அளவில் கட்டமைப்புத்திறன் மேம்படுத்துவதை உறுதி செய்வதற்காக, பொதுத்துறை நிறுவனங்களுடன் கூட்டாண்மையை ஏற்படுத்திக் கொள்ளுதல், வெளிநாடுகளில் இருந்து தொழில்நுட்பத்தைக் கொண்டுவருதல் மற்றும் நீண்டகால கடன் வசதியைப் பெறுதல் ஆகியவற்றுக்காக இருநாட்டு மற்றும் பன்னாட்டு அமைப்புகளையும், பிற அரசுகளையும் பயன்படுத்திக்கொள்ளுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் ஊக்கமளிக்கக்கூடியவையாகும். இந்த ஏற்பாடுகள் தொடர்பான இருதரப்புப் புரிதல் முழுமையாக இருத்தல், ஒப்பந்தங்கள் தொடர்பாக ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், அதைத் தீர்ப்பதற்குரிய சரியான அமைப்பை ஏற்படுத்துதல் ஆகியவற்றை உறதி செய்தால் மட்டுமே இந்த முயற்சிகள் வெற்றிபெறும்.

தொடர்வண்டித்துறை அமைச்சரே ஒரு தணிக்கையாளர் என்பதால், சந்தையில் கடன்வாங்கி திட்டங்களை செயல்படுத்தினாலும், அவை நல்ல வருவாயைக் கொடுக்கும் என்பதை அவர் அறிந்திருக்கிறார். இந்திய தொடர்வண்டித் துறைக்குச் சொந்தமான இந்திய தொடர்வண்டி நிதிக் கழகத்திடம் இருந்து அதிக வட்டிக்கு கடன்வாங்குவது மட்டுமின்றி, காப்பீடு மற்றும் ஓய்வூதிய நிதிகள், பன்னாட்டு மற்றும் இருநாட்டு அமைப்புகள் ஆகியவற்றின் மூலம் குறைந்த வட்டிக்கு கடன் வாங்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. தொடர் வண்டித்துறையின் வருமானம் படிப்படியாக அதிகரிக்கும் என்பதால், அதைக்கொண்டு இந்தக் கடன்களை அடைக்க முடியும். அமைப்பு சார்ந்த நீண்டகால முதலீட்டாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களிடம் இருந்து முதலீடுகளைத் திரட்டுவதற்காக புதிய அமைப்புகளை உருவாக்க தொடர்வண்டித்துறை திட்டமிட்டிருப்பது போற்றத்தக்க ஒன்றாகும். அதுமட்டுமன்றி, தொடர்வண்டித்துறையின் சொத்துக்களை விற்று வருவாய் ஈட்டுவதற்கு பதிலாக, தொடர்வண்டித்துறையின் சொத்துக்களைப் பயன்படுத்தி வருவாய் ஈட்டுவதையே தாம் விரும்புவதாக தொடர்வண்டித்துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறார். இதன் மூலம் தொடர்வண்டித்துறை தனி நிறுவனமாக்கப்படும் அல்லது தொடர்வண்டித்துறை தனியார்மயமாக்கப்படும் அல்லது தொடர்வண்டித்துறைக்கு சொந்தமான நிலங்கள் விற்பனை செய்யப்படும்

என்பது தொடர்பாக நிலவி வந்த தேவையற்ற சர்ச்சைகளுக்கும், நம்பிக்கைகளுக்கும் தொடர் வண்டித்துறை அமைச்சர் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்.

தொடர்வண்டித்துறையின் வருவாயில் எத்தனை விழுக்காடு அத்துறையை இயக்கு வதற்காக செலவிடப்படுகிறது என்பதன் அடிப்படையில்தான் செயல்பாட்டுத்திறன் மதிப்பிடப்படுகிறது. இந்த அளவு குறைவாக இருந்தால் தொடர்வண்டித்துறைக்கு நல்லதாகும். கடந்த 2013–14 ஆம் ஆண்டில் 93.6% ஆக இருந்த செயல்பாட்டுத்திறன் 2014–15 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 91.8% ஆக மேம்பட்டிருக்கிறது. கடந்த ஜுலை மாதத்தில் இது 92.4% ஆக மேம்பட்டிருந்தது. அதன்பின், மேற்கொள்ளப்பட்ட பயன்தரக்கூடிய செலவு மேலாண்மைத் திட்டங்களின் மூலம்தான் இது சாத்தியமானது. 2015–16 ஆம் ஆண்டில் இந்த அளவை 88.5% என்ற அளவுக்கு மேம்படுத்த தொடர் வண்டித்துறை இலக்கு நிர்ணயித்திருக்கிறது. ஒட்டுமொத்த உற்பத்தித்திறன் மேம்பாடு, தொடர்வண்டித் துறையின் செயல்பாடுகளில் திறனை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலமாக இந்த இலக்கை எட்ட முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

உண்மையில் செலவுகளைக் கட்டுப் படுத்துவதிலும், செயல்பாட்டுத் திறன் விகிதத்தை மேம்படுத்துவதிலும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையின் காரணமாக, தேய்மான நிதிக்கான ஒதுக்கீட்டை ரூ.1050 கோடியிலிருந்து ரூ.7900 கோடியாக தொடர் வண்டித்துறை அமைச்சர் அதிகரித்திருக்கிறார். பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்துக்கு இருப்புப் பாதைகள் வலுவுடன் இருப்பது முக்கியம் எனும் நிலையில், அப்பாதைகளை புதுப்பிப்பது உள்ளிட்ட பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள தேய்மான நிதி மிகவும் முக்கியமாகும். அதே போல், தொடர்வண்டித்திறனை அதிகரித்தல், தொடர் வண்டிகளை இயக்குவதில் உள்ள சிறுசிறு பிரச்சனைகளை களைதல் போன்ற சிறிய செலவுகளை சமாளிப்பதற்கான தொடர் வண்டித்துறை மேம்பாட்டு நிதியையும், அதன் திருத்தப்பட்ட மதிப்பைவிட நான்கு மடங்கு அதிகமாக ரூ.5750 கோடியாக அமைச்சர் உயர்த்தியிருக்கிறார். ஐயமே இல்லாமல் தொடர் வண்டித்துறையின் நிதிநிலை அறிக்கை அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் அம்சம் என்னவென்றால், திட்ட அளவை சுமார் 50 விழுக்காடு உயர்த்தி, ஒரு லட்சம் கோடி ரூபாயாக நிர்ணயித்திருப்பதுதான். திட்ட அளவுக்கான இலக்குகள் முழுமையாக செயல் படுத்தப்பட்டால், அது ஒரு பெரிய சாதனையாக அமையும்.

நடப்பு நிதியாண்டில் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து வருவாய் வரவுகளும், நிகர போக்குவரத்து வருவாய் வரவும் முந்தைய நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டைவிட குறைவாகவே ஈட்டப்பட்டன. நிகர போக்குவரத்து வருவாய், பட்ஜெட் மதிப்பீடான 1,65,165 கோடி என்ற இலக்கைக் காட்டிலும், 917 கோடி குறைவாகவே எட்டப்பட்டது. ஆனால் நடப்பு நிதியாண்டில், அனைத்து வருவாயும் அதிகரிக்கும் என்ற நம்பிக்கையில்தான் வருவாய் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. வரும் 2015–16 ஆம் ஆண்டில் தொடர் வண்டித்துறையின் நிகர போக்குவரத்து வருவாய் 1,83,578 கோடியாக இருக்கும். ஏதேனும் பெரிய அளவில் அதிசயங்கள் நிகழ்ந்தாலோ அல்லது ரயில் பயணிகளுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் பயனளிக்கும் வகையில், போற்றத்தக்க மற்றும் நீடித்த சிறந்த மேலாண்மை நடைமுறைகளை தொடர் வண்டித்துறை அமைச்சகம் பின்பற்றினாலோ மட்டும்தான் இந்த இலக்கை எட்டமுடியும். இல்லாவிட்டால், அதிக அளவிலான வருவாய் வரவு இலக்குகளை எட்ட முடியாமல் போய்விடும்.

மத்திய அரசின் கருவூலத்தில் இருந்து ஒதுக்கப்படும் பட்ஜெட் ஆதரவு நிதியை நம்பிதான் தொடர்வண்டித்துறை செயல்படுவது வழக்கம். இந்த பட்ஜெட் ஆதரவு இல்லாவிட்டால், தொடர்வண்டித்துறையையே இயக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் உறுதியாக உள்ள தொடர்வண்டித் துறை அமைச்சர் சுரேஷ் பிரபு, நிறுவனங்களிடம் இருந்து நிதி திரட்டும் புதுமையான முறையில், கூடுதல் நிதிநிலை ஆதாரங்களை உருவாக்க வகை செய்துள்ளார். இது மிகச் சிறப்பான நடவடிக்கை

என்றும், பெரிய அளவில் சாதிக்கும் திறனை கொண்டது என்றும் தொடர் வண்டித்துறை அமைச்சர் சுரேஷ் பிரபு தெரிவித்தார். தொடர் வண்டித்துறைத் திட்டங்களில் தொடர் வண்டித் துறை மற்றும் பிற பொதுத்துறை நிறுவனங்கள் செய்யும் அமைப்பு சார்ந்த முதலீடுகள்தான், இந்த கூடுதல் நிதிநிலை ஆதாரங்கள் ஆகும். இது வரும் ஆண்டில் ரூ.17,136 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொடர் வண்டித்துறையிடம் உள்ள மிகக்குறைந்த அளவிலான நிதி ஆதாரங்களை, ஒவ்வொரு திட்டத்திற்கும் குறைந்த அளவில் ஒதுக்கீடு செய்து, திட்டப்பணிகள் தாமதப்படுத்தும் நடைமுறைக்கு மாற்றாக, திட்டப் பணிகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, விரைந்து முடிப்பதற்கு இப்புதிய முறை வகை செய்யும். நிலுவையில் உள்ள தொடர் வண்டித் திட்டங்களைச் செயல்படுத்தினால், போக்குவரத்து நெரிசல் குறையும், அதுமட்டுமின்றி இத்திட்டங்கள் செயல்படுத்தி முடிக்கப்படும்போது, அதிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் வருவாய் கிடைக்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இப்புதிய முறையை தொடர்வண்டித் துறை அமைச்சர் அறிமுகப்படுத்தியிருக்கிறார். 2015–16 ஆம் ஆண்டிற்கான ஒரு லட்சம் கோடி ரூபாய் ஆண்டுத் திட்டத்தில், 40,000 கோடி ரூபாய் இந்திய அரசிடம் இருந்து நிகர பட்ஜெட் ஆதரவாகக் கிடைக்கும். 1,645 கோடி ரூபாய் டீசல் மீதான கூடுதல் வரியிலிருந்தும், 17,793 கோடி ரூபாய் தொடர் வண்டித்துறையின் உள் ஆதாரங்களில் இருந்தும் கிடைக்கும். மீதமுள்ள 40,000 கோடி ரூபாய் வெளியில் இருந்து கடனாக வாங்கப்படும்.

கடந்த ஆண்டில் தொடர் வண்டித்துறை 13,000 கோடி ரூபாயை வெளியில் இருந்து கடனாக வாங்கியது. இக்கடனை திரும்ப அடைக்கவேண்டும் என்பதற்காக, அதற்குத் தேவையான வருவாயைத் தரக்கூடிய வகையி லான திட்டங்களை தொடர்வண்டித்துறை அடையாளம் கண்டிருக்கிறது. தொடர் வண்டித் திட்டங்களை விரைந்து செயல்படுவதற்காக மாநில அரசுகள் பொதுத்துறை நிறுவனங்கள், பன்னாட்டு அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் தொடர் வண்டித்துறை கூட்டாண்மை உறவை ஏற்படுத்திக் கொண்டிருப்பதற்கு இதுவே காரணமாகும். இந்த நடவடிக்கைகளின் மூலம், தொடர் வண்டித்துறைக்கு 17,000 கோடி ரூபாய் நிதி கிடைக்கும். மேலும், 17,000 கோடி ரூபாய் இந்திய தொடர் வண்டித்துறை நிதிக் கழகத்திடம் இருந்தும், 6,000 கோடி ரூபாய் பொதுத்துறை மற்றும் தனியார் துறை கூட்டாண்மைகளின் மூலமும் திரட்டப்படும்.

சுருக்கமாக செல்லவேண்டுமானால், தொடர் வண்டித்துறை நிதிநிலை அறிக்கை, மெல்லிய பனிக்கட்டி மீது ஸ்கேட்டிங் செய்வது போன்று திறமையாக தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள மறு உருவாக்கத் திட்டங்கள் முழுமையாக செயல்படுத்தப்பட்டால், இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எண்ணிக்கையில் அடங்காத அளவுக்கு பயன்கள் கிடைக்கும். தொடர் வண்டித் துறை அமைச்சர் முன்வைத்துள்ள முதலீட்டுத்திட்டங்கள், கடனை அடிப்படை யாகக் கொண்டவை என்றும், இவை தாக்குப்பிடிக்கத்தக்கதல்ல என்றும் விமர்சகர்கள் குற்றம்சாட்டுகின்றனர். ஆனால், தொடர் வண்டித்துறையின் நிதி ஒதுக்கீடு எந்த அளவுக்கு சிறப்பானது என்பதை சந்தை சக்திகள்தான் தீர்மானிக்கும் என்ற நிலையில், இந்திய தொடர்வண்டித் துறையின் திட்டங்கள் நடைமுறை சாத்தியமானவையாகவும், குறைந்த செலவிலான பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து வசதியாகவும் இருப்பதால், இந்த விஷயத்தில் தொடர்வண்டித்துறை வெற்றி பெறுவது உறுதி. தொடர்வண்டித் துறை நிதிநிலை அறிக்கையுடன் அத்துறையின் நிலைமை குறித்த வெள்ளை அறிக்கையும் வெளியிடப்பட்டது. அதில், "அடுத்த 5 ஆண்டுகளில் இந்திய தொடர் வண்டித்துறையின் தோற்றம் மாறும். விரைவான தொடர்வண்டிகள், நவீன தொடர் வண்டிகள், தூய்மையான தொடர் வண்டி நிலையங்கள், திறமையானப் பணியாளர்கள் ஆகியவையே நாளைய தொடர் வண்டித்துறையின் அடையாளங்களாக இருக்கும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காலம் காலமாக இந்தியாவின் பாரம்பரியப் போக்குவரத்து வழிமுறையாக இருக்கும் தொடர் வண்டித்துறையின் பயனாளர்களுக்கு இத்தகையான சிறப்பான முன்னேற்றத்தை அளிப்பதற்கான பாதையை 2015 – 2016 ஆம் ஆண்டிற்கான தொடர் வண்டித்துறை நிதிநிலை அறிக்கை உருவாக்கித் தந்திருக்கிறது. ●

# இந்தியாவில் ஏழைகளுக்கு உதவ, கூடுதலான அந்நிய நாட்டுப் பங்குகளை காப்பீட்டுத் துறையில் அனுமதிக்க வேண்டும்

– தீரஜ் நய்யார்

காப்பீடு என்பது இடர் மேலாண்மை மட்டுமன்று. அது சமூகப் பாதுகாப்புக்கான ஒரு கருவியும் ஆகும். காப்பீடு என்பது பணக்கார நாடுகளில் உள்ள செல்வந்தர்களுக்கானது மட்டுமல்ல. உண்மையில் பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள செல்வந்தர் அல்லாதவர்களுக்கும் முக்கியமானதாகும். துரதிருஷ்டவசமாக, இந்தியா என்பது போதுமான காப்பீடு இல்லாத நாடாக உள்ளது. இந்தியாவில் காப்பீடு எந்த அளவு உள்ளது எனபதை உள்நாட்டு உற்பத்தியில் வசூலிக்கப்பட்ட காப்பீடு பிரீமியங்களின் சதவிகிதம் எவ்வளவாக இருக்கிறது எனக் கணக்கிடுவதன் மூலம் அறியலாம். இந்த சதவிகிதம் இந்தியாவில் 3.96ஆக உள்ளது. இதுவே வளர்ந்த நாடுகளில் 9 சதவிகிதமாக உள்ளது. சீனாவைவிட ஓரளவிற்கு இந்தியா இந்த பிரீமியங்களின் சதவிகிதத்தில் சிறப்பாக உள்ளது. சீனாவில் மேற்சொன்ன சதவிகிதம் 3 ஆகத்தான் உள்ளது. இந்தியாவில் காப்பீடு அடர்த்தி வெறும் $53 என்ற அளவில் மட்டுமே உள்ளது. இது ஒரு தனிநபருக்கு இன்சூரன்ஸ் பிரீமியம் எவ்வளவு என்று கணக்கிடுவதன் மூலம் கிடைக்கின்ற அளவாகும். இது வளர்ந்த நாடுகளைப் பொறுத்தவரையில் $2,000 முதல் $7,000 வரையாக உள்ளது. இந்த கணக்கீட்டில் சீனா இந்தியாவை விட முன்னிலையில் உள்ளது. சீனாவில் காப்பீடு அடர்த்தி $178 ஆகும்.

காப்பீடு அளவில் இந்தியாவும் சீனாவும் வளர்ந்த பொருளாதார நாடுகைளைவிட பின்தங்கி இருக்க காரணம் உள்ளது. இரண்டு நாடுகளின் சந்தைகளும் நீண்ட காலமாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களால்தான் செயல்பட்டு வந்தன. இரண்டு நாடுகளும் மிக அண்மைக்காலமாக, அதிலும் ஓரளவிற்குத்தான் அந்நிய முதலீட்டை அனுமதித்துள்ளன. தனிநபர் மற்றும் வெளிநாட்டு காப்பீடு நிறுவனங்களின் சந்தைப் பங்கு மிகவும் குறைவுதான்.

இந்தியாவில் காப்பீடு சந்தை என்பது போதுமான போட்டி நிறைந்ததாக இல்லை என்பது உண்மைதான். சந்தையின் இத்தகைய சில நிறுவனங்கள் பெரிய சந்தையை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் என்ற இயல்பு பெரும்பாலும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் போதுமான லாபம் ஈட்டினாலும் காப்பீடு எடுக்காத பொதுமக்களை இதில் சேர்ப்பதற்கான ஊக்க நடவடிக்கைகள் இல்லை என்பதையே இவை அர்த்தப்படுத்துகின்றன. அந்நிறுவனங்களுக்குக்கூட, புதிது புதிதான திட்டங்களை வழங்குவதற்குப் போதுமான ஊக்கமளிப்பு இல்லை. அவ்வாறு செய்தாலாவது குறைந்த வருமானம் உடைய நுகர்வோர்களுக்கு ஈர்ப்பாக இருக்கும். இந்தியாவின் காப்பீடு தொழில் போட்டி நிறைந்ததாக மாற வேண்டும் என்றால் அதிக அளவு வெளிநாட்டு பங்கு மூலதனம் அனுமதிக்கப்பட வேண்டும் என்பதுதான்.

இந்தியாவின் ஏழை மக்களுக்கும் காப்பீடு வசதியை விரிவுபடுத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் தீவிரமான அர்ப்பணிப்பு மத்திய பட்ஜெட்டில் வெளிப்பட்டுள்ளது. பட்ஜெட்டில் குறைந்த வருவாய் உடைய பிரிவினருக்காக இரண்டு புதிய காப்பீட்டுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. விரிவான சமூக பாதுகாப்பு அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற அரசின் முயற்சியின் ஒரு பகுதியாக இவை அறிவிக்கப்பட்டுள்ளன. சுரக்ஷா பீமா திட்டத்தின் கீழ் ஒரு ஆண்டுக்கு பன்னிரெண்டு ரூபாய் பிரீமியம் கட்டுவது என்பது ஒரு தனிநபருக்கு விபத்து காப்பீடாக ரூ2 லட்சம் கிடைக்க வழிவகை செய்கின்றது. ஜீவன் ஜோதி பீமா திட்டத்தின் கீழ் ஒரு தனிநபர் ஓராண்டுக்கு ரூ330 பிரீமியமாகக் கட்ட வேண்டும் (அதாவது ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்க்கும் குறைவாகப் பிரீமியம்). இது அந்த நபருக்கு ரூ2 லட்சத்துக்கான ஆயுள் காப்பீட்டைத் தரும். இந்த இரண்டு புதிய திட்டங்களையும் எல்.ஐ.சி, ஜி.ஐ.சி போன்ற அரசு சார்ந்த காப்பீட்டு நிறுவனங்கள் செயல்படுத்தும்.

**தீரஜ் நய்யார்**, பொருளாதார நிபுணர்

எனினும் அரசாங்கம் செய்வதற்கு மேலும் நிறைய அம்சங்கள் உள்ளன. குறைந்த வருவாய் பிரிவினருக்கு ஆயுள் மற்றும் விபத்துக் காப்பீடுகளைத் தாண்டியும் பிற காப்பீடுகளும் தேவையாக உள்ளன. ஒவ்வொரு இந்தியரும் சுகாதாரக் காப்பீட்டு வசதியைப் பெற்றிருக்க வேண்டும், ஒவ்வொரு விவசாயியும் பயிர் காப்பீட்டு வசதியைப் பெற்றிருக்க வேண்டும். இதில் பிரச்சனை என்னவெனில், தற்போதைய நிலையில், அரசு சார்ந்த நிறுவனங்களோ அல்லது தனியார் காப்பீட்டு நிறுவனங்களோ (26 சதவிகித வெளிநாட்டு பங்கு காப்பீட்டுடன் உள்ள நிறுவனங்கள் உட்பட) இத்தகைய பெரிய சந்தையை எதிர்கொள்ளும்படி இல்லை. எதிர்கொள்ள அவை விரும்பவும் இல்லை. இதற்கு நிறுவனங்கள் போட்டி சார்ந்த சூழலுக்கு ஆட்பட்டாக வேண்டும். புதிது புதிதாக திட்டங்களை உருவாக்கி அறிமுகப்படுத்தும் அளவு அறிவு வேண்டும். மேலும் கடினமான சந்தையில் தாக்குபிடித்து நிற்கும் அளவிற்கு நிதியும் வேண்டும். இதில் பொருந்தி வரக்கூடிய முதலீட்டாளர்கள் யார் என்றால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள்தான். காப்பீட்டுத் திட்டங்கள் பற்றிய சிறப்பான செயல் அறிவை அவர்கள் பெற்றிருப்பது ஒரு சாதகமான அம்சம் ஆகும். வெளிநாட்டு காப்பீட்டு நிறுவனங்கள் தங்களது நிதியை உலகில் எந்த நாட்டிலும் முதலீடு செய்யலாம். இதன்மூலம் அவர்கள் தங்களது இடர் அம்சத்தை கூறுபடுத்த முடியும். இந்திய நிறுவனங்கள் வழக்கமாக உள்நாட்டில்தான் தங்களது நிதியை முதலீடு செய்யும். இது இடரை அதிகப்படுத்தவே செய்யும். இதன் விளைவாக, வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்கக்கூடிய பிரீமியத்தைவிட குறைவானதாக இருக்கும் என்பது சொல்லாமலேயே விளங்கும். வெளிநாட்டு காப்பீட்டு நிறுவனங்களின் வருகையால் காப்பீடு எடுப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கச் செய்யும். சமூக பாதுகாப்புக்கான ஒரு கருவியாக காப்பீட்டை விரிவுபடுத்த வேண்டும் என அரசு உண்மையில் அக்கறை கொண்டால், அது கட்டுப்பாட்டை விரைவாகத் தளர்த்த வேண்டும்.

அரசு அறிவித்துள்ள குறிக்கோளின்படி தற்போது காப்பீட்டுத் துறையில் அனுமதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பங்கு காப்பீடு 26 சதவிகிதத்தில் இருந்து 49 சதவிகிதமாக அதிகரிக்கப்பட வேண்டும். இது நீண்ட நாளாக நிலுவையில் உள்ள சீர்திருத்த நடவடிக்கை ஆகும். என்றாலும் நாடாளுமன்ற அவையில் இது நிறைவேறவில்லை. அரசு குடியரசுத் தலைவரின் அவசரக்காலச் சட்டத்தை அறிவித்துள்ளது. எனினும் புதிய காப்பீட்டு மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாக வேண்டும். இந்தியாவுக்கு மேலும் நிறைய காப்பீட்டு நிறுவனங்கள் தேவைப்படுகின்றன. தற்போது இந்தியாவில் 52 காப்பீட்டு நிறுவனங்கள் உள்ளன. இதில் 24 நிறுவனங்கள் ஆயுள் காப்பீடு சார்ந்தவை. 28 நிறுவனங்கள் ஆயுள் காப்பீடு இல்லாத ஏனைய காப்பீட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவை ஆகும். 26 சதவிகித கட்டுப்பாடு என்ற நிலையில், இந்திய காப்பீட்டுத் துறையில் வெளிநாட்டு பங்கு மதிப்பு ரூ.8,700 கோடியாகும். உள்நாட்டு தனியார் பங்கு ரூ.35,000 கோடியாகும். இதுவே 49 சத விகிதம் என்றால் வெளிநாட்டு பங்கு மதிப்பு சுமார் ரூ.50,000 கோடி என அதிகரிக்கும்.

இதற்கும் மேல் அரசாங்கம் 49 சதவிகிதம் என்ற தடைக்கல்லைக்கூட விரைவில் நீக்கியாக வேண்டும். உரிமையை இந்தியர்களின் கைகளில் மட்டுமே வைத்திருக்க வேண்டும் என்பதில் பொருளாதார தர்க்கம் ஏதும் இல்லை. விவாதத்துக்குக் கூறவேண்டுமென்றால், அத்தகைய கட்டுப்பாடு என்பது காப்பீட்டு வர்த்தகத்தில் தேவையான திறன்கள் இல்லாத உள்ளூர் தொழில்முனைவோர் ஒருவர் திறன்கள் மிகுந்த சிறந்த வெளிநாட்டு நிறுவனத்துக்குப் பின்னால் செல்ல வழி ஏற்படுத்தி விடுகின்றது. வெளிநாட்டு பங்கு 74 சதவிகிதம் அல்லது 100 சதவிகிதம் என அனுமதிக்கப்பட்டால், இந்திய காப்பீட்டுத் துறையில் போடப்படும் முதலீட்டு அளவு பலமடங்கு அதிகரிக்கும். வெளிநாட்டு காப்பீட்டு நிறுவனத்திற்கு நிர்வாகக் கட்டுப்பாட்டைச் செய்யவும் அனுமதி அளித்தால், இந்தியச் சந்தையில் அந்த நிறுவனம் மிகுந்த நம்பிக்கையுடன் நுழையும். வரும் காலங்களில் காப்பீட்டுத் துறையில் வெளிநாட்டுப் பங்கில் உள்ள கட்டுப்பாடுகளுக்கு முடிவு கட்டுவதே முதன்மைச் செயலாக இருக்க வேண்டும்.

வெளிநாட்டு முதலீட்டுக்காக காப்பீட்டுத் துறையை திறந்து விடுவதால் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகள் என்ன? 2008ல் ஏற்பட்ட சர்வதேச நிதி நெருக்கடியை உருவாக்கியதில் உலகின் மிகப்பெரிய காப்பீட்டு நிறுவனங்கள் பங்கு வகித்தன என சந்தேகவாதிகள் குறிப்பிடலாம். ஆனால் இந்தியப் பொருளாதாரம் என்பது அமெரிக்க நாட்டுப் பொருளாதாரம் போன்றது இல்லை. மிகப்பெரிய நிதிசார் தொழில் முறைப்படி நிலைகுலைவதை முழுமையாக அது

தாங்கிக் கொள்ள முடியாது. 2008 நெருக்கடிக்கு இட்டுச் சென்ற ஆண்டுகளில், மேற்குலக காப்பீட்டு நிறுவனங்கள் சிக்கலான தொகுப்பின் நிதி திட்டங்களில் முதலீடு செய்தன; காப்பீடு எடுத்தன. இதனை ஒருசிலர் மட்டுமே புரிந்து கொண்டனர். இத்தகைய திட்டங்களில் பலவும் இடர்ப்பாட்டை கூறுபடுத்தும் உத்தியுடன் வடிவமைக்கப்பட்டவை. இவை அமைப்பின் இடர்ப்பாட்டை அதிகரிக்கச் செய்தன. அத்தகைய காப்பீட்டுத் திட்டங்களின் இருண்மை மற்றும் எந்த முறையில் அவை வர்த்தகம் செய்யப்பட்டன என்ற வெளிப்படைத்தன்மை இல்லாதது ஆகியன சர்வதேச நிதி நெருக்கடியின் அடிப்படைக் காரணங்களாக அமைந்தன. பிற நிதி நிறுவனங்கள் போலவே, காப்பீட்டு நிறுவனங்களும் போட்ட முதலுக்கு அதிக லாபத்தை எதிர்பார்க்கவே செய்கின்றன. இந்த நிறுவனங்களே அமைப்பு சீர்குலைய உடந்தையாக இருந்தன. மேற்குலகப் பொருளாதாரத்தில் நீண்ட சரிவை ஏற்படுத்துவதற்குத் தூண்டுதலாக இருந்தன. உலகில் எந்தப் பகுதியாக இருந்தாலும் அங்கு நிதி மந்த நிலைமையை ஏற்படுத்தின.

வெளிநாட்டு காப்பீட்டு நிறுவனங்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதற்கு இது போதுமான காரணம் இல்லை. உபரி என்ற பிரச்சனையை சரியான முறையில் எதிர்கொள்வதற்கான வழி தீவிரமான விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதுதான். அதற்குப் பதிலாக கதவை இழுத்து மூடிவிடுவது தீர்வல்ல. வளர்ந்த பொருளாதார நாடுகள் 2008ஆம் ஆண்டின் நெருக்கடியை புதிய மற்றும் சிறந்த விதிமுறைகள் மூலம் எதிர்கொண்டன. சிக்கலான காப்பீட்டுத் திட்டங்களை அவை கைவிட்டன. மேலும் அவை வெளிப்படையான வர்த்தகம் மூலம் கையாளப்பட்டன. சாளர முறையில் அவை கையாளப்படவில்லை. சர்வதேச நிதி நெருக்கடியை உருவாக்கிய சிக்கலான காப்பீட்டுத் திட்டங்கள் தீவிரமான விதிமுறையால் இந்தியாவில் அனுமதிக்கப்படவில்லை. இந்த நிலைமையில் இந்தியா பயப்படுவதற்கு காரணங்கள் ஏதும் இல்லை. உண்மையில், வளர்ந்த நாடுகளின் நிதிச் சந்தைகள் போல நெருங்கிச் செல்வதற்கு இந்தியாவின் நிதிச் சந்தைகளில் கட்டுப்பாட்டுத் தளர்வு இன்னமும் குறிப்பிடத்தக்க அளவு தேவைப்படுகின்றது. ஆகையால் இந்தியாவில் வெளிநாட்டு காப்பீட்டு நிறுவனம் செயல்படுவது பற்றிய பயம் மிகைப்படுத்தப்பட்ட ஒன்றுதான். இந்தியா காப்பீட்டுத் துறையைப் பொறுத்த அளவில் அது வலிமையான சுதந்திரமான ஒழுங்குபடுத்தும் அமைப்பைப் பெற்றுள்ளது. அதுதான் இந்திய காப்பீட்டு ஒழுங்குபடுத்தும் மற்றும் வளர்ச்சி ஆணையம் (ஐ.டி.ஏ.ஐ). இந்த ஆணையம் இந்திய நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவது போலவே வெளிநாட்டு நிறுவனங்களையும் ஒழுங்குபடுத்தலாம்.

சீனாவின் புகழ்பெற்ற சீர்திருத்தத் தலைவர் டெங் ஜியோபிங் ஒரு முறை கூறினார்: "பூனை கறுப்பு நிறமா அல்லது வெள்ளை நிறமா என்பது பிரச்சனை இல்லை. அது எலியைப் பிடிப்பதுதான் நோக்கம்". இந்தியாவிற்கு, காப்பீட்டு வசதிகளை அனைத்து மக்களுக்கும் எடுத்துச் செல்வதுதான் முன்னுரிமைச் செயலாகும். சுதந்திரம் பெற்று 67 ஆண்டுகள் சென்ற பிறகும்கூட, இந்திய நிறுவனங்கள் இந்த முன்னுரிமைச் செயலை நடைமுறைப்படுத்துவதில் தோல்வியே அடைந்துள்ளன. பாதுகாப்பு கவசத்தை கைவிட்டு காப்பீட்டுத் துறையில் வெளிநாட்டு பங்கேற்புக்கு அழைப்பு விடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. கிடைக்கக்கூடிய பலன்கள் எதிர்பார்க்கும் இடர்ப்பாடுகளைவிட பல மடங்கு மேல் என்பது முக்கியம். ●

## ரயில் பாதைகளில் பாதுகாப்பு எச்சரிக்கை முறை, மோதல் தவிர்ப்பு முறை

**குறிப்பிட்ட ரயில் பாதைகளில் ரயில் பாதுகாப்பு எச்சரிக்கை முறை, ரயில்கள் மோதல் தவிர்ப்பு முறைகளை அமைக்க இந்திய ரயில்வே திட்டமிட்டுள்ளது. இதனை விரைவில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு. சுரேஷ் பிரபாகர் பிரபு தெரிவித்துள்ளார்.**

**இன்று நாடாளுமன்றத்தில் ரயில்வே பட்ஜெட்: 2015–16ஐ தாக்கல் செய்த மத்திய ரயில்வே அமைச்சர் ரயில் பெட்டிகளில் தீ பிடிப்பதைத் தடுக்கவும், விபத்துக்களின்போது ரயில் பெட்டிகள் ஒன்றின் மேல் ஒன்று மோதுவதை தடுக்கவும் புதிய முறைகளை கண்டுபிடிக்குமாறு ஆராய்ச்சி, வடிவமைப்பு மற்றும் தர நிலைகள் அமைப்பினை கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.**

**ரயில்கள் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகும் சம்பவங்களைத் தடுப்பதற்காக முதன்மை பாதைகளைப் புதுப்பிக்கும் அதேநேரம் கனமான தண்டவாளங்கள் கொண்ட நவீன பாதைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சிறந்த வெல்டிங் தொழில்நுட்பங்களும் ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், தண்டவாளங்களைச் சோதனை செய்ய அனலாக் இயந்திரங்களுக்கு பதிலாக மிகவும் நம்பகமான டிஜிட்டல் வகை இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.**

# வெட்டவெளியில் கழிப்பதை தவிர்க்க : முதலில் மனமாற்றம் தேவை

– ரோஹித் குப்தா ஐ.ஏ.எஸ்.,

கடந்த பட்ஜெட் உரையில் பேசிய நிதி அமைச்சர் 2019ஆம் ஆண்டு மகாத்மா காந்தியின் 150வது பிறந்த தினத்திற்குள் நாட்டில் முழு சாக்கடை கழிவு நீக்கப் பணியை உருவாக்க நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றும் அப்போது நாட்டிலுள்ள 120 கோடி மக்களுக்கும் கழிவறை வசதி கிடைக்கும் என்றும் கூறியிருந்தார். அதன்படி மத்திய அரசு தேசிய அளவில் இந்தப்பணியை மேற்கொள்ள 65000 கோடி ரூபாய் ஒதுக்கியது. இந்தத்திட்டத்திற்கு தனியார் நிறுவனங்களும் உதவுவார்கள். இந்தப்பணியை முடிக்க நிதி ஒரு தடையாக இருக்காது என்றும் கூறப்பட்டது. தேவைப்பட்டால் ஸ்வட்ச் பாரத் அப்யான் என்ற பிரதம மந்திரியின் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்படும். ஆகவே 2019க்குள் சாக்கடை கழிவு நீக்க மேம்பாட்டிற்கும் சுகாதாரத்திற்கும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசு தீவிரமாக உள்ளது. திட்டக்கமிஷனுக்கு மாற்று ஏற்பாடு பற்றி விவாதிக்க சமீபத்தில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் பஞ்சாப் போன்ற வளம் பெற்ற மாநில முதலமைச்சர்கள்கூட நிதி முதலீடு தேவைப்படும் பெரிய திட்டங்களுக்கு பதிலாக நமக்கு இப்போது தேவையானது எல்லாம் குடி தண்ணீர், கழிவறை போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதுதான் என்று கூறினார்கள்.

ஆகவே, கழிவறைகளை கட்டுவதிலும் அவைகளை பயன்படுத்துவதிலும்தான் ஒவ்வொரு மாநில அரசின் கவனமும் அதிகமாக இருக்க வேண்டும். சமீபத்தில் ராஜஸ்தானில் நடைபெற்ற கிராம, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பதவிகளுக்கான தெரிதலில் போட்டியிட்டவர்கள் தங்கள் வீட்டில் கழிவறை இருப்பதாகவும் அதை உண்மையிலேயே பயன்படுத்துவதாகவும் உறுதி யளிக்கவேண்டியிருந்தது.

ஆனாலும் கழிவறைகளை கட்டுவதற்குமுன் அரசு அவைகளை பயன்படுத்துவதற்கான மனமாற்றத்தை மக்களிடையே முதலில் ஏற் படுத்த வேண்டும். வெட்டவெளியில் கழிப்பதால் ஏற்படும் பிரச்சினைகளை அவர்களுக்கு விளக்க வேண்டும். உலக வங்கியின் ஒரு அறிக்கையின்படி வெட்டவெளியில் கழிப்பதால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு வயிற்றுப்போக்கு மற்றும் காலரா போன்ற வியாதிகள் ஏற்படுகின்றன. வெளிநாட்டவர்கள் வருவதையும் இது பாதிக்கிறது. அது மட்டுமல் லாமல் யூனிசெஃப்பின் அறிக்கையின்படி வெட்டவெளியில் கழிக்கப்பட்ட ஒவ்வொரு கிராம் மலத்திலும் பத்து மில்லியன் கிருமிகளும், ஒரு மில்லியன் நுண்ணுயிரிகளும், ஆயிரம் ஆயிரம் ஒட்டுயிர் முட்டைகளும் இருப்பதாகவும், அவைகள் காய்கறிகள் மற்றும் படிங்கள் மூலம் சந்தைக்கு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆகவே கொள்கை ரிதியாகப்பார்க்கும் போது வெட்டவெளியில் கழிப்பதால் பல கெட்ட விளைவுகள் ஏற்படுகின்றன. (இந்த கெட்ட விளைவுகள் பொதுவான மற்றும் தனியார் நிகழ்வுகளால் ஏற்படுகின்றன) இதை கொள்கை வகுப்பவர்கள் குறைக்க கடுமையாக உழைக்க வேண்டும்.

இளமையில் பாதிக்கப்படும் உடல் நலம் வயது முதிர்ந்தவர்களின் தொழிற்திறமைகளையும் செயலாக்கங்களையும் மிகவும் பாதிப்பதாக பொருளாதார ஆதாரங்கள் கூறுகின்றன. வாழ்க்கையில் முதல் இரண்டு ஆண்டுகளில் இந்த சேதம் ஏற்பட்டால் அதனை ஈடு செய்வது மிகவும் கஷ்டம் அல்லது

**ரோஹித் குப்தா ஐ.ஏ.எஸ்.,** மாவட்ட ஆட்சியர், பாலி

இயலாது. குழந்தைகளின் உடல்நலம் பாதிக்கப்படுவதுடன், பெண்களின் உடல் நலமும் தன்மானமும் பாதிக்கப்படுகின்றன. அவர்கள் விடிவதற்கு வெகு முன்பே எழ வேண்டும். அல்லது இருட்டும் வரை கழிப்பதற்காக அடக்கிக்கொண்டு காத்திருக்க வேண்டும். நேரத்தே கழிக்காவிட்டால் உடல்நலம் வெகுவாக பாதிக்கும்.

2014ம் ஆண்டு ஜூன் மாதம் ரைஸ் எனப்படும் மனிதாபிமான பொருளாதார ஆய்வு நிறுவனம் பீகார், ஹரியானா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களின் 13 மாவட்டங்களில் கழிவறை இருப்பு மற்றும் பயன்பாடு சார்ந்த ஒரு ஆய்வை மேற்கொண்டது. கிராமப்புறங்களில் கழிவறை இருந்த வீடுகளில் கூட 40 சதவிகிதம் வீடுகளில், ஒருவராவது வெட்டவெளியில் மலம் கழிப்பது அறியப்பட்டது. இது ராஜஸ்தானில் 57 சதவிகிதமாகவும் ஹரியானாவில் 35 சதவிகிதமாகவும் இருந்தது. இந்த கண்டுபிடிப்புகளின்படி வெறும் கழிவறைகளை கட்டிவிட்டால் மட்டும் போதாது. மக்களின் எண்ணங்களும் மாறவேண்டும் என்பது புலனாகிறது.

நான் அரசாங்க பணியை ஆரம்பித்த காலத்தில் ராஜஸ்தான் மாநிலம் ஜலாவர் என்ற பகுதியில் பணியாற்றிய போதுதான் கழிவு நீக்க துறைசார் அனுபவம் எனக்கு ஏற்பட்டது. அங்கு நல்ல வயல் வெளிகளும், மழையும் இருந்தது. மற்ற மாவட்டங்களைப்போல ஜலாவர் மாவட்டத்திலும் கழிவுநீக்கம் குறைவாகவே இருந்தது. 80% வீடுகளில் கழிவறை இல்லை. அது முதலமைச்சரின் தொகுதி வேறு. எனக்கு பயிற்சி அளித்த மாவட்ட ஆட்சியர் நிலைமையை வெகுவாக மாற்ற விரும்பினார். துவக்கமாக மூன்று கிராம பஞ்சாயத்துக்களை தூய்மையான கிராம பஞ் சாயத்துகளாக்க முடிவு செய்யப்பட்டது. மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒரு ஆர்வமிக்க பெண்ணாக இருந்தார். அப்பகுதி பெண்களிடம் அவருக்கு நல்ல தொடர்பு இருந்தது. அவர் மாலைப்பொழுதுகளில் அவர்களோடு பேசி, கழிவறை கட்டுவதற்கும் அதை பயன்படுத்துவதற்கும் ஆலோசனைகள் வழங்கியதை என்னால் மறக்க முடியாது. நாங்கள் ஒவ்வொரு குடும்பத்தையும் அணுகி அவர்களுக்கு உற்சாகமளித்தும், கெஞ்சி கேட்டுக்கொண்டும், சில சமயங்களில் மிரட்டியும் பேசினோம். மத்திய அரசின் குழு அங்கு வந்து விசாரித்து அந்த மூன்று கிராமங்களையும் தூய்மையான கிராம பஞ் சாயத்து திட்டத்திற்கு தெரிந்தெடுத்தன. எனக்கு இந்த திட்டத்தில் ஆழ்ந்த ஈடுபாடும் பகுதி மக்களிடையேயும் பணியாளர்களிடமும் நெருங்கிய தொடர்பும் ஏற்பட்டது.

நான் மாவட்ட ஆட்சியாளராக மூன்று மாவட்டங்களில் பணியாற்றிய போது கழிவுநீக்கத்துறையில் பணி செய்யும் அனுபவம் ஏற்பட்டது மூன்றும் சமூக, பொருளாதார, பண்பாட்டு முறைகளில் வேறுபட்டவை, ஜலாவர் மாவட்டத்தில் ஆண்டுக்கு 1000 மி.மீ மழை உண்டு. வளமான கிராமப்பகுதி. சூரு மாவட்டம் பாலைவனம், வெப்பம் குளிர்காலங்களில் மைனஸ் ஐந்து டிகிரி. கோடையில் 50 டிகிரி. நிலத்தடி நீர் பாசனத்திற்குகூட பயன்படாது. குடிப்பதற்கு முடியவே முடியாது. பாலி மாவட்டம் மார்வாரின் மையப்பகுதியில், விருந்தோம்பலுக்கு பெயர் போன ராஜஸ்தானின் பாரம்பரிய சமூக கட்டமைப்புடன் உள்ள இடம். ஆனாலும் இந்த மூன்று மாவட்டங்களிலும் மக்கள் நல்ல கழிவு நீக்க பயன்பாடுகளை மேற்கொள்ள விரும்பினார்கள். வெட்டவெளியில் கழிப்பதையும் விரும்பினார்கள். ஆகவே அவர்கள் கழிவறை கட்டுவதை யார் தடுத்தார்கள்? பல ஆய்வுகள் கூறியது போல பணம் ஒரு பிரச்சனை அல்ல. சமூக அணுகுமுறையும் முன்னோடிகளின் செயல்பாடுகளும்தான். இன்று நாடு முழுவதிலும் சுத்தமான பாரதம் எனும் திட்டம் நம் எண்ணத்தில் உள்ளது. தங்கள் செயல்களிலும், வார்த்தைகளிலும் பிரபலங்களும் மதியாளர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்தத்திட்டம் துவங்கப்பட்டதால் ஏற்பட்ட முக்கிய நன்மை என்ன என்று கேட்டால் (இந்த திட்டங்கள் நிலையான நல்ல விளைவுகளை தர நேரம் பிடிக்கும்) கழிவு நீக்கம் மற்றும் சுகாதாரம் பற்றிய பிரச்சினைகள் இப்போது வெளிப்படையாக மக்களால் விவாதிக்கப்படுவதே என்று கூறலாம். ஐரோப்பாவிலிருந்தோ, சிங்கப்பூரிலிருந்தோ

வருபவர்கள் தங்கள் நாடு எப்படி சுத்தமாக இருக்கிறது என்று விவரிப்பார்கள். ஆனால், நம்முடைய மக்கள் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டமாட்டார்கள். சாலையிலோ, பொது இடங்களிலோ குப்பை போடுபவர்களை புத்தியில்லாதவர்கள் என்று கூறமுடியாது, அவர்களுக்கு இந்தப்பிரச்சினை தெரியவில்லை என்றும் சொல்ல முடியாது. ஏருக்ன்றால், தங்கள் வீட்டிற்குள் குப்பை போட மாட்டார்கள். பொது சுகாதாரத்தில் அவர்களுக்கு அக்கறை இல்லை என்றும் கூறமுடியாது. தங்கள் வீட்டின் முன் சாலையோ, சாக்கடையோ பழுதாக இருந்தால் உடனே உள்ளாட்சித்துறைக்கு புகார் கொடுப்பார்கள். ஆனாலும் பொது இடங்களில் குப்பைகளை போடுவார்கள். ஏருக்ன்றால் அவர்களை யாரும் தடுப்பதில்லை. தான் செய்வது தவறு என்று அவர்களுடைய ஆழ் மனது கூறும். மனசாட்சியும் குத்தும். பல்லுக்கு தீங்கு ஏற்படும் என்று தெரிந்தும் குழந்தைகள், பெற்றோர்கள் அருகில் இல்லாதபோது, சாக்லெட் சாப்பிடுவது போல சமூகம் எப்போது இவர்களை தடுத்து அசிங்கப்படுத்துகிறதோ அப்போதுதான் குப்பைப் போடுவதும், அசுத்தம் செய்வதும் பெருமளவு குறையும்.

மேற்கூறியவை வெட்டவெளியில் கழிப்பதற்கும் பொருந்தும். தடுப்பவர்கள் இல்லாதபோது பொது இடங்களில் கழிப்பது தொடரும். குறிப்பாக கிராமப்புற பகுதிகளில் அரசு பணியாளர்கள் தடுக்கும்போது அதிக பயன் இல்லாததால் இந்த பிரச்சினை தொடர்வதற்கு முக்கிய காரணம் பொது மக்கள் அனுமதிப்பதுதான். பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, பயிற்சி அளித்து, அதிகாரமளித்தால் வெட்ட வெளியில் கழிப்பது நின்று விடும். நிரந்தரமாக இதை ஒழிக்க இதுதான் சிறந்த வழி என்று நான் கூறுவேன். உடன்கட்டை ஏறுவது, சிறார் திருமணம் போன்ற குற்றம் தான் வெட்டவெளியில் கழிப்பதும். இந்தப்பிரச்சினைகளைப்போலவே இதையும் அணுக வேண்டும். வெட்டவெளியில் கழிப்பதற்கும் ஏழ்மைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கிராமப்புற ஏழை மக்கள் உணவுக்கும் உடைக்குமே கஷ்டப்படும்போது அவர்களால் கழிவறை ஆடம்பரத்தை எப்படி ஏற்க முடியும்? ஆகவே நாம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு கழிவறை கட்ருகால் வெட்டவெளியில் கழிப்பது முடிவுக்கு வரும்.

இந்த அணுகுமுறையில் சில பிரச்சினைகள் உள்ளன. கிராமப்புறங்களில் உள்ள எல்லா குடும்பங்களும் கழிவறை கட்ட இயலாத நிலைமையில் இருக்கிறார்கள் என்று கொள்கிறோம். ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் கட்டப்படும் ஒரு கழிவறை என்று கூறினால் ஒரு வேளை இது பொருந்தும். ஆனால், செயல்படக்கூடிய ஒரு கழிவறையை ஐந்தாயிரம் ரூபாயில் கட்டிவிடலாம். வெட்டவெளியில் கழிக்கும் பிரச்சினை என்பது பணப்பிரச்சினை மட்டுமல்ல. சரியான விழிப்புணர்வும், எதற்கு முதலில் செலவழிப்பது என்ற சரியான எண்ணமும் இல்லாததுதான். சரியான விழிப்புணர்வு ஏற்படுத்தாமல் கழிப்பறையை மட்டும் கட்டிக்கொடுத்தால் அது தனக்கு சொந்தமானது என்று கூட நினைக்காமல், பயன்படுத்தாமல் விட்டுவிடுவார்கள். ஒரு ஆய்வின்படி அரசாங்கம் கழிவறை கட்டிக்கொடுத்த குடும்பங்களில் கூட ஒரு நபராவது வெட்ட வெளியில் கழிப்பதைப் பார்க்கிறோம். தனியார் பணத்தில் கட்டப்பட்ட கழிவறைகளில் குடும்பத்தில் இரண்டு பேராவது வெட்டவெளியில் கழிக்கிறார்கள். குடும்பங்கள் தாங்களே கழிவறையை கட்ட ஊக்கப்படுத்துவதுதான் நல்லது. சூரு மற்றும் பாலி மாவட்டங்களில் வெளி நிறுவனங்கள் இந்த கழிவறைகளை கட்டுவதை நாங்கள் தடுத்தோம். அதனால்தான் எங்களுக்கு வெற்றி கிடைத்தது. ஒரு குடும்பம் தானே கழிவறையை கட்டும் போது தங்களுக்கு தேவையான முறையில் அதை செய்வார்கள். ஒரு கழிவறையை கட்ட நல்ல இடம் தேவை, பொருட்களை சேகரிக்க வேண்டும். கட்டுபவர்களை அழைத்துவர வேண்டும் இதற்கெல்லாம் அதிகம் சிரமப்படவேண்டும். தங்களுக்கு உண்மையிலேயே ஒரு கழிவறை மிகவும் அவசியம் என்று உணரும் குடும்பம்தான் இந்த முயற்சிகளை மேற்கொள்ளும். அப்படி கட்டுபவர்கள்தான் அதனை முழுவதுமாக பயன்படுத்துவார்கள்.

கழிவறை கட்டுவதற்கு மானியம் அளிக்கும்போது வசதியுள்ளவர்கள்,

இல்லாதவர்கள் என்று இரு வகையாக மக்களை நாம் பிரிக்கிறோம். ஒரு கிராமத்தில் தகுதியான குடும்பத்திற்கு மானியம் வழங்கும் போது மானியம் பெறாத குடும்பங்கள் சில இருக்கத்தான் செய்யும். இப்படிப்பட்ட கிராமங்களில் பிரச்சினை அதிகம். ஏருக்ன்றால், தங்களுக்கு உதவி கிடைக்காத நிலையில் மற்ற பலருக்கு மானியம் கிடைக்கும் போது தங்கள் சொந்த செலவில் இவர்கள் கழிவறை கட்ட ஊக்குவிப்பது மிகவும் கருக்ம். இதனை ஈடு செய்ய நாங்கள் ஒரு முடிவு செய்தோம். முதலில் மானியம் அளிக்கவில்லை. ஒரு கிராமத்தில் பெரும்பான்மையான குடும்பங்கள் கழிவறைகளைக் கட்டி அதனை முழுவதுமாக பயன்படுத்தியபின்தான் அவர்களுக்கு மானியம் கொடுக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட இந்த இரண்டு சரத்துக்களும் நியாயமற்றதாக தோன்றலாம். ஆனால், கழிவு நீக்கம் மற்றும் பொது இடங்களில் கழிப்பதை தடுப்பதில் ஒரு கிராமத்தை ஒற்றுமையாக ஈடுபட வைப்பதில் எங்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது. மிகவும் ஏழை மக்களுக்கு உதவ கிராம பஞ்சாயத்துக்கு நிதி வழங்கப்பட்டது. அவர்கள் கழிவறைக்கு வேண்டிய கட்டுமானப்பொருட்களை வாங்கி மிக ஏழ்மையான குடும்பங்களுக்கு வழங்கினார்கள்.

### சமூக ஊக்கத்தின் பங்கு

ஒரு சமூகத்தையும் கிராமத்தையும் ஊக்கப்படுத்தி வெட்டவெளியில் (கழிப்பதை) நிறுத்தினால், மற்ற நல திட்டங்களும் அவர்களுக்கு கிடைக்கும் என்று செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராமமும், சமுதாயமும், சுத்தமான சுகாதார சூழ்நிலையில் வசிக்கவும் பிற பயன்களையும் பெறவும் விரும்புவார்கள். எந்தவொரு கிராமத்திலும் இன்னமும் கிடைக்காத வசதிகள் சில இருக்கும். அவைகளையும் பொது இடத்தில் கழிப்பதையும் இணைத்தால் பயன் கிடைக்கும். தற்போது ஒரு கிராமத்தில் வசதிகள் செய்ய எவ்வளவு பணம் செலவு செய்யப்படுகிறது என்பது அங்குள்ள மக்கள் தொகையையும், அரசியல் ஆதரவையும் பொறுத்ததாக உள்ளது. கழிவு நீக்கத்தையும் இதில் சேர்த்துக் கொண்டால், இந்தத்திட்டம் வெற்றி அடைய நல்ல வாய்ப்பு உள்ளது. ஒரு கிராமத்திற்கான நல திட்டங்களை செயல்படுத்த ஒரு குறிப்பிட்ட நிதியை ஒதுக்கி அக்கிராம மக்கள் பொது இடத்தில் கழிப்பதை நிறுத்தினால்தான் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று கூறினால் பயனளிக்கும். இந்த நிதியானது ஐந்தாண்டுகளுக்கான ஒன்றாக இருந்தால் மக்கள் பிற நலப்பணிகளைப்பெற்று மீண்டும் வெட்டவெளியில் கழிப்பதை தவிர்க்கமுடியும்.

### கருத்தை வலியுறுத்துவது

வெட்ட வெளியில் கழிப்பது என்பது ஒரு சமூகத்திற்கு எதிரின குற்றமாகும். அப்படித்தான் பார்க்க வேண்டும். சமுதாயத்தின் எல்லா மக்களும் வெட்டவெளியில் கழிப்பதால் ஏற்படும் தீங்குகளை வலியுறுத்த வேண்டும். அதைப்போலவே வெட்டவெளியில் கழிப்பதை நிறுத்திய குடும்பங்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவேண்டும். ஆகவே, ஒரு கிராமத்தோடு தொடர்புள்ள அனைத்து துறைகளும் இந்தக் கருத்தை வலியுத்த வேண்டும். இந்தத்திட்டத்தை நாங்கள் முதலில் செயல்படுத்தியபோது சாதாரண மக்கள் இதில் அதிகமாக ஈடுபாடு கொள்ளவில்லை. அப்போது இந்தத்திட்டத்திற்கு ஒரு உள்ளூர் அடையாளம் கொடுத்து அந்தப்பகுதியில் உள்ள அனைத்து பிரிவினைரையும் கிராம அதிகாரிகள், ஆசிரியர்கள், அடிப்படை ஊழியர்கள், சுகாதார மற்றும் வருவாய் அதிகாரிகள், தன்னார்வலர்கள் ஆகிய எல்லோரையும் கூட்டி ஒரு பயிலரங்கம் நடத்தினோம். உள்ளூர் மக்கள் விரும்பும் வகையில் அவர்களுக்கு ஊக்கமளித்து எல்லோரும் ஒன்றாக இருக்கும் அளவிற்கு மாற்றியமைத்தோம். எல்லா தரப்பு மக்களும் இந்தக்கருத்தை வலியுறுத்த பல யுக்திகளை கையாளவேண்டும். தங்கள் கழிவறையை பயன்படுத்தி வெட்டவெளியில் கழிப்பதை நிறுத்திய குடும்பங்களை பாராட்டும் வகையில் அவர்கள் வீடுகளில் சின்னங்களை பொருத்தலாம். அவர்களின் குடும்ப அட்டையிலும் இதைப்பதிக்கலாம். அடிப்படை மருத்துவ மையத்தின் மருந்து சீட்டிலும் இதைப்பதிக்கலாம். பள்ளிகளில் வெட்டவெளியில் கழிக்காத மாணவர்களை சிறப்பிக்கலாம். அரசாங்கமோ மற்ற அமைப்புகளோ கழிவறையை கட்டாமல் குடும்பங்களே செய்யுமாறு ஊக்குவித்தால் அது

தங்களுடைய சொத்து என்று உணர்வார்கள். வெட்டவெளியில் ஏற்படும் கழிவின் மூலம் எப்படி கிருமிகள் தண்ணீரிலும், பாலிலும், காய்கறிகளிலும் பரவுகின்றன என்பதை முதலில் விளக்கவேண்டும். கழிவறைகள் பயன்படுத்தப்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டும். பொது இடங்களில் கழிப்பவர்கள் மனம் கூசும்படி செய்ய வேண்டும். இதற்காக ஒரு தனிப்படையை அமைத்து அவர்கள் ஒவ்வொரு கிராமத்தையும் கண்காணித்து மக்களோடு இணைந்து இந்தக்கருத்தை வலியுறுத்த வேண்டும். இதில் பெண்களும், பெண்கள் குழுவையும் அதிகமாக ஈடுபடுத்தப்படவேண்டும். அவர்களுக்கு பயிற்சி அளிக்கவேண்டும். உள்ளூரில் கிடைக்கும் பொருட்களைக்கொண்டு குறைந்த செலவில் கழிவறைகளை தாங்களே அமைத்துக்கொள்ள பயிற்சி அளிக்க வேண்டும். ஒரு கிராமம் வெட்டவெளி கழிவு இல்லாமல் இருந்தால் அதனை பாராட்டும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மற்ற மக்கள் அதிகமாக புழங்கும் இடங்களில் இவ்வகையான கிராமங்களை பாராட்டும் வகையில் விளம்பரப்படுத்த வேண்டும். ஒவ்வொரு கிராமமும் முழு நிறைவு பெற்றிருக்கிறதா, ஓரளவு முன்னேற்றம் பெற்றிருக்கிறதா பின் தங்கியிருக்கிறதா என்பதை பிரித்து தெரியப்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் இந்த அலுவலகங்களுக்கு வருபவர்கள் பார்வையில் அதுபடும்போது சிலருக்கு பெருமையும், சிலருக்கு குற்ற உணர்வும் ஏற்படும்.

ஒரு சில வகையான சலுகைகளும், அணுகுமுறைகளும், சமுதாய விழிப்புணர்வும், கண்காணிப்பும் இருந்தால் மிக நல்ல பலன்கள் கிடைக்கும். பாலி மாவட்டத்தில் ஒரு கிராம பஞ்சாயத்தில் 25 நாட்களுக்குள் உண்மையில் ஒரு கிராமம் முழுவதும் வெட்ட வெளியில் கழிப்பது நீங்கிவிட்டது. இந்தத்திட்டம் ஆரம்பிக்கும்முன் அந்த கிராமத்தில் இருந்த 1200 குடும்பங்களில் பத்து சதவிகித வீடுகளில்தான் கழிவறை இருந்தது. ஆனால் அந்த கிராமத்தில் ஒட்டு மொத்த மக்களின் தன்னம்பிக்கையினால் ஒரு மாதத்தில் நிலைமை மாறிவிட்டது.

**முக்கிய குறிப்புகள்**

**"முழு கழிவு நீக்கம்" அடைய கழிவறைகளை கட்ட அரசு ரூபாய் 65 ஆயிரம் கோடி ஒதுக்கியுள்ளது.**

**அரசு கழிவறைகளை கட்டுவதற்கு முன் மக்களின் விருப்பங்களை தெரிந்து கொண்டு அவர்களுக்கு கழிவறைகளை பயன்படுத்தும் எண்ணத்தை ஏற்படுத்துவது.**

**வெட்டவெளியில் கழிப்பதால் மோசமான விளைவுகள் ஏற்படுவதை குறைப்பது.**

**அரசால் கட்டப்பட்ட கழிவறைகள் பயன்படுத்தப்படாமல் உள்ளது. மானியத்தொகையும் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது.**

**பெருமை சேர்க்கும் வகையில், முழு கழிவு நீக்கம் அடையும் பஞ்சாயத்துக்களுக்கு சிறப்பு நிதி உதவி வழங்குதல்.**

## தனியார் நிறுவனங்களின் பங்கு

சுத்தமான பாரதம் இயக்கம் துவங்கியபின் தனியார் நிறுவனங்கள் சமூக நல சேவைகள் செய்வதற்கு செய்யப்படும் செலவில் ஒரு பகுதி இந்தத்திட்டத்திற்கு வழங்கப்படுகிறது. ஆனால் முக்கிய பிரச்சினை என்னவென்றால் இந்த நிதியை எப்படி செலவு செய்வது என்பதுதான். தற்போது வணிக நிறுவனங்கள் செய்வதெல்லாம் இந்த மக்களுக்கு கழிவறையை கட்டிக்கொடுப்பதுதான். நாம் மேலே கண்டது போல இந்த இயக்கத்தில் இது கடைசி பணியாக இருக்க வேண்டும். சில குடும்பங்களுக்கு அதிக பணம் கொடுப்பதால் கிராமம் பிளவுபட வாய்ப்புள்ளது. மேலும் அரசாங்கமே மானியத்தொகையை அதிகரித்துள்ளது. பிறகு என்ன செய்யலாம்? மக்களுக்கு தகவல் அளித்து பயிற்சி அளித்து அவர்களை ஊக்குவிக்கலாம். பாலி மாவட்டத்தில் பெருமளவு தொழில் நிறுவனங்கள் உள்ளன. அவர்கள் யாவரும் எந்தவொரு குடும்பத்திற்கும் கழிவறை கட்டிக்கொடுப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால்

அவர்கள் ஒரு கிராம பஞ்சாயத்தை தத்தெடுத்துக்கொண்டு அங்கு மனமாற்றம் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மேற்கொள்ளும் சில நடவடிக்கைகளாவன : வெட்டவெளியில் கழிக்காத குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கு பள்ளிக்குப்பயன்படும் பைகள், உணவுப்பெட்டிகள் மற்ற பொருட்களை பரிசாக வழங்குதல், மக்களை பணியமர்த்தி அதிகாலையில் வெளியே சென்று வெட்ட வெளியில் மலம் கழிப்பவர்களோடு பேசி மனமாற்றத்தை ஏற்படுத்துவது, ஊக்குவிக்கும் அங்கீகாரப் பலகைகளை அமைப்பது, வெட்ட வெளியில் கழிப்பதினால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து பயிலரங்குகள் நடத்துவது போன்றன. முன்பு கழிவறைகள் கட்டுவதற்கு அவர்கள் செலவு செய்த தொகையை விட இது மிகவும் குறைவே. ஆகவே பெரிய அளவில் மக்கள் மனமாற்ற செயல்களை மேற்கொள்கிறார்கள். உதாரணமாக அம்புஜா சிமெண்ட் அறக்கட்டளை தத்தெடுத்த ஐந்து கிராம பஞ் சாயத்துகளில் ஒன்றில் ஒன்றரை மாதத்திற்குள் வெட்ட வெளியில் கழிக்கும் செயல் முடிவுக்கு வந்தது.

2010ல் ஊரக வளர்ச்சி அமைச்சகம் முதல் தர நகரங்களின் பட்டியலை, அங்கு நிலவும் கழிவு நீக்க செயல்பாடுகளுக்கு ஏற்ப தரம் பிரிக்கப்பட்டு அறிவித்தது. அப்போது ராஜஸ்தானின் ஒரு மாவட்ட தலைநகரான சூருர் கடைசி இடத்தில் இருந்தது. நான்கு வருடங்களுக்கு பிறகு இப்போது பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு மாதிரி அமைப்பாக உள்ளது. அதன் ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் வெட்டவெளியில் கழிப்பது முழுவதுமாக நீங்கிவிட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட கிராமப்பஞ்சாயத்துக்களிலும் 400 கிராமங்களிலும் வெட்ட வெளியில் கழிப்பது நின்று விட்டது. இவையெல்லாம் ஓராண்டுக்குள் நடைபெற்றது.

நாம் முன்பு ஏற்கனவே பார்த்தது போல வெட்டவெளியில் கழிப்பதற்கும், ஏழ்மைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சாப்பிடுவதற்கே கஷ்டப்படும் மக்கள் எப்படி கழிவறை கட்டுவதற்கு செலவு செய்வார்கள் என்ற வாதம் எழுகிறது. ஆகவே, அவர்களுக்கு நிதி அளித்தால் வெட்ட வெளியில் கழிப்பது நின்று விடும் என்று கூறுவார்கள். ஆனால் இது உண்மையில்லை. ஊக்கத்தொகை தவறாக பயன்படுத்தப்பட்டு அம் மக்கள் மீண்டும் மீண்டும் வெட்டவெளியில் கழிப்பது தொடரும். கடந்த ஆண்டுகளில் அரசாங்கம் கட்டிக்கொடுத்த கழிவறைகளை சரியாக பராமரிக்காததால் பயன்படுத்தப்படாமலும், பொருள்களை வைக்கும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டன. அதுபோலவே கழிவறை கட்டுவதற்கு கொடுக்கப்படும் மானியமும் தவறாக பயன்படுத்தப்படலாம். இந்த மானியத்தைப் பெற பயன்பெறுபவர்களுக்கும் பயன் பெறாதவர்களுக்குமிடையே ஒரு வகையான போட்டி ஏற்படுகிறது. ஏற்கனவே கழிவறை உள்ள குடும்பங்கள்கூட மானியத்தொகை பெற விரும்புகின்றன. பத்திரிகைகளில் வெளி வந்துள்ள செய்திகளின்படி ஏற்கனவே கழிவறை உள்ள வீடுகளில் அதை மீண்டும் வெள்ளை அடித்து சுத்தமான பாரத இயக்கம் திட்டத்திலிருந்து மானியத்தொகை பெற்று விட்டார்கள். அரசு அலுவலர்களுக்கு எண்ணிக்கை குறிக்கோள் விதிக்கும்போது அதை நிறைவு செய்ய அவர்களும் இதற்கு துணைபோகிறார்கள். இப்படி தனி நபர்களுக்கு மானியத்தொகை அளிப்பதற்கு பதிலாக ஒட்டு மொத்த கிராமத்திலும் வெட்டவெளியில் கழிப்பதை நீக்குவதற்கு பொதுவான காரியங்களை மேற்கொள்ள நிதியை ஒதுக்கலாம். எத்தனை கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன என்பதை கணக்கெடுப்பதற்கு பதிலாக எத்தனை பேர், எத்தனை கிராமங்கள் இதிலிருந்து விடுதலை பெற்றிருக்கின்றன என்பதைப் பார்ப்போம். நிதிக்கமிஷனும் இந்தப் பணிக்கு தனியாக ஒரு தொகையை நிர்ணயிக்கலாம்.

2006ல் மேற்கொண்ட உலக வங்கியின் ஆய்வு ஒன்றில் இந்திய குடிமக்கள் சரியான கழிவு நீக்க செயல்பாடுகள் மேற்கொள்ளாததால் இந்தியாவில் உள் நாட்டு மொத்த உற்பத்தியில் 6.4 சதவிகிதம் இபடிபு ஏற்படுவதாக கூறப்பட்டிருக்கிறது. நம்முடைய பிரதமர் அவர்கள் எண்ணியபடி 2019க்குள் இந்த நிலைமையை முற்றிலும் மாற்றுவோம் என்று நாம் உறுதி ஏற்போம். ●

# கூட்டரசு முறை ஏன் தேவை?

– விநாயக் நரேன் ஜீவாஸ்தவா

கூட்டரசு முறை என்பது, இயன்ற அளவுக்குப் பரந்துபட்ட மக்களையும், நிறுவனங்களையும் ஆட்சி முறையில் ஈடுபடுத்துவதான சமகால நவீன ஜனநாயக அரசியல் முறை ஆகும். கூட்டிணைவான நிறுவனங்களையும் கட்டமைப்புகளையும் ஏற்படுத்தி, அவற்றுக்கு இடையே அதிகாரத்தையும் நிர்வாகத்தையும் பகிர்ந்து அளிப்பதன் மூலம் இது சாத்தியமாகும். ஓர் அரசியல் முறையின் அரசியல் – நிலவியல் வரம்புகளுக்கு உள்ளே அதிகாரங்களையும் பொறுப்புகளையும் பகிர்ந்து அளிக்கும் கூட்டரசு முறை நவீன அரசியல் சித்தாந்தம் என்பதில் ஐயமில்லை. கூட்டரசு முறையாக மாறுவது என்பதே இவ்வாறு அதிகாரங்களையும் பொறுப்புகளையும் பகிர்ந்து அளிக்கும் நடைமுறைதான். மையத்தில் உள்ள அமைப்புகளும் விளிம்பில் உள்ள அமைப்புகளும் ஒருங்கிணைவதே கூட்டரசு. காலப் போக்கில் அனுபவங்களால் கண்டறிந்தவாறு அவற்றுக்கு இடையே அதிகாரப் பகிர்வும், பொறுப்புகளை ஏற்பதும் அமையும். எனினும், மையத்தில் இருந்து விளிம்பு நிலையில் உள்ள அமைப்புகளுக்கு மேலதிக அதிகாரப் பகிர்வு வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கைகள் எழுவதும், மைய நிலையில் உள்ள அமைப்பு அதற்கு நேர் மாறாக, தனக்கே அதிகப்படியான அதிகாரங்கள் வேண்டுமென அவற்றை அதிகரித்துக் கொள்ளும் போக்கும் நாம் நடைமுறையில் காணும் நிலைமையாகும். இந்த நிலைமை முன்னேறி மேலும் அதிக அளவில் அதிகாரமும் நிர்வாகமும் பகிர்ந்து அளிக்கப்படும்போது ஜனநாயக நெறி ஆழ வேரூன்றுகிறது எனலாம்.

இந்தியாவில் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் உள்ள அதிகாரங்கள் யாவை என்பது நமது அரசியல் சாசனத்திலேயே தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்விரு அரசுகளுக்கும் அடுத்ததாக மூன்றாவது நிலையில் உள்ளாட்சி அமைப்புகள் – அதாவது, மாநகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகள் போன்றவை உள்ளன. மத்திய அரசே பெரும்பான்மை அதிகாரம் கொண்டதாகவும், மற்ற எல்லா மாநில அரசுகளையும் மேற்பார்வை செய்வதாகவும் உள்ளது. நமது அரசியல் சாசனம் இயற்றப்பட்டபோதும், அதற்குப் பின்னர் பல்வேறு திருத்தங்கள் மூலம் மத்திய – மாநில அரசுகளின் செயல்படும் தளத்தையும், சட்டம் இயற்ற அதிகாரம் பெற்றுள்ள துறைகளையும், வருவாய் ஈட்டுவதற்கான வழிகளையும் வரையறுத்துக் கூறியுள்ளனர். இவ்வாறு வரையறுக்கப்பட்டவற்றைக் கால மாற்றத்திற்கு ஏற்பவும், நிகழ்கால தேவைகளுக்கு உகந்தவாறும் ஏற்றவாறு மாற்றிக் கொள்ளவும் முடியும். அரசியல் சாசனம் நடைமுறைப்படுத்தப்பட்ட கடந்த அறுபத்தைந்து ஆண்டுகளில் 120க்கும் மேற்பட்ட திருத்தங்களை நாம் மேற்கொண்டிருப்பதும் இதற்கு சாட்சியமாகும். எனினும் தற்காலத் தேவைக்கு எற்றவாறு கூட்டரசு உறவுகளை வலுப்படுத்தவும், அரசியல், நிர்வாக, நிதி அதிகாரங்களை உத்தம அளவில் பகுத்துக் கொள்ளவும் விரிவான முழு முயற்சி மேற்கொள்ள வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டுள்ளது. அவ்வப்போது தனித்தனியாக மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் ஓரளவுக்கத் துணை புரியும் என்றாலும், சில சமயங்களில் எதிர்பாராத எதிர்விளைவுகளையும் ஏற்படுத்திவிடக் கூடும். ஆகவே விரிவான முழு முயற்சி தேவை. இதனை கூட்டரசுத் தத்துவத்தைக் குறைத்து மதிப்பீடுவதாக யாரும் எண்ணிவிடலாகாது.

எந்த ஒரு ஜனநாயக அரசியல் அமைப்பானாலும், பொறுப்புள்ள கூட்டரசு ஆட்சி முறை இருந்தால் மட்டுமே அது கட்டுக்கோப்பாக நீடிக்க முடியும். எந்த ஒரு அமைப்பானாலும் அது நிரந்தரமானதாக இருக்க முடியாது; மாற்றம் பெறாமலும் நீடிக்க முடியாது. அதுபோலவே எந்த ஒரு சமூக அமைப்பும் அதன் அரசியல் முறையும், மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாமல் நிலையாக இருக்க முடியாது. கால ஓட்டத்திற்கு ஏற்ப அவை மாற வேண்டும்; அல்லது அப்படியே அழிந்து போக வேண்டும். ஆகவே ஜனநாயக நெறி ஆழ வேரூன்றும் போது கூட்டரசு முறை வலுப்பெற வேண்டும். வலுப் பெறுவதற்கு ஓர் அடையாளம்தான் அதிகாரம் படிப்படியாகப் பகிரப்படும் நிலை. மாறாக அளவிற்கு அதிகமாக அதிகாரங்கள் மையத்திலேயே குவிந்து இருந்தால் பிரிவினைச் சக்திகள் ஊக்கம் பெற்று அந்த அரசியல் அமைப்பின் கட்டுக் கோப்பே சிதறிவிடக் கூடும். நவீன வரலாற்றிலும் சம காலத்திலும் எதேச்சதிகார,

சர்வாதிகார அரசுகள் தமது சுபாவத்தினாலேயே சிதறியதைக் கண்டுள்ளோம்; அல்லது அத்தகைய அரசுகள் வீழ்ந்து, அடுத்து வந்த ஆட்சிகளோ இன்னும் விரும்பத் தகாதவையாய் மாற, சமூக – அரசியல் கிளர்ச்சிகள் தோன்றி, பெரும் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன; இல்லை எனில், அந்த எதேச்சதிகார – சர்வாதிகார அரசுகள் எப்படியேனும் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முயலுவதால் வரம்பற்ற வன்முறைகள் நிகழும். அவ்வாறாக ஒரு குழப்பத்தில் இருந்து இன்னொரு குழப்பம் என்று படிப்படியாக அழிவு நிலைக்கே அவை சென்றுவிடும். இத்தகைய நிலைமைக்கு மூல காரணம் அதிகார மையத்தில் இருந்தவர்கள் தமது அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள முன் வராததே ஆகும். அவ்வாறு பகிர்ந்து கொண்டால் தமது ஸ்திர தன்மையும் கட்டுக் கோப்பும் சீர்குலைந்துவிடும் என்ற தவறான எண்ணமும் மேலோங்கி இருந்தது. ஆனால் வரலாறு, இதற்கு நேர்மாறானதே உண்மை எனக் காட்டியுள்ளது. பெருமளவில் அதிகாரங்களைக் குவித்து வைத்திருந்த அரசியல் முறைகள், 'பகிர்ந்து அளிக்கிறேன்' என்று பெயரளவிற்குச் சொல்லிவிட்டு, மெய்யாக அப்படிச் செய்யாத போது, அவை வீழ்ந்து பட்டதை நாம் வரலாற்றில் காண்கிறோம்.

நவீன ஜனநாயக அரசுகளும் கூட தமது பிரிவுந்தியங்களுக்கும் விளிம்பு நிலை அமைப்புகளுக்கும் அதிகாரங்களை 'பகிர்ந்து அளிக்க தயங்குகின்றன. அதனால் கிளர்ச்சிகள் தோன்றி பிரிவினைகளும் ஏற்படுகின்றன. ஜனநாயக அரசியல் என்பது ஜனநாயக அமைப்புகள் மூலமும், அவற்றுக்கு அதிகாரங்களையும், நிர்வாக உரிமைகளையும் பகிர்ந்து அளிப்பதுதானே அன்றி மையத்தில் அதிகாரங்களைக் குவித்துக் கொள்வது அல்ல. எனவே கூட்டரசத் தத்துவமும், விளிம்பு நிலை அமைப்புகளைப் பெருமளவில் சுயாட்சி முறை மூலம் ஈடுபடுத்திக் கொள்வதுமே அரசியல் ஜனநாயகம் ஸ்திரமடைவதற்கு வழியாகும். இல்லை எனில், இனரீதியாகவும், மொழி அடிப்படையிலும், வட்டார ரீதியாகவும், சமய வழியிலும், இன்னும் பலவாறான அடையாளங்களுடன் தோன்றகின்ற குழுக்களின் பேரில் தொடர்ந்து பிரிவினைகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். எதேச்சதிகார அரசியல் அமைப்புகள், பிரிவினை சக்திகள் தலை எடுக்கும்போது பலப்பிரயோகத்தால் அவற்றை ஒடுக்கினாலும், பிரிவினை சக்திகள் மீண்டும் தலைகாட்டுவதைத் தவிர்க்க ஓரளவுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள முன் வருவதையும் நாம் காண்கிறோம்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பல நாடுகள் எதிர்கொண்ட பிரச்சினைகளின் மூலகாரணம் அதிகாரப் பகிர்வே. பல்வேறு இன, சமய, மொழி, பிரிவுந்திய குழுக்களின் அநொதமான விருப்பம், தம்மை தாமே நிர்வகித்துக் கொள்வது என்பதே. அந்த விருப்பத்தில் உள்ளூர் நிர்வாகம் என்ற கருத்துக்கும் அதிகாரப் பரவலாக்கம் என்ற சித்தாந்தத்திற்கும் முரணான போக்குகள் காணப்பட்டாலும்கூட அதிலே இழையோடுவது தம்மைதாமே ஆட்சி செய்வது என்ற ஜனநாயக வேட்கையே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அந்த வேட்கையைக் கண்டுகொள்ளாமல் இருப்பதோ, புறக்கணிப்பதோ, ஒடுக்குவதோ கூடாது. அவற்றுக்கு உண்மையான ஜனநாயக நெறியில் மதிப்பளித்து, அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து மையநோக்குப் போக்கில் இருந்து மாற்ற வேண்டும். சம்பிரதாயமாகவோ, அரைகுறை மனதுடனோ இதனைச் செய்வது பயனற்றதாகப் போய்விடுவதுடன் எதிர்விளைவுகளையும் உண்டாக்கிவிடலாம். அதிகாரப் பகிர்வுக்கு முட்டுக்கட்டை போடும் சுயநல சக்திகள், பல சமயங்களில் தமது முயற்சியில் வெற்றியும் பெற்றுவிடுகின்றன. அதனால் பிரச்சினைகள் அப்போதைக்கு ஒத்திவைக்கப்பட்டாலும், நீண்ட காலத்தில் அவை தீர்க்க முடியாத அளவுக்கு மோசமாகிவிடுகின்றன.

நவீன காலத்து பொருளாதார ஆதிக்கச் சக்திகள், மைய நிலையில் அதிகாரம் மிக்க அரசியல் முறைகள் வேண்டுமென விரும்புகின்றன. பல அடுக்கு அதிகாரப் பகிர்வுகளும், நிறுவன ஏற்பாடுகளும் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடைக் கல்லாக இருப்பதாக அந்த ஆதிக்கச் சக்திகள் நினைக்கின்றன. மையத்தில் அதிகாரம் குவிந்து இருந்தால் ஸ்திரத்தன்மை இருக்கும். கொள்கைகளை அனுமானிக்க முடியும். ஒரே சீரான பொருளதாரக் கொள்கைகள் இருக்கும், மைய அதிகார நிர்வாகத்தின் மூலம் ஒரே சீராகத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று அவை கூறுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, உள்ளூர்ச் சந்தையில் ஏகபோக வாணிகத்தைச் செய்ய முடியும் என்பதும் ஒரு காரணம். இவ்வாறாக அரசியல் அதிகாரப் பகிர்வுக்குத் தடையாக இருப்பது சுயநலம் மிக்க பொருளாதார ஆதிக்கச் சக்திகளே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உலகமயமாதல், சந்தைப் பொருளாதாரம் வலுப் பெறுதல், பன்னாட்டு முதலீடுகள் பெருகுதல் போன்ற சூழலில் இந்த ஆதிக்கச் சக்திகளின் கைகள் ஓங்கிவிடுகின்றன. ●

# தொலைநோக்கிய பார்வையில்
# *2015–16 நிதியாண்டுக்கான பட்ஜெட்*

A.கனகராஜ்

*2015–16ம்* ஆண்டுக்கான மத்திய அரசின் பொது பட்ஜெட் (வரவு செலவு திட்டம்) நிதித்துறைப் பொறுப்பை வகிக்கும் மாண்புமிகு அருண் ஜெட்லி நிதி அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்தார். இது பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான பாரதீய ஜனதா கூட்டணி அரசின் முதல் முழுமையான பட்ஜெட் ஆகும். *2015–16ம்* ஆண்டுக்கான பட்ஜெட்டில் பகட்டான அறிவிப்புகள் இல்லை. பொருளாதார வளர்ச்சி, சமூக பாதுகாப்பு முதலீடு ஆகியவற்றுக்கு மட்டும் முக்கியத்துவம் அளித்து பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது ஜன் தன் நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு, தூய்மை இந்தியா திட்டங்கள் மத்திய அரசின் சாதனைகளை பறைசாற்றுகின்றன. ஜன் தன் திட்டத்தில் கடந்த *100* நாட்களில் *1215* கோடி குடும்பங்கள் வங்கிச் சேவையைப் பெற்றுள்ளன. நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு ஏலம் வெளிப்படையாக நடத்தப்பட்டுள்ளது. 'தூய்மை இந்தியா' திட்டத்தில் *50* இலட்சம் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் மேலும் *6* கோடி கழிப்பறைகள் கட்டப்பட உள்ளன.

பணவீக்கம் *5* சதவீதத்துக்குள் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது. *2014–15* நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி *7.4* சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. *2015–16* நிதியாண்டில் *8* முதல் *8.5* சதவீதத்தை எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வெகு விரைவில் இரட்டை இலக்கு வளர்ச்சியை எட்டி விடுவோம். *2022*ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் வீட்டுவசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும். வரும் நிதியாண்டில் நகர்ப்புறங்களில் *2* கோடி வீடுகளும், கிராமப்புறங்களில் *4* கோடி வீடுகளும் கட்டப்படும். *5* கி.மீ தொலைவுக்கு ஓர் உயர்நிலைப்பள்ளி அமைக்கப்படும். *80,000* உயர்நிலைப்பள்ளிகள், *75000* ஆரம்ப நலிநிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படும். இந்திய மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு இளைஞர்கள், அவர்களின் வேலை வாய்ப்புக்காக திறன்சார் இந்தியா, இந்தியாவில் தயாரிப்போம் ஆகிய திட்டங்கள் தீவிரமாக செயல்படுத்தப்படும். மத்திய பட்ஜெட் ஒரு ரூபாயில் வரவு செலவு (பைசாவில்) முதலில் வரவு (பைசாவில்) பற்றி பார்ப்போம். *1.*கடன்கள், இதர இனங்கள் மூலம் *24, 2.*வர்த்தக நிறுவனங்களின் வரி *20, 3.*வருமான வரி *14, 4.* உற்பத்தி வரி *10, 5.* வரியில்லா வருவாய் *10,6.*சேவை வரி *9, 7.* சுங்கவரி, *9* மற்றும் *8* கடனில்லா முதலீடுகள், அதேபோன்று ஒரு ரூபாயில் செலவு பற்றி பார்ப்போம். *1.* மாநிலங்களுனக்கான வரி பங்கீடு *23,* கடனுக்கான வட்டி *20,* மத்திய அரசின் திட்ட ஒதுக்கீடு *11,* பாதுகாப்பு *11,* பிற திட்டமிடா செலவுகள் *11,* மானியம் *10* மாநிலங்கள், யூனி யன் திட்ட செலவு *9* மற்றும் *8* மாநிலங்கள், யூனியனின் திட்டமிடா செலவுகள் *5* என பைசா வில் செலவினங்களாக உள்ளன. *2015–16* ஆண்டுக்கான பட்ஜெட்டின் வரவு, செலவு அறிக்கை விபரம். (ரூபாய் கோடியில் வருமாறு. *1.* வருவாய் வரவு *11,41.575* முதலீடு வரவு *6,35,092* *3.* மொத்த வருவாய்; *17,77,477* *4.* திட்டமில்லா செலவு *13,2,200,* *5.* திட்டச் செலவு *4,65,277* *6.* மொத்த செலவு *17,77,477* *7.* வருவாய் பற்றாக்குறை *3,94,5472* *8.* நிதிபற்றாக்குறை *5,55,649* மற்றும் அடிப்படை பற்றாக்குறை *99,504* மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்களும் அவற்றுக்கான ஒதுக்கப்பட்ட நிதியும் வருமாறு. அணுசக்தி துறை ரூ.*10,912* கோடி, *2.* போக்குவரத்து உள் கட்டமைப்பு சாலை போக்குவரத்து ரூ.*14,031* கோடி, *3.* ரெயில் போக்குவரத்து ரூ.*10,050* கோடி *4.* சுகாதாரத்துறை ரூ.*33,152* கோடி *5.* தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு ரூ.*20,000* கோடி வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு ரூ.*22,407* கோடி மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் மற்றும் பிற ஊரக மேம்பாட்டு திட்டங்கள்

---

A.கனகராஜ், துணைத்தலைவர், Deutsche Bank, மும்பை

ரூ.79,526 கோடி 8. தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு ரூ.20,000 கோடி 9. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு ரூ.10,351 கோடி 10.நீர்வளம் (பெண்கள் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு) நிதி ரூ.1,000 கோடி, 12. மத்திய ரிசர்வ் போலீஸ் படை ரூ.14,089.38 கோடி 13. எல்லை பாதுகாப்பு படை ரூ.12,517.82 கோடி 14. இந்தோதிபெத் எல்லைப்படை ரூ.3,736.47 கோடி, 15 மத்திய தொழில் பாதுகாப்பு படை ரூ.5,196.65 கோடி 16. தேசிய பாதுகாப்பு படை ரூ.636.01 கோடி 17. உளவுப்பிரிவு ரூ.1,270.40 கோடி மற்றும் 18. இலங்கை அகதிகள் மறுவாழ்வு ரூ.50 கோடி. இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.2 லட்சத்து 46 ஆயிரத்து 727 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டு பட்ஜெட் தொகையை விட ரூ.24 ஆயிரம் கோடி கூடுதல் ஆகும். இதில் ரூ.94 ஆயிரத்து 588 கோடி ரூபாய் இராணுவத்தை நவீன மயமாக்க ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது நவீனமயமாக்கலுக்கு ஒதுக்கப்பட்டது. மத்திய பட்ஜெட்டில் சமூக பாதுகாப்பு திட்டங்கள் பற்றி நிதி அமைச்சர் குறிப்பிடுவது "இந்தியாவின் பெரும்பாலான மக்கள் எந்தவொரு காப்பீடும் செய்யாதவர்களாகவே உள்ளனர். சுகாதார காப்பீடு, விபத்து காப்பீடு என எதுவும் செய்வதில்லை" என கூறினார். மேலும் பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா என்ற காப்பீடு திட்டத்தை நிதி அமைச்சர் அறிவித்தார். இந்த திட்டத்தின் கீழ், ஆண்டுக்கு 12 பிரிமியம் செலுத்தினாலோ ரூ 2 லட்சம் விபத்து காப்பீடு செய்யப்படும் இதே போன்று அடல் பென்ஷன் யோஜனா என்ற ஓய்வூதிய திட்டத்தையும், பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா என்ற திட்டம் கொண்டுவரப்படுகிறது. இது இயற்கை மற்றும் விபத்து மரண காப்பீடுக்குரியது. மேலும் 'நை மன்ஜில்" என்ற ஒருங்கிணைந்த கல்வி மற்றும் வாழ்வாதார திட்டம் செயல்படுத்தப்படும் முறையான பள்ளிக்கல்வியை முடிக்காத சிறுபான்மை இனத்தவர், அந்த கல்வியை பெற்று, சிறப்பான வேலை வாய்ப்பை பெற வழி ஏற்படும் வகையில் நடப்பாண்டில் தொடங்கப்படுகிறது. கம்பெனிகள் மீதான வரி குறைக்கப்படுகிறது. அடுத்த 4 ஆண்டுகளுக்கு 5 சதவீதமாக வரி குறைக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் இதுவரை விதிக்கப்பட்டு வந்த 30 சதவீத கம்பெனி வரி இனி 25 சதவீதமாக இருக்கும். 10 ஆண்டுகள் இடைவெளிக்கு பின்பு கம்பெனி வரிகள் குறைக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரம் தொழில் துறைக்கு அளிக்கப்பட்டு வந்த வரிவிலக்கும், ஊக்கச் சலுகையும் ரத்து செய்யப்பட்டு உள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையில் பெரும் பணக்காரர்களும், கம்பெனிகளும் அதிக வரி செலுத்தும் விதமாக 2 சதவீத கூடுதல் வரி வசூலிக்கப்படுகிறது. அதே நேரம் ரூ.1 கோடி முதல் 10 கோடி ரூபாய் வருமானத்தை ஈட்டும் உள்நாட்டு கம்பெனிகளுக்கு 7 சதவீதம் கூடுதல் வரி விதிப்பு முறையையும் இந்த புதிய வரி அளவீடுகளின் மூலம் 9 ஆயிரம் கோடிக்கு ரூபாய் மத்திய அரசுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மின் உற்பத்தி திட்டங்களும் மேம்படுத்தப்படும் வகையில் 20 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய வகையில் தலா 4 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட 5 அல்ட்ரா மெகா அணு மின் திட்டங்கள் தொடங்கப்படும். கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 2வது யூனிட்டில் 2015–16ம் ஆண்டில் மின் உற்பத்தி தொடங்கும். 2015–16 ஆண்டில் ரூ.524 லட்சம் கோடி அல்லது மத்திய வரியில் 42 சதவீதத்தை மாநிலங்கள் பெறும். இது கடந்த ஆண்டு ரூ.3.38 லட்சம் கோடியாக இருந்தது. 2022ல் அனைவருக்கும் வீடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய சுதந்திரத்தின் 75வது ஆண்டான 2022ல் அனைவருக்கும் வீடு என்ற கனவு எட்டப்படும். 2020க்குள் அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படும். மேலும் 'மூத்த குடிமக்கள்' மேம்பாட்டு நிதி உருவாக்கப்படும். வெளிநாடுகளில் கருப்பு பணம் குவிப்பதை ஒழிக்க ஒரு சட்டமும், உள்நாட்டில் பினாமிகள் பெயரில் கருப்பு பணத்தை குவிப்பதை ஒடுக்க மற்றொரு சட்டமும் இயற்றப்படும். வெளிநாடுகளில் சொத்துக்கள் கருப்பு பணம் குவித்து அதை மறைத்து வரி ஏய்ப்பு செய்தால் 10 ஆண்டு வரை கடுங்காவல் சிறைத்தண்டனை வழங்கப்படும். வரி அளவில் 300 சதவீதம் அபராதமாக விதிக்கப்படும். வருமான வரி கணக்கு தாக்கல் செய்யாவிட்டாலோ அல்லது தாக்கல் செய்து போதுமான தகவல்களை தராமல் மறைத்தாலோ அதற்கு 7 ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத்தண்டனை வழங்கப்படும். ரூ.1 லட்சத்துக்கு அதிகமான மதிப்பில் எந்தவொன்றை வாங்கினாலும், விற்பனை செய்தாலும் 'பான்' என்னும் வருமான

வரி நிரந்த எண்ணை குறிப்பிடுவது கட்டாயம் என கூறப்படுகிறது. நாட்டில் மேலும் ஆறு எய்ம்ஸ் (அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம்) மருத்துவமனைகள் அமைக்கப்படும் அவை தமிழ்நாடு, அசாம், பஞ்சாப், இமாசலப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் நிறுவப்படும். பீஹாரில் மருத்துவ வசதிகளின் தேவையை கருதி அங்கு மேலும் ஒரு எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும். சிறு தொழில்களுக்கு உதவ 'சிறு தொழில் மேம்பாட்டு மறு நிதியளிப்பு முகமை' (முத்ரா) வங்கி ஏற்படுத்தப்படும். ரூ.20,000 கோடி மூலதனத்தில் ஆரம்பிக்கப்படும் இந்த முத்ரா வங்கியின் கடன் உத்தரவாத மூலதனம் ரூ.3,000 கோடியாக இருக்கும். பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ் இந்நிறுவனத்தின் எஸ்.சி.எஸ்.டி தொழில் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கடனுதவி வழங்கப்படும் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இப்போது 20 ஆயிரம் டன் தங்கம் மக்களிடம் முடங்கிக் கிடக்கிறது. இவை விற்கப்படுவதும் இல்லை, பணமாக்கப்பட்டு பயன்படுத்தப்படுவதும் இல்லை. எனவே பொதுமக்களிடம் அபரிமிதமாக உள்ள தங்கத்தை பணமாக செலவாணியாக்கி அவற்றை நாட்டு நலனுக்கு பயன்படுத்திக் கொள்ள பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி நிலையான வட்டியுடன் தங்கத்தை அடிப்படையாக கொண்டு பத்திரங்களை அரசு வெளியிடும் தங்கத்தை உலோகமாக வாங்குவதற்கு பதிலாக அரசு வெளியிடும் பத்திரங்களாக வாங்கும் திட்டமும் அறிமுகப்படுத்தப்படுகிறது. மேலும் மக்கள், வங்கிகளில் பணத்தை முதலீடு செய்து வட்டி பெறுவது போல தங்களிடம் உள்ள தங்கத்தை வங்கிகளில் முதலீடு செய்து வட்டி பெற முடியும். தங்க நகைக்கடை வைத்திருப்பவர்களும் இத்திட்டத்தை பயன்படுத்தி பயனடைய முடியும். அரசிடம் உள்ள தங்கத்தை நாட்டுக்குள்ளேயே மறு சுழற்சி செய்யும் வகையில் அசோக சக்கர முத்திரையுடன் அரசே தங்க நாணயங்களை வடிவமைத்து வெளியிடும் அரசே தங்க நாணயத்தை வெளியிடுவதால் அந்நிய செலாவணி பெருமளவில் குறையும். தூய்மை இந்தியா மற்றும் கங்கையை தூய்மைப்படுத்தும் திட்டங்களுக்கு வழங்கப்படும் நன்கொடைக்கு நூறு சதவீதம் வருமான வரி விலக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற மக்களை வங்கிச் சேவையில் இணைக்க நாடு முழுவதும் உள்ள 1,54,000 அஞ்சல் நிலையங்களை பயன்படுத்த திட்டமிட்டுள்ளது. வியர்வை சிந்தி இந்த உழைக்கும் விவசாயிகளின் நலனுக்காக வேளாண்மை கடன் வரம்பு இலக்கு மிக அதிகபட்சமாக 8.5 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. வங்கிகளில் விவசாயிகள் 7 சதவீதம் வட்டியில் ரூ 3 லட்சம் வரை கடன் பெறலாம். உரிய காலத்தில் திருப்பி செலுத்தும் விவசாயிக்கு 4 சதவீதம் வட்டி மட்டுமே வசூலிக்கப்படும். நபார்டு வங்கியின் கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்கு ரூ.25,000 கோடி ஒதுக்கப்படும். மேலும் கிராமப்புற நீண்ட கால கடன் திட்டங்களுக்காக ரூ.15,000 கோடி குறுகியகால கிராம கூட்டுறவு கடன்களுக்காக ரூ.45,000 கோடி கிராமிய வங்கிகளின் குறுகிய கால கடன்களுக்காக ரூ.15,000 கோடி ஒதுக்கப்படும். பரம்பரா கிரிஷி விகாஸ் யோஜனா, பிரதான் மந்திரி கிராம கிசாய் யோஜனா திட்டங்களில் சொட்டுநீர் பாசனத்துக்காக ரூ.5,300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் விளை பொருளுக்கு நியாயமான விலை கிடைக்க தேசிய வேளாண்மை சந்தை உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 2015ம் ஆண்டு சர்வதேச மண் வள ஆண்டாகும். இத்தகைய சூழலில் அரசு மண் வள அட்டைகளை அனைத்து விவசாயக் குடும்பங்களுக்கும் வழங்க உள்ளது. ஒரே சீரான விலை நிர்ணயத்துக்காக ஒரு தனி நிதியம் உருவாக்கப்பட்டு தொடக்கமான ரூ.500 கோடி ஒதுக்கியுள்ளது. பஞ்சாப்பில் தோட்டக்கலை ஆராய்ச்சி மைய உருவாக்கம், கேரள வேளாண் பல்கலைக்கழகத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். வருமான வரி உச்சவரம்பில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஆனால் 4.4 லட்சம் ரூபாய் வரி விலக்கு பெறமுடியும் என்று மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக தொலைநோக்கு பார்வை கொண்ட பட்ஜெட், வளர்ச்சிக்கு சாதகமான பட்ஜெட். கார்ப்பரேட் வருமான வரியை 30 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக குறைப்பதில், எதிர்கால வளர்ச்சிக்கு தேவையான தெளிவான திட்டமிடல் இருக்கிறது. கருப்பு பணத்தை மீட்க எடுக்கும் நடவடிக்கை வரவேற்கத்தக்கவை. நிதிப்பற்றாக்குறையை 3 சதவீதத்துக்குள் குறைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும், வளர்ச்சியில் எந்தவிதமான சமரசமும் செய்து கொள்ளவில்லை நடப்பு கணக்கு பற்றாக்குறையை குறைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. சேவை வரியை உயர்த்துவதன் மூலம் வருமானம் உயரும். இது வளர்ச்சிக்கு ஏற்ற தொலைநோக்கு பார்வை கொண்ட பட்ஜெட் ஆகும். ●

# இந்தியாவின் வளர்ச்சியில் ஐந்தாண்டு திட்டங்களின் பங்கு

முனைவர்.கா.செல்வகுமார்,

இந்தியாவின் சுதந்திரத்திற்கு முன்பே திட்டமிடுதலைப் பற்றி பொருளாதார நிபுணர்களும் நாட்டின் தலைவர்களும் ஆலோசனை செய்துள்ளனர். 1934 ஆம் ஆண்டு இந்தியதிட்டமிடலின் தந்தை என்று அழைக்கப்பட்டவர் எம். விஸ்வேஸ்வரய்யா. இவர் இந்தியாவின் திட்டமிட்ட பொருளாதாரம் (Planned Economy for India ) என்ற புத்தகம் மூலம் இந்தியாவின் பொருளாதார நிலையை படம் பிடித்து காட்டுக்ார். 1938 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் ஜவர்கலால் நேரு தனது தலைமையில் தேசிய திட்டக்குழுவை உருவாக்கினார். 1944 ஆம் ஆண்டு பம்பாயில் உள்ள எட்டு தொழில் அதிபர்கள் ஒன்று சேர்ந்து பம்பாய் திட்டத்தை உருவாக்கினார்கள். 1944 ஆம் ஆண்டு இந்திய அரசு திட்டமிடல் மற்றும் வளர்ச்சித்துறை ஒன்றை உருவாக்கியது. 1945 ஆம் ஆண்டு எம்.என் ராவ் மக்கள் திட்டம் ஒன்றை உருவாக்கினார். இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்கள் முன்னாள் சோவியத் யூனியனின் முன்மாதிரியிலேயே உருவாக்கப்பட்டது. மனிதவளம், மூலதனம், இயற்கை வளம் போன்ற அனைத்து தேசிய வளங்களை மதிப்பிட்டு அவைகளின் உயர்ந்தபட்ச பயன்பாட்டிற்கான திட்டங்களை வகுப்பதும், குறைபாடுள்ள வளங்களை வளர்த்தெடுப்பதும், மற்றும் பிரிவுந்திய ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து நாட்டின் ஒட்டுமொத்த சமூக பொருளாதார மேம்பாட்டினை அடைவதும் போன்றவை திட்டக்குழுவின் நோக்கங்களாக கொண்டு செயல்பட்டன.

### முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் (1951–1956).

1951 ஜூலை மாதம் திட்டக் கமிஷன்று தனது முதல் ஐந்தாண்டுத் திட்டவரைவை சமர்ப்பித்தது. அதன் தொடர்ச்சியாக 1952 டிசம்பர் மாதம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை வெளியிட்டது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வளமிக்கப் பன்முக வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உருவாக்கியது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் பொருளாதார சமூக நோக்கங்களுக்குச் செயலுருவம் கொடுப்பதற்கான முயற்சியாகும். நடைமுறையில் இருந்த பலதரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் ஒரு குடையின் கீழ் கொண்டு வரப்பட்டன. முதல் திட்டம் தேசிய பொருளாதார அணுகுமுறையை அறிமுகப்படுத்தியது. விரைவான தொழில் வளர்ச்சிக்குத் தேவையான உட்கட்டுமானத்தைப் பலப்படுத்தியது. இத்திட்டம் ஹராடு டோமர் மாதிரியை (Harrod - domar) அடிப்டையாக கொண்டது. நீர்பாசன வசதி, நீர்மின் திட்டங்கள் போன்ற விவசாயம் சார்ந்த திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத்திட்டக்காலத்தில் துவக்கப்பட்ட தாமோதர் திட்டத்தின் வாயிலாக மேற்கு வங்காளம் மற்றும் பீகார் மாநிலங்கள் பயன்பெறும் வகையில் அமைந்தது. அதேபோன்று ஒடிஷாவில் மகாநதியின் குறுக்கே கட்டப்பட்ட ஹிராகுட் பக்ரா நங்கல் அணை இந்தியாவின் மிகப்பெரிய பல்நோக்கு நதிநீர்த் திட்டம் ஆகும். மேலும் துங்கபத்ரா திட்டம் ஆந்திரி மற்றும் கர்நாடக மாநிலங்களுக்கும் கோசி திட்டம் பீகார் மாநிலத்துக்கும், சம்பல் திட்டம் மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மாநிலத்துக்கும் மற்றும் நாகர்ஜூனாசாகர் திட்டம் ஆந்திரப்பிரதேசத்துக்கும் என பல்வேறு மாநிலங்களுக்கும் பல்வேறு பயன்களை பெற்று தந்தது முதலாவது ஐந்தாண்டுத் திட்டங்களாகும். இத்திட்டக்காலத்தில் இலக்கை விட வளர்ச்சி அதிகமாக இருந்தது. விவசாய துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது.

### இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956– 1961)

கல்கத்தாவிலிருந்து இந்தியப் புள்ளி விவர நிறுவனத்தின் (Indian Statistical Institute) பேராசிரியர் டாக்டர் பி.சி.மகலாநோபிஸ் என்பவரால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு தயாரித்து வெளியிடப்பட்டது. இத்திட்டம் மகலா நோபிஸ் திட்டம் என்று அழைத்தனர். நாட்டின் பொருளாதார சமூக மாற்றங்களை விரைவுபடுத்தும் வகையில் அமைப்பு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் துரிதமான தொழில் மயமாதலை நோக்கமாகக் கொண்டு குறிப்பாக அடிப்படை மற்றும் கனரக தொழில் வளர்ச்சியில்

---

முனைவர்.கா.செல்வகுமார், உதவிப்பேராசிரியர், அரசியல் அறிவியல் மையம், பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

நாட்டம் காட்டியது. 1956ல் புதிய தொழில் கொள்கைத்தீர்மானம் (New Industrial Policy Resolution 1965) ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் விளைவே கூட்டுப் பொருளாதாரம் ஆகும். இரண்டாவது ஐந்தாண்டு காலத்தில் தொழில்துறையில் பல்வேறு வளர்ச்சிகளை வெளிப்படுத்தின. அவை, எஃகுத் தொழில்சாலைகள் பிலாய், பொக்காரோ, துர்பாயூர், ரூர்கேலா, பத்ராவதி போன்ற இடங்களில் துவங்கப்பட்டன. அலுமினியத் தொழிற்சாலைகள் கோயின, கோர்பா, ஆகிய இடங்களில் துவங்கப்பட்டன. கேத்தாரி, ஆக்னிகுண்டா, ராகா, மலன்ஜ்கண்ட் போன்ற இடங்களில் தாமிரச் சுரங்கங்கள் தோன்றின. துத்தநாகத்தினை உருக்கி உலோகத்தை பிரித்தெடுக்கும் ஆலைகள் உதய்பூர், தன்பாத் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன. இத்திட்டத்தின் வாயிலாக அடிப்படை சிறு தொழிற்சாலை வரிவுபடுத்துதல்; தொழிலாளர் உபைடிபை பயன்படுத்துதல், வேலைவாய்ப்பை பெருக்குதலால் இந்திய பொருளாதாரம் உயர்வுநிலை அடைந்தது.

## மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் (1961–1966)

மூன்றாம் ஐந்தாண்டு திட்டம் பொருளாதாரத்தை தற்சார்புடையதாகவும் சுயமாக இயங்கும் பொருளாதாரமாக மாற்றவும் எதிர்நோக்கியது. ஆனால் அன்னிய முதலீட்டை சார்ந்து இருந்தாலும், தேசிய வளத்தை பயன்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கலாலும் எதிர்பார்த்த வெற்றியடைய முடியவில்லை. சுய தேவை பூர்த்தி என்பதற்கு முன்னுரிமை வழங்கியது. உணவு தானிய உற்பத்தியில் தன்நிறைவு அடைதல் இதில் முக்கிய இடம் பெற்றது. 'தானியங்களை பாதுகாப்போம்" 1965ல் திட்டம் தொடங்கப்பட்டது. மேலும் பசுமைப் புரட்சி அறிமுகமானது. 1966 முதல் 1969 வரையிலான காலகட்டத்தில் மூன்று வருடத்திட்டங்கள் (Three Annual Plans) உருவாக்கப்பட்டன. ஓராண்டு திட்டகாலங்களில் பசுமைப் புரட்சியின் விளைவாக வேளாண்மை புரட்சி ஏற்பட்டு உணவுப்பொருட்களின் உற்பத்தி அதிகரித்து விலைவாசி குறைந்தது.

## நான்காவது ஐந்தாண்டு திட்டம் (1969–1974)

வாழ்க்கை தரத்தை உயர்த்துதல், சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சி போன்றவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. 1970ல் துவங்கப்பட்ட பால் உற்பத்திப் பெருக்கும் திட்டம் மூலம் பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. 1964–65ல் துவக்கப்பட்ட தீவிர கால்நடை வளர்ச்சி திட்டம் ; ( Intensive Cattle Development Programme) பால் உற்பத்திக்கு வித்திட்டது. இந்தியாவின் வெண்மைப் புரட்சியின் தந்தை என அழைக்கப்பட்டவர் வர்கீஸ் குரியன். தேசிய பால் வளர்ச்சி வாரியம் 1970ல் துவக்கப்பட்டது. இதன் முதன்மை நோக்கமாக மும்பை, டெல்லி, கொல்கத்தா, மற்றும் சென்னை ஆகிய பெருநகரங்களில் பால்சந்தையை மேம்படுத்தி ஒருங்கிணைந்த பால்வளத்துறை ஏற்படுத்தியது.

## ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம் (1974–1979)

வறுமை ஒழிப்பு, தொழில்வளர்ச்சி போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத்திட்டம் டி.டி தார் அவர்களால் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டது. 1975 ல் இருபது அம்சத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. உருளல் திட்டம் (Rolling plan) 1978–80ல் ஜனதா அரசால் செயல்படுத்தப்பட்டது. 1979ல் தேசியக் கிராமப்புற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

## ஆறாவது ஐந்தாண்டு திட்டம் (1980–1985)

வறுமை ஒழிப்புக்காக அதிரடி நடவடிக்கை களை மேற்கொள்ளுதல் இதன் முக்கிய இலக்காக விளங்கியது. மேலும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 1980ல் கொண்டு வரப்பட்டது.

## ஏழாம் ஐந்தாண்டு திட்டம் ( 1985–1990)

உணவு தானிய உற்பத்தி வளர்ச்சியை வேளாண்துறையில் அதிவேகப்படுத்துவதன் மூலம் வேலைவாய்ப்பினை அதிகரித்து அனைத்து துறைகளிலும் உற்பத்தி திறனை உயர்த்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. 1989ல் ஜவஹர் ரோஜ்கார் யோஜ்னா மற்றும் வேலைக்கு உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டன.

ஓராண்டுத் திட்டங்கள் 1990–1991 மற்றும் 1991–1992 கால கட்டங்களில் இரண்டு ஓராண்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இவையிரண்டுமேஎட்டாம்ஐந்தாண்டுத்திட்டத்தின் வரையறைக்குட்பட்டே அமைந்திருந்தன.

## எட்டாவது ஐந்தாண்டு திட்டம் (1992–1997)

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி பதிப்பு உருவாக்கப்படும்போது நாட்டின் பொருளாதாருக் கொள்கையில் திறமைமயமாதல் தனியார்மயமாதல் மற்றும் உலகமயமாதல் போன்ற பெருத்த மாற்றங்கள் ஏற்பட்டன. புதிய பொருளாதாருக் கொள்கை இக்கால கட்டத்தில்தான் அறிமுகம் செய்யப்பட்டது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி அதிவேகமாக

| துறை | ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம் | பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் | பதினொன் றாவது ஐந்தாண்டுத் திட்டம் | பன்னிரெண் டாவது ஐந்தாண்டுத் திட்டம் |
|---|---|---|---|---|
| விவசாயம், வனம், மீன்வளம். | 2.5 | 2.3 | 3.2 | 4.0 |
| சுரங்கம் | 4.0 | 6.0 | 4.7 | 8.0 |
| உற்பத்தி, மின்சாரம், எரிவாயு. | 3.3 | 9.3 | 7.7 | 9.8 |
| நீர் பகிர்மானம் | 4.8 | 6.8 | 6.4 | 8.5 |
| கட்டுமானம் | 7.1 | 11.8 | 7.8 | 10.0 |
| வாணிபம், போக்குவரத்து, தகவல் தொடர்பு | 8.0 | 11.2 | 9.9 | 11.0 |
| நதி, இன்சூரன்ஸ் | 8.0 | 9.9 | 10.7 | 10.0 |
| சமூகம், சமூகசேவை | 7.9 | 5.3 | 9.4 | 8.0 |
| மொத்த உள்நாட்டு வருவாய் | 5.5 | 7.8 | 8.2 | 9.0 |
| தொழில் | 4.3 | 9.4 | 7.4 | 9.0 |
| சேவைத்துறை | 7.9 | 9.3 | 10.0 | 10.0 |

மாறத் தொடங்கியது. தொழில் துறையை நவீனப்படுத்துதல் இத்திட்டத்தின் முக்கிய இலக்காக இருந்தது.

**ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம் (1997 –2002)**

இந்திய சுதந்திரத்தின் 20ஆம் வருடத்தில் ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டது வளர்ச்சியோடுக் கூடிய சமுதாய நீதி மற்றும் சமத்துவத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. மத்திய தரமான வாழ்க்கையையும், உற்பத்தி நிறைந்த வேலைவாய்ப்பை உருவாக்குதலையும், வட்டாரச் சமநிலை மற்றும் தற்சார்புடமையையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது. சுத்தமான குடிநீர் வழங்கல், அடிப்படை சுகாதார வசதியை மேம்படுத்துதல், துவக்கநிலைக் கல்வியை விரிவுபடுத்துதல், ஏழைகளுக்கு வீட்டுவசதி உதவி, குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கல், கிராமங்களை முக்கிய நிலைகளுடன் இணைத்தல், பொதுவழங்கல் அமைப்பை ஏழைகளுக்கு மேலும் பயன்படும் விதத்தில் மாற்றியமைத்தல் என்னும் ஏழு அடிப்படை பணிகளுக்கு (Seven basic Minimum Servicer ) முன்னுரிமையாக கொண்டு செயல்பட்டன. மனிதவள மேம்பாடு, தனியார் மயமாதல், தனியார் துறைக்கு வாய்ப்புக் கொடுத்தல் போன்றவற்றிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

**பத்தாவது ஐந்தாண்டு திட்டம் (2002–2007)**

பொருளாதார வளர்ச்சியில் 8 சதவிகிதத்தை எட்டுதல் என்பதை முக்கிய இலக்காக கொண்ட இத்திட்ட காலத்தில் 7.8 சதவிகிதம் வரை வளர்ச்சி விகிதமாக அமைந்தது. இத்திட்ட காலத்தில் இலாபகரமான வேலைவாய்ப்பினை கூடுதலாக ஏற்படுத்துதல், அனைவருக்கும் தொடக்க கல்வியானது 2007க்குள் கிடைக்க செய்தல், 2007க்குள் குழந்தைகளின் இறப்புவீதம் குறைத்தல், அனைத்து ஊரகங்களிலும் குடிநீர் வசதியை 2012க்குள் ஏற்படுத்துதல், 2007க்குள் மாசு அடைந்த நதிகள் மற்றும் ஆறுகளை சுத்தம் செய்தல் மற்றும் புதுப்பிக்கப்பட்ட இருபது அம்சத் திட்டம் தொடங்கப்பட்டது.

**பதினொன்றாவது ஐந்தாண்டு திட்டம் (2007–2012)**

அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய வளர்ச்சியே முக்கிய இலக்காக காணப்பட்டது. வேளாண்மை வளர்ச்சியை 4 சதவிகிதமாக உயர்த்துதல், தனிநபர் வருமானத்தை 2016 2017க்குள் இரட்டிப்பாக்குதல், உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் 9 சதவீதமாக அதிகரித்தல், அனைத்து கிராமங்களுக்கும் மின் வசதி, சாலை வசதி, தொலைபேசி வசதி ஏற்படுத்துதல், அனைத்து கிராமங்களுக்கும் 2012க்குள் இணையதள வசதியை ஏற்படுத்துதல் போன்ற திட்டங்கள் முதன்மையாக அமைந்தது.

**பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012–2017)**

இத்திட்ட காலமானது 9 சதவிகித பொருளாதார வளர்ச்சியை இலக்காக கொண்டுள்ளது. மிக வேகமான வளர்ச்சி, அனைத்தையும் உட்படுத்திய வளர்ச்சி, நிலைத்த மேம்பாடு (Faster Growth, Inclusive Growth, Sustainable) போன்றவையே இத்திட்டதின் முக்கிய இலட்சியங்களாக கொண்டு நடைமுறையில் உள்ளது. துறைவாரியாக வளர்ச்சி விகிதத்தை அட்டவணையில் அறியலாம். ●

# குடிமைப்பணி தேர்வு கட்டுரை வரைதல்
# (3 மணிநேரம் 250 மதிப்பெண்கள்)

கட்டுரை வரைவது ஒரு கலை; அது எழுதுபவரின் எழுத்து மூலமான வெளியீட்டு ஆற்றலின் அளவுகோல் எனலாம். அதனால் தான் இந்த அளவுக் கருவியை மத்தியப் பணியாளர் தேர்வு வாரியம் குடிமைப்பணி ஆர்வலரின் எழுத்தாற்றலைச் சோதிக்கும் கருவியாக்கியுள்ளனர். தேர்வுக்குத் தயாரிக்கும் போது ஆழ்ந்தும், அகன்றும் கற்றவற்றைக் கோர்வைப்படுத்தி தர்க்க ரீதியாக எடுத்துரைக்கும் ஆற்றலுக்கும் மொழிப் புலமைக்கும் ஒருசேர்ந்த ஒரு சோதனையாகக் கட்டுரை கேள்விகள் இடம் பெறுகின்றன.

கட்டுரை வரைதல் என்பது மாணவர்கள் சிறு வயது முதலே குறைந்தது இரு மொழிகளில் பள்ளிகளில் பயின்று பயன்படுத்திய ஒன்றுதான். எனினும் குடிமைப் பணித் தேர்வில் எழுதும் கட்டுரைகள் கல்வி நிறுவனங்களில் எழுதியவற்றை விட மாறுபட்டவை. இங்கே ஆர்வமாகப் படித்தல், தகவல் குறித்து அழுத்தமான நோக்கு ஆகியவற்றுடன் கருத்துக்களை விவரங்களை சுருக்கமாக, கோர்வையாக மூன்று மணி நேரம் எழுதும் திறன் ஆகியன முக்கியத்துவம் பெறுகின்றன. பகுப்பாய்ந்து, ஆழமாகப் புரிந்துள்ளனரா என்பதை அறிவது இக்கட்டுரைத்தாளின் நோக்கம் போலத் தோன்றுகிறது.

1993ம் ஆண்டு முதல்தான் குடிமைப் பணித் தேர்வுகளில் கட்டுரை வரைதல் இடம் பெறுகிறது. எழுத்தாற்றல் ஆங்கில மொழியில்தான் இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. ஆதலால் சதிஷ் சந்திரி குழு கட்டுரையை ஆங்கிலம் தவிர அரசியல் சட்டத்தின் 8வது பட்டியலில் இடம் பெறும் எந்த ஒரு மொழியிலும் எழுதலாம் எனப் பரிந்துரை செய்தது. பிரதான தேர்வை எழுத ஒருவர் தெரிந்தெடுக்கும் மொழியில் தான் கட்டுரைத் தாளையும் எழுத வேண்டும். இந்த கட்டுரை எழுதும் தேர்வுத் தாளுக்கு 200 மதிப்பெண் எனவும் வரையறை செய்யப்பட்டது.

கட்டுரை எழுதுதல் தொடர்பாக மத்தியப் பணியாளர் தேர்வாணையம் UPSC, 2013ம் ஆண்டு முதல் அமல்படுத்தும் புதிய நெறிமுறைகள் இதற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை விளக்குகிறது. 3 மணி நேரம் எழுத வேண்டிய இந்த கட்டுரை கேள்வியின் மதிப்பெண் 200 லிருந்து 250ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது IAS ஆர்வலர்கள் 3 மணி நேரத்தில் இன்னும் வலுவான, தெளிவான கட்டுரை வரைய வேண்டும் என UPSC எதிர்பார்க்கிறது.

கட்டுரைத் தேர்வின் விடைத்தாள்கள் ஒரே சீராக மதிப்பீடு செய்ய சில யோசனைகளை UPSC வர்ங்கி உள்ளது. அவை வருமாறு

1. பொருளைப் புரிந்து கொண்டமை
2. சொந்த சிந்தனை ஓட்டம்
3. தெளிவான கருத்து வெளியீடு

(ஒருங்கிணைந்த சிந்தனையும் கருத்து ஒற்றுமையும், கண்டறிய கட்டுரையை இரண்டு தேர்வாளர்கள் மதிப்பீடு செய்வது. இவர்கள் இருவரும் அளித்த மதிப்பெண்களின் சராசரியே தேர்வரின் மதிப்பெண் ஆகக் கொள்ளப்படும்.) திறமிக்க, தெளிவான சுருக்கமான கருத்து வெளியீட்டுக்கு நல்ல மதிப்பெண், மதிப்பீடு கட்டாயம் கிடைக்கும். விடைத்தாளில் ஒரு தலைப்பு பட்டியல் இடம் பெறும். இவற்றில் ஒன்றன் மீது கட்டுரை வரையவேண்டும். பட்டியலில் 6 முதல் 8 தலைப்புகள் வரை இடம்பெறுவது வழக்கம். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக இப்பட்டியலில் 4 தலைப்புகளே இடம் பெறுகின்றன. எனவே தலைப்பு எத்தனை என்பது குறிப்பிட இயலாது. எனினும், பொதுவான தேர்வுகள் செய்யுமளவு எண்ணிக்கையில் அவை இருக்கும் என நம்பலாம்.

### கட்டுரை எழுதுவதற்கான சில பயனுள்ள குறிப்புகள்

கவனமாக ஆராய்ந்த பிறகே எந்த தலைப்பில் கட்டுரை எழுத வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும்.

கட்டுரையில் இவ்வளவு வார்த்தைகள் இடம் பெற்றிருக்க வேண்டும் என்ற வரையறை ஏதும் இல்லை. கட்டுரையை பொதுவாக நான்கு பகுதிகளாக வகுத்துக் கொள்ளலாம்.

1. முகவுரை
2. வரலாறு
3. பொருளடக்கம்
4. முடிவுரை

முகவுரை என்பது மிகவும் முக்கியமானது. நல்ல தொடக்கமே பாதி முடிந்ததற்கு சமமாகும். இது கட்டுரை எழுதுவதற்கு மிகுந்த பொருத்தமானது என்றால் அது மிகையல்ல. கவனத்தை ஈர்க்கும் சவாலான தொடக்கங்கள் உரிய பலனைத் தரும். எனினும், கவனமுடன் கையாளப்பட வேண்டியவை.

முகவுரையைத் தொடர்ந்து தலைப்பின் வரலாறும் அது சார்ந்த வளர்ச்சியும் இடம்பெற வேண்டும். இந்த வரலாற்றுப் பகுதி தேர்வாளரின் தலைப்பு பற்றிய ஆழ்ந்த அறிவை வெளிப்படுத்துவதுடன், அவர் இது பற்றிய ஒரு முடிவுக்கு வரக்கூடிய தகுதி பெற்றவர் என்பதை பறைசாற்றுவதாகவும் அமையும்.

கட்டுரையின் பிரதான பாகத்துக்கு வரும்போது ஒவ்வொரு பத்தியிலும் ஒரு முக்கியமான விஷயம் இடம் பெற்றிருக்க வேண்டும். ஒரு பத்தியில் இடம்பெற்ற விஷயம் வேறு ஒரு பத்தியில் மீண்டும் இடம் பெறாததை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு மீண்டும் மீண்டும் இடம் பெற்றால் கட்டுரையின் சுவாரசியத்தை அது குறைத்திடும். இடம் பெறும் முக்கிய விஷயங்களுக்கு இடையே தொடர்பு இணைப்புக்களைப் பராமரிக்க வேண்டும்.

வாக்கியங்கள் சிறியதாக இருக்குமாறு பார்த்துக் கொள்ளும் அதே நேரத்தில் குறைந்தபட்ச அளவிலேயே இணைப்புச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். கட்டுரையில் பிரச்சினைக்குரிய விஷயங்கள் எவை என்பதுடன், அவற்றிற்கான தீர்வுகளும் இடம்பெற வேண்டும்.

முகவுரையைப் போலவே முடிவுரையும் முக்கியமானது. முடிவுரையில் கட்டுரையின் முழு சாராம்சத்தையும் தெரிவிக்க வேண்டும். கட்டுரை என்கிற சிறகடித்த எண்ணப் பறவைகளை அழகாக, ஆணித்தரமாக, பத்திரமாக தரையிறங்கச் செய்வது முடிவுரையின் ஒரு நோக்கம் என்பதை மறக்க வேண்டாம்.

கருத்தாழமும் அவற்றின் கோர்வையான அமைவும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியத்துவம் மொழிநடைக்கும் உண்டு. வார்த்தைத் தெளிவு, வாக்கிய நீளம் ஆகியவற்றுடன் சில சந்த அமைப்பு முறைகள் கொண்ட மொழிநடை சாலச் சிறந்தது. உரைநடைக்கு ஏன் எதுகையும், மோனையும் என்று எண்ணாமல் இவை இயல்பாக வந்து வாய்க்கும் வகையில் பயிற்சி பெற வேண்டும்.

பயிற்சி எல்லாத் தேர்வுகளையும் போல கட்டுரைத்தாள் தேர்வுக்கும் மிக அவசியமானது. எவை எல்லாம் இடம் பெறும் என எதிர்பார்க்கும் தலைப்புகளைத் தொகுத்து அவற்றில் ஏதாவது நான்கு அல்லது ஐந்து தலைப்புகளை குடவோலை முறையில் தேர்வு செய்து 3 மணிநேர மாதிரித் தேர்வு எழுதுவதே சிறந்த பயிற்சியாக அமையும். சொந்தமாகவோ, தெரிந்த பேராசிரியப் பெருமக்கள், பயிற்சியாளரிடமோ இவற்றை மதிப்பீடு செய்யலாம். UPSC நெறிமுறைகளின்படி இந்த மதிப்பீட்டைச் செய்து பார்த்து பயனடையலாம்.

**கட்டுரை வகைகளும், தலைப்புகளும்:**

கட்டுரைகள் பொதுவாக கீழ்க்கண்ட வகைப்படுகின்றன:

1. விளக்கக் கட்டுரைகள்
2. இயம்பல் அல்லது வர்ணனைக் கட்டுரைகள்
3. சிந்தனைக் கட்டுரைகள்

விளக்கக் கட்டுரை என்பவை பொருள், இடம், அமைப்பு ஆகியன பற்றி விளக்கிக் கூறுவன. வரலாற்று நிகழ்வுகள், சமுதாய, அறிவியல், தனிநபர் நிகழ்வுகள் ஆகியவற்றை கால வரையறையுடன் இயம்புவர், வர்ணிப்பது இரண்டாவது வகை கட்டுரை ஆகும்.

கருப்பொருட்கள், பிரச்சினைகள், நிகழ்வுகள் குறித்த கருத்துக்களைச் சோதிக்கவே சிந்தனைக் கட்டுரைகள் கேள்வித்தாளில் இடம் பெறுகின்றன. குடிமைப் பணித்தேர்வின் கட்டுரைத் தாளில் இடம் பெறுபவை இத்தகைய கட்டுரைத் தலைப்புகளே ஆகும். தனது சிந்தனைகளை அறிவார்த்தமாகப் பகுத்தாய்ந்து

தெளிவாக எடுத்துரைக்கும் வாய்ப்புகளே இத்தலைப்புகள் எனலாம்.

கடந்த கால கட்டுரைத் தேர்வுத் தாள் அடிப்படையில் பார்த்தால் தலைப்புகள் ...

1. அறிக்கை அடிப்படையிலும்

2. பிரச்சினைகள் அடிப்படையிலும்

3. பெரிய தலைவர்கள் சீர்திருத்தவாதிகளின் சிந்தனை அடிப்படையிலும் இருப்பதைக் காணலாம்.

இவற்றில் சில உதாரணங்களை இங்கு காண்போம்.

a) **அறிக்கை அடிப்படையிலான தலைப்புகள்:**

நன்னெறிகளின் அடிப்படை இரக்க உணர்வே (1993)

இளமை தவறுக்கும், நடுவயது போராட்டத்துக்கும், முதுமை மன வருத்தத்திற்கும் ஆனவை (1994)

பயனில்லா வாழ்க்கை இளவயது மரணம் (1994)

நோக்கமில்லா அறிவுத்தேடலே உண்மையான நாகரிகத்தின் உயிர்நாடி (1995)

நமது செயல்கள் நம்மை நிர்ணயிக்கின்றன. நமது செயல்களை நாம் நிர்ணயிப்பது போலவே (1995)

உண்மை வாழ்ந்து கற்பது, சொல்லிக் கொடுத்து கற்பதல்ல (1996)

உண்மை சமயத்தை தவறாகப் பயன்படுத்துவது இயலாது. (1997)

பெண்ணே இறைவனின் தலைசிறந்த படைப்பு (1998)

மிகச் சிறந்தவற்றைத் தேடுதல் (2001)

இளமை அறிந்திருந்தால் ..... முதுமை செயலாற்றல் கொண்டிருந்தால் .. (2002)

நல்லதென்றும், தீயதென்றும் ஏதுமில்லை, நமது சிந்தனைதான் அவற்றை அவ்வாறு அமைக்கின்றன (2003)

மேலே கண்டவையாவும் தத்துவார்த்தமான தலைப்புகள்:

சமீப காலமாக இத்தகைய தலைப்புகளில் கேள்விகள் கேட்பதில்லை. எனினும், கேட்கக் கூடாது என விதியும் இல்லை. ஆதலால் இவற்றுக்கும் தயாராகவே இருக்க வேண்டும்.

b) **பிரச்சினை அடிப்படையிலான தலைப்புகள் :**

நாட்டிற்கு மேலும் சிறந்த பேரிடர் நிர்வாக அமைப்பின் தேவை (2000)

ஆற்றல், அதிகாரமளித்தல் மட்டுமே நமது பெண்களுக்கு உதவ முடியாது (2001)

இந்தியாவில் உயர்கல்வியை தனியார் மயமாக்கல் (2002)

நவீன ஆதிக்கச் சக்திகளின் முகத்திரை (2003)

சிறு தொழில்துறையில் உலக மயமாக்கலின் தாக்கம் (2006)

பஞ்சாயத் ராஜ் (2007)

உலக மயமாக்கலும், தேசிய மயமாக்கலும் (2009)

படிங்குடியினப் பகுதிகளில் புதிய சுரங்கப் பணிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள காலக்கெடு (2010)

சிறிய மாநிலங்களை உருவாக்குதல் (2011)

தனியார் பொதுத்துறை இணைந்த பங்கேற்பு (2012)

இந்தத் தலைப்புகளில் கட்டுரை எழுதுவதற்கு அவை குறித்த முழுமையான அறிவு முதல் முக்கியப்படி.

அரை வேக்காட்டு அணுகுமுறை இத்தலைப்புகளுக்கு ஒவ்வாதவை. இவற்றில் உங்கள் கருத்து உறுதியுடன் ஏற்புடைய வகையில் இயம்பப்பட வேண்டும்.

**பெரிய தேசியத் தலைவர்கள் சிந்தனை அடிப்படை தலைப்புகள் :**

காந்திஜி வலியுறுத்திய சுதந்திரம், சுய ராஜ்யம், தர்ம ராஜ்யம் ஆகியவை இன்று பொருத்தமானவையா? (2002)

இது புதுமையான தலைப்புதான். எனினும், பொதுப்படிப்பும், தேர்வின் வரலாற்றுப் பாடத்தினைத் தயாரிக்கும்போது பெற்றஅறிவைக் கொண்டு இத்தலைப்பில் எழுத முடியும்.

இந்த மூன்று பிரிவுகளைத் தவிர வேறு வகையான, இந்த பிரிவுகளுக்கு இடைப்பட்ட வகையிலும் கட்டுரைத் தலைப்புகள் கேள்வித்தாளில் இடம் பெறலாம். இத்தகைய

தலைப்புகளை “விளக்குக” வகை எனப் பாகுபடுத்திக் கொள்வோம்.

**உதாரணத் தலைப்புகள்**

நாம் இந்தியர் என்பதில் பெருமிதம் கொள்ள வேண்டும் (2000)

சிறந்த உலகப் போர் எப்படி இருக்க வேண்டும் (2001)

நவீன தொழில்நுட்பக் கல்வியும் மனிதப் பண்புகளும் (2002)

குடிமைப்பணி அதிகாரி எப்படிச் செயல்பட வேண்டும் ? (1993)

இந்திய – அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் (2006)

சமுதாயத்தில் செயற்கைக்கோள் தொலைக்காட்சியின் தாக்கம் (2007)

பால்கன் மயமாக்கல் (2007)

இந்திய சினிமா (2011)

அறிவியலும், தர்க்கத் தத்துவமும் (2012)

**கட்டுரை விரிவாக்கத்துக்கு உதவும் குறிப்புகள் (உ–ம்)**

**இந்திய சினிமா :**

அறிமுகம்

இந்திய சினிமாவின் தோற்றம்

வரலாற்றுப் பின்னணி

இந்திய சினிமாவின் மாற்று முகங்கள்

சமுதாயத் தாக்கம்

பண்பாட்டை பாதிக்கிறதா? பண்பாட்டினால் பாதிப்படைகிறதா ?

கணிணி – அமைதிப் புரட்சியின் தூண்

முகவுரை. வாழ்க்கை கணிணிக்கு முன் மற்றும் பின்

கணிணியின் தோற்றம்

கணிணி அடிப்படைகள், வாய்ப்புகள்

கணிணியால் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள, ஏற்பட உள்ள மாற்றங்கள்

கணிணியால் வரும் பிரச்சினைகளும் அவற்றின் தீர்வுகளும்

முடிவுரை

**உயிரிச் சமநிலை பாதுகாப்பு என்பது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை அல்ல.**

முகவுரை. உயிரிச் சமநிலை, வளர்ச்சி வரையறை

உயிரிச் சமநிலை – முக்கியத்துவம்

வளர்ச்சியின் முக்கியத்துவம், பொருளாதாரக் கண்ணோட்டம்

உயிரிச் சமநிலை, உதாசீனம் – உதாரணம்

கண்மூடித்தன வளர்ச்சி நடவடிக்கைகளின் கேடுகள்

மாற்றுக் கண்ணோட்டம் – காரணம்

முடிவுரை

**கட்டுரைத் தாளில் கால நிர்வாகம்**

கட்டுரைத் தாள் 3 மணி நேரத்திற்கானது. இதில்

அரை மணி நேரம் தலைப்புக்களைப் படித்து, ஒன்றைத் தேர்வு செய்து, அதன் மீதான குறிப்புகளை எழுதி கோர்வைப்படுத்தி நேரம் , நீளம் திட்டமிடல்

2 மணி நேரம் கட்டுரை எழுதுதல் (நேரம், நீளம் வரையறைக்கு உட்பட்டு)

அரை மணி நேரம் மீண்டும் பார்த்து பிழை திருத்துதல்.

**ஆலோசனைகள்: தலைப்பு தேர்வு செய்தல் :**

நீங்கள் தேர்வு செய்யும் தலைப்பு நீங்கள் படித்த பாடத்தினைச் சார்ந்ததாகவோ, அல்லது நீங்கள் ஆர்வம் கொண்டதாகவோ, அல்லது இரண்டும் சேர்ந்ததாகவோ இருத்தல் நன்று.

**தலைப்பைப் புரிந்துகொள்தல் :**

உளவியல் ரீதியாகப் பார்த்தால் தலைப்பில் நீங்கள் தயார் செய்த பகுதிதான் கேட்கப்பட்டுள்ளதாக நினைக்க வாய்ப்பு உள்ளது. இது தவறாக, எதிர்பார்த்ததற்கு மாறாக இருந்தால் மதிப்பெண்கள் வராது. எனவே எச்சரிக்கையுடனும், திறந்த மனதுடனும் தலைப்பைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

**கருத்துக்களை முறைப்படி அமைத்து வழங்குதல்**

முறைப்படி அமைப்பது என்றால் ...

பொதுவிலிருந்து சிறப்புக்கு அல்லது

சிறப்பிலிருந்து பொதுவுக்கு அல்லது

காலக்கிரயமாக

எனப் பொருள்படும்.

கட்டுரை பொருளடக்கம் :

முகவுரை : சுருக்கமாக கட்டுரையின் 1/10 பங்கு அளவில் இருக்க வேண்டும். படிப்போரை வயப்படுத்துவதாக அமைய வேண்டும்.

வரலாறு : தலைப்பின் வரலாறும் அது சார்ந்த காலக்கிரயமான வளர்ச்சியும் இடம்பெற வேண்டும். இது உங்கள் தயாரிப்பின் ஆழ, அகலங்களை தேர்வாளருக்குத் தெரிவிக்கும் வாய்ப்பு என்பதை மறக்க வேண்டாம்.

உள்ளுரை (body) சுமார் 4 பத்திகள் இருக்கலாம். ஆனால் பொருள் விளங்க விரிவாக அமைய வேண்டும். உதாரணங்கள், புள்ளி விவரங்கள் இடம் பெறலாம்.

காரண, காரிய விளக்கங்களும் இடம் பெற வேண்டும்.

முடிவுரை : சுருக்கமான திறம்பட்ட வகையில் அமைய வேண்டும். உங்கள் விவாதச் சுருக்கமாகவோ அல்லது கட்டுரை உச்சக் கட்டமாகவோ அமையலாம்.

கவனத்தில் கொள்க:

தலைப்பை ஒட்டியே கட்டுரை எழுதல் வேண்டும். தலைப்பை மறுத்து கட்டுரை எழுதுதல் கூடாது. உதாரணத்துக்கு, “உயிரிச் சமநிலை பாதுகாப்பு என்பது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை அல்ல” என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்து எழுதும் பொழுது, உயிரிச்சமநிலை பாதுகாப்பு, வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக உள்ளது என்ற வாதத்தைத் தப்பித்தவறிக்கூட வைக்கக்கூடாது. அப்படிச் செய்தால் தலைப்பை நீங்கள் சரிவர புரிந்துகொள்ளவில்லை என்று அர்த்தமாகிவிடும். தலைப்பைச் சரிவர புரிந்துகொள்ளாமல் எழுதி கட்டுரைத் தாளில் பூஜ்யம் மதிப்பெண் பெற்றவர்களின் நிஜக்கதையும் உண்டு.

– கட்டுரை பத்தி பத்தியாகத் தான் எழுதப்பட வேண்டுமே அன்றி, Point-by-Point ஆக எழுதக்கூடாது. 1,2,3, . . . என்று Point போட்டு கட்டுரையை எழுதி குறைந்த மதிப்பெண் பெற்றவர்களின் கதையும் உண்டு.

கட்டுரையில் படம் வரைதலைத் தவிர்க்க வேண்டும். Flowchart போன்றவற்றையும் தவிர்க்க வேண்டும்.

## சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் காந்தியடிகள் வரலாற்று சிறப்பு மிக்க இடங்களுக்கு ரயில் சேவை

தென் ஆப்பிரிக்காவிலிருந்து மகாத்மா காந்தி இந்தியா திரும்பி 100 ஆண்டுகள் முடிவதை குறிக்கும் வகையில், இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழகம் (ஐ.ஆர்.சி.டி.சி) சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் காந்தியடிகள் தொடர்பான வரலாற்று சிறப்பு மிக்க இடங்களுக்கான ரயில் வசதி மேம்படுத்தப்படும் என்று மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு. சுரேஷ் பிரபாகர் பிரபு தெரிவித்துள்ளார். ரயில்வே பட்ஜெட் 2015–16 சமர்ப்பித்த போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அமைச்சர் தெரிவித்ததாவது: வியக்கத்தக்க இந்தியா (இன்கிரடபிள் இந்தியா) திட்டத்தின் மூலம் நாட்டின் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வியக்கதக்க (இன்கிரடபிள் இந்தியா) ரயிலுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும். கொங்கன் ரயில்வே சோதனை முறையில் மூன்று சக்கர மற்றும் டாக்சி ஓட்டுநர் சுற்றுலா வழிகாட்டியாக பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த சோதனை வெற்றிப்பெற்றதை முன்னிட்டு, இது மற்ற முக்கிய சுற்றுலா நிலையங்களுக்கும் கொண்டு வரப்படும்.

முக்கிய சுற்றுலா தலங்களை இணைக்கும் குறிப்பிட்ட ரயில்களின் ஒரு சில பேட்டிகளை சுற்றுலா முகமைகளுடன் வருவாய் பகிர்ந்து கொள்ளும் மாதிரி திட்டத்திற்கான வழிவகைகளும் கண்டறியப்படும். புதிய விவசாய முறைகளையும் சந்தைப்படுத்துதல் முறையையும் விவசாயிகளுக்கு கொண்டு செல்லும் வகையில் விவசாய பயணம் (கிஸான் யாத்ரா) என்ற சிறப்பு பயண திட்டத்திற்கான ஐ.ஆர்.சி.டி.சி நடவடிக்கைகளை எடுக்கும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# ரயில்வே பட்ஜெட்; 2015–2016...

T.O. ஸ்ரீதேவி

மத்திய ரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபு அவர்கள் தனது முதல் ரயில்வே நிதிநிலை அறிக்கையில் நான்கு இலக்குகளை நிர்ணயித்திருக்கிறார். அவை, 1. இனிமையான பயணம், 2. பாதுகாப்பான பயணம், 3. நவீன உள்கட்டமைப்புகள், மற்றும் 4. பொருளாதார ரீதியில் ரயில்வே துறை தன்னிறைவுடன் செயல்படுதல். இத்தகைய உயர்ந்த இலக்குகளை அடைவதற்கான வழிகளை கருத்தில் கொண்டே நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்திய பொருளாதாரம் என்பது உடலின் இதயம் போன்றது. இந்திய ரயில்வே நரம்பு மண்டலம் போன்றது. இதயத்துக்கு ரத்தத்தை எடுத்துச் செல்லும் முக்கிய பணியை ரயில்வே செய்கிறது. ரயில்வே ஒரு அடி முன்னேறினால் இந்தியா பல அடிகள் முன்னேறும் அதன் அடிப்படையிலேயே ரயில்வே பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் செயல்பாட்டு விகிதத்தை (Operating Ratio) 88.5 சதவீதமாக குறைக்க ரயில்வே திட்டமிட்டுள்ளது. செயல்பாட்டு விகிதத்தின் (வருவாயில் ஏற்படும் செலவு) அடிப்படையிலேயே ஒரு நிறுவனத்தின் செயல்திறன் மதிப்பிடப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் (2014–15) ரயில்வே செயல்பாட்டு விகிதம் 91.8 சதவீதமாக உள்ளது. இது இதற்கு முந்தைய ஆண்டில் அதிகபட்சமாக 93.6 சதவீதமாக இருந்தது. இந்நிலையில் வரும் நிதியாண்டில் செயல்பாட்டு விகிதத்தை 88.5 சதவீதமாக குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆண்டுகளில் இதுவே சிறந்த விகிதமாக இருக்கும். ஒரு நிறுவனத்தின் செயல்பாட்டு விகிதம் குறையும்போது லாபம் அதிகரிக்கிறது. இதன் மூலம் கிடைக்கும் கூடுதல் வருவாயை பயனுள்ள வகையில் முதலீடு செய்ய முடியும். ரயில்வே செயல்பாடு மற்றும் வணிக செயல் திறனில் அதிகபட்ச தரத்தை ரயில்வே அமைச்சகம் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. முடிவு எடுப்பதை விரைவுபடுத்துவது, பொறுப்பேற்கச் செய்வதை இறுக்கமாக்குவது, நிர்வாக தகவல் தொடர்பு முறையை மேம்படுத்துவது ஆகிய மாற்றங்களின் மூலமே ரயில்வே துறையின் செயல்பாட்டு விகிதத்தை குறைக்க முடியும்.

ரயில்வே பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ள முக்கிய அறிவிப்புகள் வருமாறு: வரும் நிதியாண்டில் ரயில்வே துறையில் கவனம் செலுத்தப்பட உள்ள 11 அம்சங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. சரக்கு ரயில்களில் சில பொருள்களின் மீதான கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி யூரியா 10 சதவீதம், இரும்பு உருக்கு 0.8 சதவீதம், மண்ணெண்ணெய், சமையல் காஸ் 0.8 சதவிகிதம்; நிலக்கரி 6.3 சதவிகிதம், மற்றும் சிமெண்ட் 2.7 சதவிகிதம் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. பயணிகள் கட்டணம் உயர்த்தப்படவில்லை. தற்போது நாளொன்றுக்கு 2 கோடியே ஒரு லட்சம் பயணிகள் ரயில்களில் பயணம் செய்கின்றனர்.இந்தஎண்ணிக்கையை3கோடியாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சரக்குகளை கையாளும் திறன் ஆண்டுக்கு 100 கோடி டன்னாக உள்ளது. இதனை 150 கோடி டன்னாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் நிறைவேற்றுவதற்கு ரெயில்வேயில் ரூ.8 லட்சத்து 56 ஆயிரத்து 20 கோடி மதிப்பிலான செயல்திட்டங்களையும் பின்வருமாறு அறியலாம். ரெயில் தடயங்களில் நெரிசலை தவிர்ப்பதற்கு ரூ.1 லட்சத்து 99 ஆயிரத்து 320 கோடி, ரெயில் தட விஸ்தரிப்புக்கு ரூ.19 ஆயிரத்து 320 கோடி, வடகிழக்கு, காஷ்மீர் இணைப்பு போன்ற தேசிய திட்டங்களுக்கு ரூ.39 ஆயிரம் கோடி, பாதுகாப்புக்கு ரூ 1 லட்சத்து 27 ஆயிரம் கோடி, தகவல் தொழில் நுட்ப வசதிகளை

**T.O. ஸ்ரீதேவி,** முதுநிலை மேலாளர், டாடா கன்சல்டன்சி சர்வீஸ், மும்பை

ஏற்படுத்துவதற்கு ரூ.5 ஆயிரம் கோடி, ரெயில் பெட்டிகளுக்கு ரூ 1 லட்சத்து 2 ஆயிரம் கோடி, பயணிகள் வசதிக்காக ரூ.1 லட்சம் கோடி, அதிலே ரெயில்களை விட பறக்கும் ரெயில் தடங்கள் அமைக்க ரூ.65 ஆயிரம் கோடி, பிறவகை செலவினங்களுக்கு ரூ.13 ஆயிரத்து 200 கோடி மற்றும் ரெயில் நிலையங்கள் அபிவிருத்திக்கு, தளவாட பூங்காக்கள் அமைப்பதற்கு ரூ.1 லட்சம் கோடி என 5 ஆண்டுகளில் நிறைவேற்றுவதற்கு ரெயில்வே துறை திட்டம் தீட்டியுள்ளது.

ரயில் பெட்டிகளில் 17,000 கழிப்பறைகள் பயோ கழிப்பறைகளாக மாற்றப்படும். 650 ரயில் நிலையங்களில் புதிதாக கழிப்பறைகள் கட்டப்படும். ஏ மற்றும் பி தரத்தைச் சேர்ந்த 400 ரயில் நிலையங்களில் வைஃபை (Wi-fi) என்னும் கம்பியில்லா இணையதள வசதியை ரயில்வே வழங்கவுள்ளது. இதேபோன்று தற்போது ரயில்களில் முன்பதிவு பெட்டிகளில் செல்போன்களை 'சார்ஜ்' செய்துகொள்ளும் வசதி உள்ளது. இந்த வசதி இனி சாதாரண பெட்டிகளில் (முன் பதிவு இல்லாதவை) பயணம் செய்யும் பயணிகளுக்கும் கிடைக்கும். சில குறிப்பிட்ட ரயில்களில் தற்போது உள்ள பெட்டிகளில் எண்ணிக்கை 24 என்று இருப்பது, 26 என்று அதிகரிக்கப்படுகிறது.

ரயில் வருகை மற்றும் புறப்பாடு பற்றிய தகவல் பயணிகளுக்கு செல்போனில் (S.M.S) குறுஞ்செய்தி மூலம் 15 முதல் 30 நிமிடங்களுக்கு முன்னதாக தெரிவிக்கப்படும். அடுத்த 2 ஆண்டுகளில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான ரயில் நிலையங்களில் உள்ள அறிவிப்பு பலகைகளில் ரயில்களின் வருகை, புறப்பாடு, முன்பதிவு, பொது மற்றும் அவசர தகவல்கள் பற்றிய விவரங்கள் வெளியிடப்படும். மேலும் ரயில்களில் பயணிகளுக்கு வழங்குவதற்கான படுக்கை விரிப்புகளை வடிவமைத்து தருமாறு, டெல்லியில் உள்ள நிப்ட் என்னும் தேசிய பேஷன் டெக்னாலஜி கல்வி நிறுவனமிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. ரயில் பயணிகளுக்கு வழங்கப்படக்கூடிய படுக்கை விரிப்புகளின் வடிவமைப்பு, தரம், மற்றும் சுத்தம் மேம்படுத்தப்படும் என ரயில்வே பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயிலில் பயணம் செய்கிறபோது ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் தொடர்பு கொண்டு புகார் செய்வதற்கு 'ஹெல்ப் லைன்' சேனல் அறிவிக்கப்பட்டுள்ளது. 138 என்ற தொலைபேசி எண்ணில் பயணிகள் தொடர்பு கொண்டு புகாரைப் பதிவு செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இச்சேவை 24 மணி நேரமும் கிடைக்கவும், நாடு முழுவதும் அமுல்படுத்தப்படுகிறது. பயணிகளின் குறைகளை தீர்க்கும் வகையில் நடமாடும் சேவை மையம் ஒன்று உருவாக்கப்படுகிறது. முதலில் வடக்கு ரயில்வேயில் சோதனை ஓட்டமாக மார்ச் 1ம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது. பாதுகாப்பு தொடர்பான அவசரமான, முக்கியமான பிரச்சினைகளை ரெயில் பயணிகள் புகார் செய்வதற்கு 182 என்ற கட்டணமில்லா தொலைபேசிக் சேவையும் அறிமுகம் செய்யப்படுகிறது.

நெடுந்தொலைவு ரயில்களில் தற்போது 60 நாட்களுக்கு முன்பு ரயில் பயணசீட்டை முன்பதிவு செய்யும் வசதி உள்ளது. இனி மேல் 120 நாட்களுக்கு முன்பே பயணசீட்டை முன்பதிவு செய்யலாம். மேலும் முன்பதிவில்லாத ரயில் டிக்கெட்டுகளை ஐந்து நிமிடங்களில் பெற்றுக் கொள்ள ரயில் நிலையங்களில் சிறப்பு வசதிகள் செய்யப்படும். மூத்த குடிமக்கள், கர்ப்பிணிகள், நோயாளிகள், மாற்றுத் திறனாளிகளுக்கு முன்பதிவு பெட்டிகளில் கீழ்படுக்கை ஒதுக்கப்படும். மேல் படுக்கைகளில் பயணிகள் எளிதாக ஏறுவதற்கு மடக்கு ஏணி வசதி அமைக்கப்படும். ரயில் டிக்கெட்டை முன்பதிவு செய்யும்போது ஐ.ஆர்.சிடிசி இணையதளத்தில் உணவு வகைகளையும் முன்வதிவு செய்து கொள்ளலாம். தற்போது எக்ஸ்பிரஸ் ரயில்கள் தோராயமாக மணிக்கு 130 கி.மீட்டர் வேகத்திலேயே இயக்கப்படுகின்றன. எனவே 9 முக்கிய வழித்தடங்களில் ரயில்களின் வேகம் மணிக்கு 200 கி.மீட்டராக அதிகரிக்கப்படும். 3,438 ரயில்வே கிராசிங்குகளை அகற்ற ரூ.6,581 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 917 கிராசிங்குகளில் மேம்பாலம், சுரங்கப்பாலம் ஆகியவை அமைக்கப்பட உள்ளன. 10 முக்கிய நகரங்களில் சேட்டிலைட் ரயில் முனையங்கள் ஏற்படுத்தப்பட உள்ளன.

ரயில் பாதைகளின் நீளம் மேலும் 20 சதவீதம் வரை அதிகரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 7,000 கி.மீட்டர்

தொலைவுக்கு இரட்டை, மூன்று, நான்கு ரயில்வே பாதைகளை அமைக்கும் திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நாடு முழுவதும் பெரும்பாலான மாநிலங்களில் ரூ.96,182 கோடியில் 77 ரயில்வே திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. 6,608 கி.மீட்டர் தொலைவு ரயில்வே பாதை மின்மயமாக்கப்பட உள்ளது. மும்பை – அகமதாபாத் இடையே புல்லட் ரயில் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆய்வறிக்கை இந்த ஆண்டு மத்தியில் அரசிடம் சமர்ப்பிக்கப்படும். வட கிழக்கு மாநிலங்கள், ஜம்மு காஷ்மீரில் ரயில்வே கட்டமைப்பு மேம்படுத்தப்படும். ரயில்வே துறையில் புதுமையை புகுத்துவதற்காக "காயகல்ப்" என்ற பெயரில் ஒரு கவுன்சில் அமைக்கப்படும் என்று ரயில்வே பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது ரயில்களில் நவீன தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்துவது குறித்து ஆலோசனையை வழங்கும். மேலும் வரும் நிதியாண்டில் ரயில்வே துறையை கணினி மயமாக்குவதற்கு ரூ.393.36 கோடியும் ரயில்வே ஆராய்ச்சிப் பணிகளுக்காக ரூ.40.44 கோடியும் ஒதுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்துறையின் அடிப்படை ஆராய்ச்சிக்காக குறிப்பிட்ட சில பல்கலைக்கழகங்களில் 4 ரயில்வே ஆராய்ச்சி மையங்கள் நிறுவப்பட உள்ளது.

வாரணாசியில் உள்ள ஐ.ஐ.டியில் ரயில்வே தொழில் நுட்பத்துக்காக 'மாளவியா' பெயரில் ஓர் இருக்கை ஏற்படுத்தப்படும். ரயில்வே துறையில் பயன்படுத்த வேண்டிய புதிய பொருட்களை உருவாக்குவதற்கு இந்த அமைப்பு உதவும். ரயில்வேயில் உள்ள அபரிமிதமான மனித வளத்தை முழுமையாக பயன்படுத்தவும், ஊழியர்களின் திறமைகளை சர்வதேச தரத்துக்கு உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக மனித வள மேம்பாட்டுத்துறைக்கு தனியாக சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். பயணிகளுடன் நெருங்கி மேம்படுத்த புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் ஒரு பகுதியாக ரயில்வேயில் உள்ள முக்கியமான ஊழியர்களுக்கு குறிப்பாக ரயில்வே பாதுகாப்புப் படையினருக்கு யோகா பயிற்சி அளிக்கப்படும். ரயில்வேதுறையில் எரிபொருள்களுக்கு கூடுதல் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. குறைவான மின்சாரத்தில் அதிக பயன்தரும் (L.E.D) எல்.இடி. பல்ப்புகள் பயன்படுத்தப்படும். ரயில்வே துறைக்கு தேவையான மின்சாரத்தை சூரிய சக்தி மூலம் பெற முன்னுரிமை அளிக்கப்படும். இதற்காக ரயில்வே இடங்களில் சூரிய மின் உற்பத்தி சாதனங்கள் அதிகம் அமைக்கப்படும். ஜம்முகாஷ்மீரின் காத்ரா ரயில் நிலையம் முழுமையாக சூரிய சக்தி மூலம் மின்சாரம் பெறவுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் அனைத்து ரயில் நிலைய மேற்பகுதியிலும் சூரிய மின் உற்பத்தி தகடுகள் பொருத்தப்படும்.

ரயில்வேயில் அதிக தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது. நீரை சிக்கனமாக பயன்படுத்த பிரதான ரயில் நிலையங்களில் தண்ணீரை மறுசுழற்சி செய்யும் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ரெயில்வேயின் வருவாயும், செலவினங்களும் ஒரு ரூபாயை அடிப்படையாக வைத்து கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு ரூபாய் வருவாயில் சரக்கு போக்குவரத்து மூலம் 65 காசுகளும், பயணிகள் கட்டணம் மூலம் 25 காசுகளும் கிடைப்பதாக ரெயில்வே பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. செலவினங்களை பொறுத்தவரை, ஒரு ரூபாயில் ஊழியர்களின் சம்பளம் மற்றும் இதரப்படிகளுக்கு 33 காசுகளும், ஓய்வூதியத்துக்கு 17 காசுகளும், எரிபொருளுக்கு 19 காசுகளும், இதர செலவினங்களுக்கு 9 காசுகளும் செலவழிக்கப்படுகிறது. ரயில் சுற்றுச்சூழலின் நண்பன் என்பதற்கு அமைச்சர் ஒரு புள்ளி விவரம் தந்திருக்கிறார். சாலையில் வாகனங்கள் பயன்படுத்தும் பெட்ரோலிய எரிபொருளில் 7% மட்டுமே ரயில்வே துறை இந்தியா முழுவதிலும் பயன்படுத்தப்படுகிறது. கரியமில வாயு வெளிப்பாடும் மற்ற வாகனங்களைவிட 80 சதவிகிதம் குறைவு. நினைக்கவே பெருமிதமாக இருக்கிறது. ரயில்வே பட்ஜெட் 2015 கவர்ச்சி அறிவிப்புகள் இல்லாத பயணிகளுக்காக ரெயில்வே பட்ஜெட்டாகவும் சாமானிய மக்கள் மீதான அக்கறையுடன் ரயில்களின் வேகம் மற்றும் சிறந்த நான்கு இலக்குகளை அடைவதற்கான வழிகளை கருத்தில் கொண்டு எந்த விமர்சனத்துக்கும் இடமில்லாத ரயில்வே நிதிநிலை அறிக்கையாக உள்ளது. ரயில்வே பட்ஜெட் 2015–16 பயணம் ஒரு சுமையில்லாத சுகமான பயணத்தை பயணிகள் இனிதாக பயணிக்கலாம். ●

## மைக்ரோபையோம் (MICROBIOME)

மைக்ரோபையோம் என்ற சொல்லை ஜோஷுவா லெடெர்பெர்க் என்பவர் வழங்கி உள்ளார். மைக்ரோபையோம் என்பது உடல் உண்ணிகள் மற்றும் நோயுண்டாக்கும் நுண்ணுயிர்கள் அடங்கிய சூழலியல் சமூகத்தைக் குறிக்கின்றது. நமது இரப்பைகுடல் பாதை, நமது வாயில் உள்ள உமிழ்நீர், தோலின் மேற்பரப்பு மற்றும் ஆழமான அடுக்கு (முகைசார் சுரப்பிகள், வாய் சவ்வு, நமது கண்களின் சவ்வு ஆகியவையும் அடங்கும்) போன்ற நமது உடல் பகுதிகளில் இவை வாழ்கின்றன. இந்த நுண்ணுயிரி சமூகங்கள் நமது உடலில் பல்வேறு நலம் பயக்கும் செயல்களை மேற்கொள்கின்றன. இச்செயல்கள் நமது வாழ்வுக்கு உதவியாக இருப்பவை ஆகும். உணவை செரிக்கவும் குடலின் மேற்பகுதியில் செரிக்காமல் உள்ள கார்போஹைட்ரேட்டுகளில் இருந்து நொதித்தல் மற்றும் உறிஞ்சுதல் செயல்முறை மூலம் ஆற்றலை உற்பத்தி செய்யவும் இவை உதவுகின்றன. நோய் உண்டாக்கும் அயல் பாக்டீரியா, பூஞ்சை, ஒட்டுண்ணிகள், நச்சுப் பொருட்கள் மற்றும் வைரஸ்கள் போன்றவை நாம் குடிக்கும் பானங்கள் அல்லது உண்ணும் உணவின் மூலம் நமது உடலுக்குள் ஊடுருவாமல் தடுக்கக்கூடிய இயற்கை தடுப்பரணாக இவை உதவுகின்றன. மேலும் பி1, பி2, பி3, பி6 மற்றும் பி12 போன்ற விட்டமின்கள், ஃபோலிக் அமிலம், பான்டோதெனிக் அமிலம் (Pantothenic Acid), விட்டமின் கே2 (மெனாகுயினோன்) போன்றவற்றின் ஒருங்கிணைப்புக்கும் உதவுகின்றன. மேலும் பித்த அமிலங்கள், ஸ்டீரோல் மற்றும் ஜினோபயோடிக்குகள் ஆகியவற்றின் வளர்சிதை மாற்றத்திற்கும் உதவுகின்றன. இத்தகைய பலன்தரும் நுண்ணுயிரிகள் (பொதுவாக இவை புரோபயோட்டோ எனக் குறிப்பிடப்படும்) குடலின் சுவர்களுக்கு அருகில் பி.எச் மதிப்பைக் குறைக்கின்றன. இதன் மூலம் இந்தப் பகுதியில் தீங்கு விளைவிக்கும் பாக்டீரியா வசிக்க இயலாது போகும்.

மனித மைக்ரோபையோம் என்பதில் 100 டிரில்லியன் நுண்ணுயிர்களுக்கும் மேலாக உள்ளன. இது மனித உடலில் உள்ள செல்களின் எண்ணிக்கையில் சுமார் 10 மடங்கு அதிகமாகும். அதேசமயம் மொத்த மைக்ரோபையோமின் எடை சுமார் 200 கிராம் அளவுதான் இருக்கும். இந்த மைக்ரோபையோட்டா பொதுவாக அசாதாரணமாக அதிக அளவு வளர்ச்சி இல்லாதவரை நோய் ஏற்படுத்தாதவை. அவை குறியீட்டு ரீதியில் ஒத்திசைவுடன் உள்ளன. எனவே யார் உடலில் இருக்கின்றனவோ அந்த உடலுக்குத் தீங்கு ஏற்படுத்தாதவை. மனித உடலில் காணப்படும் நுண்ணுயிரிகளில் பெரும்பான்மையானவை பாக்டீரியா அல்ல. மாறாக அவை பழங்கால உயிரியல் வடிவமான ஒற்றைச் செல் உயிர்களான ஆர்க்கேயா என அழைக்கப்படும் வகையைச் சார்ந்தவை. ஆய்வின்படி, உடலின் குறிப்பிட்ட பாகங்களில் வெவ்வேறு இன நுண்ணுயிரிகள் ஒரே விதமான செயலை வெவ்வேறு நபர்களுக்கு மேற்கொள்ளும். உதாரணமாக, இரண்டு நபர்களின் நாக்குகளில், இரண்டு வெவ்வேறு விதமான உயிரிகள் ஒரே விதமாக சர்க்கரையை துகளாக்குகின்றன.


## சர்ஃபேசி சட்டம் (SARFAESI ACT)

சர்ஃபேசி சட்டம் என்பது நிதிசார் சொத்துக்களை பிணையப்படுத்துதல் மறு கட்டமைப்புக்கு உட்படுத்துதல் மற்றும் பிணைய வட்டியை அமலாக்குதல் என்பதன் சுருக்கமாகும். கடன் வாங்கியவர்கள், தங்களது வீடு மற்றும் வர்த்தக சொத்துக்களுக்காக வாங்கிய கடனை குறிப்பிட்ட காலத்தில் செலுத்தத் தவறும்போது அச்சொத்துக்களை ஏலத்துக்கு விட வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் இச்சட்டம் அனுமதி அளிக்கின்றது. திரும்ப மீட்டல் அல்லது மறுகட்டமைப்பு ஆகிய நடவடிக்கைகள் மூலம் லாபம் தராத

சொத்துக்களை (என்.பி.ஏ) வங்கிகள் குறைத்துக் கொள்ள இது உதவுகின்றது.

ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக தனது வீட்டுக் கடனை திருப்பிச் செலுத்தாமல் கடன் வாங்கிய நபர் இருந்தால், வங்கி அவருக்கு தவணையை திருப்பிச் செலுத்த 60 நாட்கள் கால அவகாசம் வழங்கும். அந்தக் காலக்கெடுவுக்குள்ளும் கடன் வாங்கியவர் கடனை திருப்பிச் செலுத்த தொடங்காவிட்டால், வங்கி அந்தக் கடனை லாபம் தராத சொத்து (என்.பி.ஏ) என அறிவித்து கடனுக்கான தொகையை திரும்பப்பெற அச்சொத்தை ஏலத்துக்கு விடும். ஏலத்தொகை அச்சொத்தின் சந்தை மதிப்புக்கு ஏற்ப நிர்ணயிக்கப்படும். மேலும் வங்கிகள் குறைந்தபட்ச ஏலப்புள்ளி விலையையும் நிர்ணயிக்கும். ஏலத்தில் எடுக்கப்படும் தொகை வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை விட அதிகம் என்றால், அந்த அதிகப்படியான தொகை கடன் வாங்கியவருக்குத் தரப்படும். இத்தகைய ஏலம் பற்றிய விவரங்களை வங்கிகள் குறைந்தது ஒரு ஆங்கிலச் செய்தித்தாள் மற்றும் ஒரு தமிழ்ச் செய்தித்தாளில் விளம்பரப்படுத்தும். அதிலும் ஏலத்திற்கு 30 நாட்கள் முன்பாகவே விளம்பரங்கள் வெளியிடப்படும். ஏலம் கேட்க விரும்புபவர்கள் தங்களது விலைப்புள்ளியை முத்திரையிட்டு மூடிய உறைமூலம் வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். மேலும் குறைந்தபட்ச விலையில் குறைந்தபட்ச சதவிகிதத்துக்கான தொகையை கேட்புத் தொகையாக டெபாசிட் செய்ய வேண்டும். நடுவில் ஏலத்தில் இருந்து விலகினாலோ அல்லது ஏலம் எடுக்க முடியாமல் தோற்றாலோ இந்த டெபாசிட் தொகை திருப்பித் தரப்படும்.

இத்தகைய மூடி முத்திரையிட்ட உறைகள் ஏல தினத்தன்று ஏலம் கேட்பவர்கள் முன்னிலையில் திறக்கப்படும். அதிக விலைக்கு கேட்டுள்ளவர் பெயர் அறிவிக்கப்படும். ஏலத்தில் வென்றவர், தான் கேட்டுள்ள விலைத் தொகையில் 25 சதவிகிதத் தொகையை உடனடியாக ஏலத்தை உறுதி செய்து கொள்வதற்காக கட்ட வேண்டும். இத்தகைய சொத்துக்கள் சந்தைவிலையை விட 20–30 சதவிகிதம் வரை குறைவாக இருக்கும் என்பது சாதகமான அம்சமாகும். வங்கி ஏற்கனவே அந்த சொத்து மீது கடன் கொடுத்துள்ளதால், சொத்துரிமை பற்றிய தகவல் வெளிப்படையானதாக இருக்கும். பாதகமான அம்சம் என்னவென்றால் இத்தகைய சொத்துக்கள் எந்த நிலையில் உள்ளனவோ அந்த நிலையிலேயே ஏலத்திற்கு விடப்படும் என்பதுதான். அதேபோன்று வழக்கு நிலுவையில் இருந்தால் அல்லது கட்ட வேண்டிய தொகை ஏதும் இருப்பின் அவையும் ஏலம் எடுத்தவரின் பொறுப்பாகவே மாறும்.




சர்ஃபேசி சட்டம், 2002 வழங்கியுள்ள அதிகாரங்களைச் செயல்படுத்த இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டி நெறிமுறைகளை வழங்கியுள்ளது. பதிவு செய்தல், சொத்து மறுகட்டமைப்பு நடவடிக்கைகள், மதிப்பீட்டுக்கான விதிகள், நிதிசார் சொத்துக்களை கையகப்படுத்துதல் முதலானவற்றுக்கு இந்த வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. "பிணையப் படுத்தப்படும் நிறுவனங்கள் மற்றும் மறுகட்டமைப்பு நிறுவனங்கள் (ரிசர்வ் வங்கி) வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் செயல்நெறிகள், 2003" என இந்த நெறிமுறைகள் அழைக்கப்படுகின்றன. அண்மையில் 2015–16ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் ரிசர்வ் வங்கியில் பதிவு செய்துள்ள மற்றும் ரூ500 கோடி அல்லது அதற்கு மேல் சொத்து அளவுள்ள என்.பி.எஃப்.சிக்கள், சர்ஃபேசி சட்டம் 2002ன் கீழ் நிதிநிறுவனங்களாகக் கருதப்படலாம் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

# காந்திஜி வலியுறுத்திய சுகாதாரமும் "தூய்மை இந்தியா" இயக்கமும்

– மு. சுமுகன்

'தேசப் பிதா' என்றும் மகாத்மா என்றும் மக்களால் புகழப்படும் அண்ணல் காந்தியடிகள் சத்யாக்கிரஹ பாதையில் சென்று இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்தார் என்பதை அனைவரும் அறிவர். உண்மை, உழைப்பு, நேர்மை, அஹிம்சை ஆகிய கொள்கைகளைத் தன் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தவர் அவர். அதனால்தான் சத்யாக்கிரஹப் பாதையின் மூலம் அவரால் தொடர்ந்து செயலாற்ற முடிந்தது. அவரது சிந்தனைகளையும், கொள்கைகளையும் உலகமே பாராட்டுகின்ற இக்கால கட்டத்தில், அவர் தீவிரமாகக் கடைப்பிடித்த மற்றொரு, கொள்கையான சுத்தம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் அவரது சிந்தனைகளை நாம் கூர்ந்து நோக்குவது மிக அவசியமாகும். அவரது இக்கொள்கையை வலியுறுத்திதான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் "தூய்மை இந்தியா" என்ற இயக்கத்தை அறிவித்துள்ளார். இந்த இயக்கத்தைத் துவக்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தேவையான சுகாதார வசதிகள் இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் என்றார். சுத்தம், சுகாதாரம் ஆகிய இரண்டையும் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்நாட்களில் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்று மகாத்மா காந்தி கூறியதை நினைவு கூர்ந்த பிரதமர் நரேந்திர மோடி காந்தியின் இக்கொள்கைகள் இன்னும் ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் என்றும் 2019ஆம் ஆண்டில், அதாவது மகாத்மா காந்திஜியின் 150வது பிறந்த நாளின்போது "தூய்மை இந்தியா" திட்டம் முழுமை அடையும் என்றும் அதற்கு மக்களின் முழு ஒத்துழைப்பும் அவசியம் என்றும் கூறினார்.

காந்திஜி இந்தியாவிற்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தந்து 67 ஆண்டுகளுக்கு மேலாகியும் அவர் கண்ட கனவான சுகாதாரம் மிக்க இந்தியா இன்னும் நிறைவேறவில்லை என்றே கூறலாம். இந்தியாவில், குறிப்பாக கிராமப் புறங்களில் சுத்தமான கழிப்பறைகள் கிடையாது. மற்றும் பல கிராமங்களில் கழிப்பறை வசதிகளே கிடையாது. "சுத்தமும், சுகாதாரமும் மக்களின் உடல் நலத்திற்கும், வளமான சுற்றுப்புறச் சூழலுக்கும் மிக அவசியம்" என்று பல முறை பல்வேறு கூட்டங்களிலும், தான் நடத்திய பத்திரிகைகளிலும் வலியுறுத்தி வந்த மகாத்மா காந்தி, இவற்றை தன்னுடைய வாழ்நாளிலும் பலமுறை கடைப்பிடித்து வந்துள்ளார்.

1925ஆம் ஆண்டு மே மாத இதழான 'நவஜீவன்' (காந்திஜி நடத்திய பத்திரிகை) என்னும் குஜராத்தி மொழிப் பத்திரிகையில் "35 ஆண்டுகளுக்கு முன்னர் நான் அயல்நாட்டில் இருந்தபோது அங்கிருந்த கழிப்பறைகள் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் இருந்ததைக் கண்டேன். அதே போன்ற நிலை நம் நாட்டிலும் இருக்க வேண்டும். சுத்தம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரம் ஆகியவற்றை கடைப்பிடிக்கவில்லை என்றால் பலவிதமான நோய்கள் உருவாகும். நாம் பயன்படுத்தும் கழிப்பறைகள் மற்றும் பயன்படுத்தும் பாத்திரங்கள் ஆகியவற்றை மிகவும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்" என்று எழுதியுள்ளார்.

தென் ஆப்பிரிக்காவில் காந்திஜி தனது வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டிருந்தபோது, எளிய வாழ்க்கையையே நடத்திக் கொண்டிருந்தார். உழைப்பின் மேன்மையை நன்கு உணர்ந்திருந்த அவர், தனது பணிகளைத்தானே செய்து வருவார். தனது துணிமணிகளைத் தானே தோய்த்து சுத்தப்படுத்தினார். தென் ஆப்பிரிக்காவில் உள்ள பிரிட்டோரியா என்ற இடத்தில் வெள்ளைக்கார முடிதிருத்தும் தொழிலாளி காந்திஜியின் முடியைத் திருத்த மறுத்தார். (அப்போது அங்கே இனவெறி நிலவியது). ஆகவே, காந்திஜி தனக்குத்தானே முடிவெட்டிக் கொள்வதிலும் வெற்றிக் கண்டார். அவரது ஆசானான கோபாலகிருஷ்ண கோகலே (அப்போதைய இந்திய தேசியக் காங்கிரஸின் தலைவர்) தென் ஆப்பிரிக்காவிற்கு வந்தபோது அவரது உடைகளை சுத்தம் செய்து, சலவையும் செய்து தந்தார் என்றால், சுத்தத்திற்கு அவர் அளித்த முக்கியத்துவம் நன்கு விளங்கும். அதனால்தான், சுதந்திரப் போராட்டத்தின் போதும் அவரால் பல பணிகளை மேற்கொள்ள முடிந்தது. தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்று இருந்த காந்திஜி தனது சொந்த ஊரான ராஜ்காட்டிற்கு வந்திருந்தபோது, பம்பாயில் பிளேக் நோய் பரவியிருந்தது. சுகாதாரமற்ற சூழ்நிலையில் பரவிய அந்நோய் ராஜ்காட்டிற்கும் பரவும் என்று எண்ணிய காந்திஜி ஒவ்வொரு வீடாகச் சென்று, கழிப்பறைகள் எவ்வாறு சுத்தமாக வைத்திருக்கப்பட வேண்டும் என்று கூறியதோடு மட்டுமல்லாமல் அதை செயல்படுத்தியும் காட்டினார். தென் ஆப்பிரிக்காவிலும் இதேபோன்று பிளேக் நோய் 1904ஆம் ஆண்டு ஜோஹனஸ்பர்க் என்ற இடத்தில் தொழிலாளர்கள் குடியிருப்புப் பகுதியில் பரவியது. தனது ஊரான ராஜ்காட்டில் பிளேக் ஒழிப்பிற்கு எதுபோன்ற நடவடிக்கைகளை காந்திஜி செயல்படுத்தினாரோ அதேபோன்ற நடவடிக்கைகளை ஜோஹனஸ்பர்க்கிலும் மேற்கொண்டார். பிளேக் போன்ற தொற்று நோய்கள் பரவுவதற்கான காரணம் ஈக்கள் என்பதால், சுற்றப்புறத் தூய்மையை வலியுறுத்தினார் காந்திஜி.

காந்திஜி 1915ல் இந்தியாவிற்குத் திரும்பிய பின்னர், சபர்மதி என்ற இடத்தில் ஆஸ்ரமம் ஒன்றை அமைத்தார். தொண்டர்கள் செய்யும்

**மு. சுமுகன்,** இயக்குநர் செய்தி (ஓய்வு), சென்னை வானொலி நிலையம்

பணிகளையும் தாமே செய்வார் காந்திஜி. எந்த ஒரு ஊழியமும் இழிவானது அல்ல. சேவை மனப்பான்மையுடன் பணியைச் செய்யும்போது அது மேலும் சிறப்படைகிறது என்று கூறிய காந்திஜி, "எந்த ஒரு அன்னையும் தன் குழந்தையை அவ்வப்போது சுத்தப்படுத்துவதை அகௌரவமாகவா கருதுகிறோம்" என்றும் கேள்வி எழுப்பினார். பல சமயங்களில், சபர்மதி ஆசிரமம் சுத்தப்படுத்தப்படுவதை தாமே மேற்கொண்டவர் காந்திஜி.

சுத்தம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரத்திற்கு காந்திஜி அளித்த முக்கியத்துவத்தை உணர்ந்துதான் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் ஆன அரசு முனைப்புடன் செயல்படுத்தத் துவங்கியுள்ளது. அதன் ஒரு பகுதியாக 'நமாமி கங்கே' திட்டம் தற்போது திறமையுடனும், மிகவும் கவனமுடனும் செயல்படுத்தப்படுகிறது. இமயமலையில் உள்ள கங்கோத்ரி என்ற இடத்தில் இருந்து உற்பத்தி ஆகும் ஆறு பாகீரதி என்று அழைக்கப்படுகிறது. மந்தாகினி, அலக்நந்தா ஆகிய இரு நதிகள் தேவப்பிரயாக் என்ற இடத்தில் பாகீரதியுடன் இணைகிறது. அதன் பின்னர் கங்கை என்று அது அழைக்கப்படுகிறது. கங்கைச் சமவெளியில்தான் சுமார் 40 சதவீத மக்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். கங்கை மாசுபடுவதைத் தடுக்கவும், அதை சுத்தப்படுத்தவும் 2037 கோடி ரூபாய் நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. கங்கையை அடிகுபடுத்த மேலும் 100 கோடி ரூபாயை அரசு ஒதுக்கியுள்ளது. 'தூய்மை இந்தியா'வை உருவாக்க, கங்கை நதியைத் தூய்மைப்படுத்தும் திட்டம் குறிப்பிடத்தகுந்த திட்டமாக அமைகிறது. கங்கை நதியை சுத்தப்படுத்தும் திட்டத்தை சென்ற நவம்பர் மாதம் 8ம் நாள் வாரணாசியில் துவக்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி, கங்கை நதியின் கரையில் உள்ள 'அசிகட்' என்ற இடத்தில் சுத்தப்படுத்தும் பணிகளை மேற்கொண்டார்.

'தூய்மை இந்தியா' இயக்கத்தின் மூலம் கிராமப்புறங்களில் கழிப்பறைகள் கட்டுவது, சுத்தப்படுத்துவதற்குத் தேவையான நீர் ஆதாரங்களை அளிப்பது என்பதோடு மட்டுமல்லாமல், மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதும், ஒரு முக்கிய குறிக்கோளாக உள்ளது. இதற்காகவே, பிரதமர் நரேந்திர மோடி, பல துறைகளிலும் பிரபலமாக உள்ள ஒன்பது பேரை அறிவித்து, அவர்கள் மக்களிடையே சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவார்கள் என்றார். அவர்களும் பிரதமர் நரேந்திர மோடியின் அறிவிப்பிற்கு ஆதரவு தெரிவித்து மக்களிடையே 'தூய்மை இந்தியா' பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறார்கள்.

1916ஆம் ஆண்டில், மகாத்மா காந்திஜி பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் பேசும்போது, இந்தியர்களிடையே சுகாதார வசதியை ஆங்கிலேய அரசு ஏற்படுத்தித் தரவில்லை என்றும், ரயில் வண்டிகளில் மூன்றாம் வகுப்புப் பெட்டிகள் சரியான முறையில் பராமரிக்கப்படாமல் அசுத்தமான நிலையில் உள்ளன என்றும் இது பற்றி ஆங்கிலேய அரசு சிந்திப்பது அவசியம் என்றும் கூறினார். சுற்றுப்புற தூய்மைக்கும், தனிநபர் சுகாதாரத்திற்கும் அதிக அளவு அக்கறை காட்டிய மகாத்மா காந்திஜி, மக்களிடையேயும் விழிப்புணர்ச்சி ஏற்பட இவற்றைக் கூறினார். ஆங்கிலேய ஆட்சி நடந்து கொண்டிருந்த அக்கால கட்டத்தில், இந்தியாவில் சுகாதார வசதிகளை அதிகம் எதிர்ப்பார்க்க இயலாத நிலைமை இருந்தது. ஆனால் காந்திஜியின் கனவு நிறைவேற பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் ஆன அரசு சுற்றுப்புற தூய்மை, தனி நபர் சுகாதாரம் ஆகியவற்றிற்கான செயல்பாடுகளை விரைவுபடுத்தியுள்ளது. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், மக்கள் நல்வாழ்விற்காகவும் சுகாதாரத்திற்காகவும் ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டாலும், தற்போது 'தூய்மை இந்தியா' திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருவதால் அடுத்த ஐந்து ஆண்டுகளில் (அதாவது 2019ஆம் ஆண்டு) நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய முடியும். குறிப்பாக, ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான சுத்தமான கழிப்பறைகள் கட்டித் தரவும். நல்ல குடிதண்ணீர் வசதியை கிராமங்கள் தோறும் அமைக்கவும் அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆகவே சுற்றுப்புறத் தூய்மை, தனி நபர் சுகாதாரம் ஆகியவற்றில் காந்திஜியின் கனவு நனவாகும் நாள் வெகு தூரத்தில் இல்லை எனலாம்.

ஆயினும், அரசு மேற்கொண்டுவரும் இயக்கங்களும், திட்டங்களும் மக்களின் முழு ஒத்துழைப்பு இருக்கும்போதுதான் மகத்தான வெற்றியை நாம் அடைய முடியும். கழிப்பறைகளை சுத்தமாக வைத்துக் கொள்ளுதல், தெருக்களில் அநாவசியமாக குப்பைகளைப் போடாமல், அவற்றை ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் போடுதல், நீர் நிலைகள் என்றும் அசுத்தமாகாமல் கவனமுடன் பார்த்துக் கொள்ளுதல், தனிநபர் சுகாதாரத்தை என்றுமே பாதுகாத்தல், போன்ற பலவிதமான சுகாதாரப் பணிகளை மக்கள் மேற்கொள்ள வேண்டியது அவசியம். நோய்கள் நம்மைத் தாக்காமல் இருக்கவும், நாம் ஆரோக்யமாக இருக்கவும், நாமும், நம் பிற்கால சந்ததிகளும், நீண்ட ஆண்டுகள் அமைதியுடனும், நோயின்றி வாடிவும், தனிநபர் சுகாதாரமும், சுற்றுப்புறத் தூய்மையும் மிக அவசியம்.

காந்திஜி தனது பத்திரிகையான 'யங் இந்தியாவில்' 1927ஆம் ஆண்டில் எழுதிய போது 'ஒவ்வொரு நகராட்சியும் சுற்றுப்புற சுகாதாரத்தைப் பாதுகாப்பது குறித்த அறிவியலைக் கற்றுக் கொடுக்க மாதிரிப் பள்ளிகளை அமைக்க வேண்டும் என்றார். அதே போல், நகராட்சிகள் தனது கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்கள் மற்றும் ஊர்களுக்கு நல்ல குடிதண்ணீர் வசதியும், நல்ல சுகாதார வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டியது அவசியம்" என்றும் கூறியுள்ளார்.

'தூய்மை இந்தியா' திட்டத்தின்படி ஒவ்வொரு கிராமத்திற்கும் சிறந்த சுகாதார வசதிகள் கிடைக்க உறுதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் செயல்படும் அரசு, முனைப்புடன் இத்திட்டத்தை மத்திய கிராமப்புற மக்களுக்கும் சென்று அடையும் வகையில் செயல்படுத்தும் என்பதை உறுதியுடன் கூறலாம். ●

# முறை தவறி செயல்படும் ஸ்கேன் மையங்கள் மீது கடுமையான நடவடிக்கை

## கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சீ.சுரேஷ்குமார் எச்சரிக்கை

ஸ்கேன் கருவிகள் கருவில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சி நிலைகள் மற்றும் பிறவிக் குறைபாடுகள் பற்றி தெரிந்து கொள்ள உதவும் தொழில் நுட்பமாகும். இதைத் தாண்டி கருவில் உள்ள குழந்தையின் பாலினத்தை அதாவது ஆணா அல்லது பெண்ணா என்று எந்த ஸ்கேன் மையமும் சொல்லக் கூடாது. இவ்வாறு சொல்லக் கூடாது என்பதற்காகவே தனிச் சட்டம் நடைமுறையில் உள்ளது. இதைக் கடைப்பிடிக்காது முறைதவறிச் செயல்படும் ஸ்கேன் மையங்கள் மீது திடீர் ஆய்வுகள் நடத்தி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சீ.சுரேஷ்குமார் எச்சரித்துள்ளார்.

இந்திய அரசின் புதுச்சேரி களவிளம்பர அலுவலகமும் கடலூர் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டமும் இணைந்து 24.11.15 அன்று பண்ருட்டி ஒன்றியம் மருங்கூர் கிராமத்தில் நடத்திய "பெண் குழந்தையைக் காப்போம் பெண் குழந்தைக்குக் கற்பிப்போம்" என்ற சிறப்பு விழிப்புணர்வு முகாமைத் துவக்கி வைத்து உரையாற்றிய போது ஆட்சியர் சுரேஷ்குமார் இவ்வாறு எச்சரித்தார். பெண் குழந்தைகள் வளர்ந்தால் சாதிக்கக் கூடியவர்கள். பெண்களுக்கு ஒன்றும் தெரியாது என்ற பொதுவான நம்பிக்கை தவறு. அனைத்து மாற்றங்களுக்கும் புரட்சிகளுக்கும் மூலகாரணமாக இருப்பவர்கள் பெண்களே. எனவே பெண் குழந்தைகளைப் பெறுவதில் தயக்கம் காட்டக் கூடாது. அதே போல் அவர்கள் பாதுகாப்பாக வளர்வதற்கான சூழலையும் நாம் உருவாக்கித் தர வேண்டும் என்று ஆட்சியர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் புறக்கணிக்கப்படும் குழந்தைகளுக்காக தொட்டில் குழந்தைத் திட்டம் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவரை கடலூர் மாவட்டத்தில் 22 பெண் குழந்தைகள், 11 ஆண் குழந்தைகள் என மொத்தம் 33 குழந்தைகள்




மாவட்ட ஆட்சித் தலைவர் சீ.சுரேஷ்குமார் விழிப்புணர்வு ஊர்வலத்தைக் கொடியசைத்துத் துவக்கி வைக்கிறார்.

இத்திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டு உள்ளனர். இம்மாவட்டத்தில் இதுவரை 105 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு உள்ளன. பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2011 முதல் நவம்பர் 2014 வரை 5308 பெண் குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர் என ஆட்சியர் மேலும் தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குனரகத்தின் கூடுதல் இயக்குனர் (சென்னை) டாக்டர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி தனது உரையில் அண்மையில் பொது சுகாதாரத் துறை நடத்திய மாதிரி கணக்கெடுப்பில் கடலூர் மாவட்டத்தில் ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு 835 பெண் குழந்தைகள்தான் உள்ளனர் என தெரிய வந்துள்ளது. இது மிகவும் அபாயகரமான புள்ளி விவரம் ஆகும். மத்திய அரசின் சுகாதார அமைச்சகத்தில் இருந்து உயர் மட்ட குழு விரைவில் கடலூர் மாவட்டம் வந்து களஆய்வு செய்ய உள்ளனர். ஸ்கேன் மையங்களைக் கண்காணித்து நெறிப்படுத்தும் செயலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு உள்ளது என்று தெரிவித்தார்.

முகாம் விளக்கவுரை ஆற்றிய புதுச்சேரி களவிளம்பர அலுவலர் தி.சிவக்குமார் தனது உரையில் இந்தியா முழுவதும் குழந்தை பாலின விகிதம் குறைவாக உள்ள 100 மாவட்டங்களில்



மாவட்ட ஆட்சித் தலைவர் சீ.சுரேஷ்குமார் ஆரோக்கியக் குழந்தைகள் போட்டியில் வெற்றிபெற்ற குழந்தைக்கு பரிசு வழங்குகிறார்.

இந்த பெண் குழந்தைகளைக் காப்போம் பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் என்ற திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. தமிழகத்தில் கடலூர் மாவட்டம் மட்டும் இத்திட்டத்திற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டு உள்ளது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இம்மாவட்டத்தில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 896 பெண் குழந்தைகள்தான் உள்ளனர். பெண் குழந்தைகள் குறைவாக உள்ள மாவட்டங்களில் கடலூர் மாவட்டம்தான் முதலில் உள்ளது. இதில் பெருமையைவிட வருத்தம்தான் அதிகம். இந்த நிலையைப் போக்கத்தான் இந்த முகாம் நடத்தப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

களவிளம்பர இயக்குனரகத்தின் மண்டல இயக்குனர் என்.வி.நாகராஜன், கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் பா.இரேணுகாம்பாள், கடலூர் மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குனர் டாக்டர் ச.வித்தியாசாகர், மாவட்ட சமூக நல அலுவலர் இரா.புவனேஸ்வரி ஆகியோரும் உரையாற்றினர். மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குனரகத்தின் பி.சி.பி.டி.என்.டி சட்டப் பிரிவின் கண்காணிப்பாளர் கமலக்கண்ணன், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் தமிழ்ச்செல்வன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆர்.இராஜசேகர், வி.தமிழரசி, ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.ராமதாஸ், அரசு மேனிலைப்பள்ளி தலைமையாசிரியர் ஏ.சம்பத்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் களவிளம்பர அலுவலகத்தின் விபடிபுணர்வு துண்டுப் பிரசுரத்தை ஆட்சியர் வெளியிட்டார். ஆரோக்கிய குழந்தைகள் போட்டி, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள், விவாதப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும் ஆட்சியர் வழங்கினார். மாவட்ட சமூக நல அலுவலகத்தின் சார்பில் ஒன்பது பேர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் ஆட்சியர் வழங்கினார்.

முன்னதாக பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு ஊர்வலத்தையும் பிரச்சார ஊர்தியையும் ஆட்சியர் துவக்கி வைத்தார். பிறகு ஊட்டச்சத்து பற்றிய கண்காட்சியைத் தொடங்கி வைத்து ஆட்சியர் பார்வையிட்டார்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மாவட்ட திட்ட அலுவலர் கோ.அன்படிகி வரவேற்றார். நிறைவில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் ச.செல்வி நன்றி கூறினார். தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# மத்திய பட்ஜெட் தயாரிப்பதில் உள்ள முன்னேற்பாட்டு செயல்களும் நடைமுறைகளும்

– ரவீந்திர ஹெச்.தோலக்கியா

I. வரையறை

பொருளாதாரத்தை நிர்வகிப்பதில் உதவியாக இருக்கக்கூடிய இரண்டு பேரளவுப் பொருளாதாரக் கொள்கைகளில் ஒன்றாக அரசு நிதிக் கொள்கை இருக்கின்றது. மற்றொரு கொள்கை பணக்கொள்கை ஆகும். இந்த இரண்டு கொள்கைகளின் பங்கு மற்றும் வாய்ப்பு ஆகியவற்றை தெளிவாகப் பிரித்தறிவதற்காக இந்த ஒவ்வொன்றைப் பற்றியும் வரையறை செய்து கொள்வது அவசியமானதாகும். அரசின் வருவாய் மற்றும் செலவுகளை நேரடியாகப் பாதிக்கக் கூடிய கொள்கை எதுவும் அரசுநிதிக் கொள்கை என எடுத்துக் கொள்ளப்படும். இதற்கு மாறாக அமைப்பின் செலாவணிக்கான அளவு மற்றும் செலவினத்தை நேரடியாகப் பாதிக்கக்கூடிய கொள்கை எதுவும் பணக்கொள்கையாக எடுத்துக் கொள்ளப்படும். நம்மைப் போன்ற ஐக்கிய குடியரசில் அரசாங்கத்தின் அனைத்து மூன்று அடுக்குகளிலும் தொடர்புடையதாக அரசுநிதிக் கொள்கை இருக்கின்றது. எனவே இக்கொள்கையை அதன் முழு அளவில் கணக்கில் எடுத்துக் கொள்வது என்பது மிகவும் சிக்கலானதாகும். வரலாற்று ரீதியில் மாநிலங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றை மொத்தமாக எடுத்துக்கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியாவில் மத்திய அரசின் பங்கு என்பது மேலாதிக்கமானதாகவே உள்ளது. உதாரணமாக, செலவினங்கள் என்பதை எடுத்துக் கொள்வோம். நாட்டில் மொத்த அரசு செலவினங்களில் மத்திய அரசு சுமார் 55 முதல் 60 சதவிகிதம் வரை செலவழிக்கின்றது. இதேபோல் வருவாய் நிலையில் பார்த்தால், மத்திய அரசின் பங்கு சுமார் 55 சதவிகிதம் ஆகும்.

அண்மைக்காலத்தில் மாநிலங்களின் பங்கும் அதிகரித்து வருகின்றது. அடுத்தடுத்து அமைக்கப்பட்ட நிதி ஆணையங்களின் பரிந்துரைகளுக்கு ஏற்ப மத்திய வரிகளில் மாநிலங்களின் பங்கு அதிகரித்து வந்துள்ளது இதற்கு முதன்மையான காரணமாகும். இரண்டாவது காரணம் பல்வேறு சமூக நலத் திட்டங்கள் முறையாகவும் தர்க்கரீதியாகவும் மத்திய அரசால் மாநிலங்களுக்கு மாற்றித் தரப்பட்டுள்ளன. பதினான்காவது நிதி ஆணையம் மத்திய அரசிடம் இருந்து மாநில அரசுகளுக்கு மூலவளங்கள் மாற்றித்தரப்படுவது குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. இருந்தபோதிலும், அரசுநிதிக் கொள்கையில் மத்திய அரசின் பொருத்தப்பாடும் முக்கியத்துவமும் ஒட்டுமொத்த பொருளாதாரத்தை கணக்கில் எடுத்துப் பார்க்கும்போது மையமாகவே இருப்பது தெரிகின்றது. ஏனெனில், முக்கியமான மத்திய வரிகள் மூலமான மொத்த வருமானம் இப்பொழுதும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. இதன் விளைவாக மத்திய அரசின் வருவாய் மற்றும் செலவினங்கள் பற்றிய முடிவுகள் நாட்டின் நிதிக் கொள்கை சார்ந்த முக்கிய முடிவுகளாகவே உள்ளன. எனவே வருடாந்திர மத்திய பட்ஜெட் சமர்ப்பிப்பு என்பது நமது பொருளாதாரத்தில் மிக முக்கிய நிகழ்வாகவே உள்ளது. ஏனெனில் இந்த பட்ஜெட் நாட்டின் அரசுநிதிக் கொள்கை பற்றி ஒரே ஒரு முறை எடுத்துரைக்கப்படும் விரிவான அறிக்கையாக உள்ளது.

II. **குறிக்கோள்கள்**

பகுதிக் கூறுபாடு சார்ந்த கொள்கைகள் அல்லது பணக்கொள்கை என்பது ஒரே ஒரு நோக்கத்தை அல்லது ஒரு சில தொடர்புடைய குறிக்கோள்களை மட்டுமே கொண்டிருக்கும். அவ்வாறு இல்லாமல் அரசு நிதிக்கொள்கையானது அதன் இயல்பிலேயே வெவ்வேறான பல குறிக்கோள்களைக்

**பேராசிரியர் ரவீந்திர ஹெச்.தோலக்கியா,** ஆசிரியர், இந்திய மேலாண்மை நிறுவனம், அகமதாபாத்.

கொண்டுள்ளது. அரசாங்கத்தின் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் குறுகியகால மற்றும் நீண்டகால அம்சங்கள் இரண்டையும் ஒரு சேரப் பெற்றுள்ளன. ஆகையால் அரசு நிதிக் கொள்கைகள் முறையே குறுகிய கால மற்றும் நீண்டகால குறிக்கோள்களைக் கொண்டுள்ளன. வெளி உலக பாதகமான மற்றும் சாதகமான தாக்கத்துக்கு எதிராகச் செயல்படுதல், அத்தகைய தாக்கம் பாதிப்பை ஏற்படுத்தாமல் தடுத்துக் கொள்ளுதல் ஆகியச் செயல்பாடுகள் மூலம் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் செயல்திறனை நிலைப்படுத்துதல் உள்ளிட்ட நோக்கங்கள் குறுகிய கால நோக்கங்களில் அடங்கும். மேலும் சமநிலை இலக்குகளை அடைய பொருளாதாரத்தில் வருமானத்தையும் செல்வத்தையும் மறுவிநியோகம் செய்தல் என்பதும் இதில் அடங்கும். ஏழைகளின் நிலைமைகளை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார ரீதியில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய பிரிவினரை மேம்படுத்துதல் ஆகியவற்றை அனைவருக்கும் கிடைத்தல் என்ற செயல்பாட்டின் மூலமும் பல்வேறு பொதுவிநியோக மற்றும் விற்பனைப் பொருட்களைப் பெறுவதற்கான அவர்களது தகுதிநிலையை பாதுகாப்பதன் மூலமும் உறுதி செய்தல் என்பதும் இந்த நோக்கத்தில் உள்ளடங்கும். இது அரசாங்கத்தின் கடமை என்ற முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசுநிதிக் கொள்கையின் நீண்டகால குறிக்கோள்கள் என்பவை சமநிலைத் தன்மை யுடன் கூடிய அதிக அளவு நிலைத்தன்மை கொண்ட பொருளாதார வளர்ச்சியை அடைதல், வாழ்க்கைத் தரத்தின் பௌதீக அம்சங்களை மேம்படுத்துவதன் மூலம் அனைத்துப் பிரிவினரின் நலவாழ்வை அதிகரித்தல் ஆகியனவாகும். இத்தகைய குறிக்கோள்களை நிறைவு செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்குள் சேமிப்பு மற்றும் முதலீடுகள் ஆகிய இரண்டின் பெருக்கத்தை அரசு நிதிக்கொள்கை எதிர்கொள்ள வேண்டும் என்பது வெளிப்படையான அம்சமாகும்.

### III. *நடைமுறைகள்*

மத்திய பட்ஜெட்டின் அதிமுக்கியத் துவத்தால் இந்தியா போன்ற ஜனநாயக நாடுகளில் ஆளும் கட்சியின் உள்நோக்கம், தொலைநோக்கு பார்வை மற்றும் கொள்கை ஆகியவற்றின் அரசியல் அறிக்கையாக அது மாறுவது என்பது தவிர்க்க இயலாதது ஆகும். பட்ஜெட் மிகக் கவனமாகத் தயாரிக்கப்பட்டு, முன்வைக்கப்பட்டு, ஏற்றுக் கொள்வதற்கு முன்பு பரவலாக விவாதிக்கப்படுகின்றது. இது அரசாங்கத்தின் வரவுசெலவுகளைப் பேசுகின்றது என்பதால், இதற்கு நாடாளுமன்ற ஒப்புதல் அவசியம் ஆகின்றது. எனவே இது நிதி மசோதாவாக இயற்றப்படுகின்றது. இதன் விளைவாக, நாடாளுமன்றத்தில் ஒரு சட்டம் கொண்டு வருவதற்கு (அல்லது ஒரு மசோதா தாக்கல் செய்வதற்கு) என்னென்ன நடைமுறைகள் கடைபிடிக்கப்படுமோ அந்த நடைமுறைகள் அனைத்தும் பட்ஜெட் சமர்ப்பித்தலுக்கும் கடைபிடிக்கப்படுகின்றது. இந்த நடைமுறைகளில் முறைப்படியாக சமர்ப்பித்தல், பிரசுரம் செய்தல், பொதுமக்களுக்கு பரவலாக விநியோகித்தல், கருத்துக்கள், விவாதங்களை வரவேற்றல், அவை பற்றி முடிவெடுத்தல் ஆகியன அடங்கும். இறுதியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நாடாளுமன்ற அமர்வில் அது அங்கீகரிக்கப்பட்டாக வேண்டும் என்பதும் நடைமுறையாகும். மத்திய பட்ஜெட் என்பது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போதே அது மத்திய அரசின் நிதிக்கொள்கை பற்றிய விரிவான அறிக்கை என எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. ஆனால் அனைத்து விதமான திருத்தங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நாடாளுமன்றத்தால் அது அங்கீகரிக்கப்படும்போதுதான் அவ்வாறு எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

இதுவரையிலான விவாதத்தில் இருந்து இந்தியா போன்ற ஐக்கிய குடியரசில் பட்ஜெட் உருவாக்குதல் செயலில் வெளிப்படும் எந்த நிலையிலான அரசாங்கத்தின் நிதிக் கொள்கையும் நெடிய செயல் முறைக்குப் பின்பு நீண்ட காலம் எடுத்துக்கொண்டு உருவாக்கப்பட்டது என்பது தெளிவாகும். ஆகவே இத்தகைய பட்ஜெட் வகுத்தல் என்பது சாதாரண சூழல்களின் போது வருடத்திற்கு ஒரு முறை என கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது. ஓராண்டில் அனைத்து அரசு வருமானங்கள் மற்றும் செலவுகளைப் பாதிக்கக்கூடிய நிதிக் கொள்கையில் அடிக்கடி மாற்றங்கள் மேற்கொள்வது என்பது கோட்பாட்டு ரீதியில் சரி என்றாலும் கூட விரும்பத்தக்கதும் அல்ல; நல்லதும் அல்ல.

இதன் விளைவாக, பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் செயல் திறன்களை நிலைப்படுத்துதல் என்பது பட்ஜெட்டால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே எதிர்கொள்ளப்படுகின்றது. இத்தகைய நோக்கங்களுக்கு பணக்கொள்கை முக்கியமான பங்கை ஆற்ற முடியும். மத்திய பட்ஜெட் என்பது ஊக்குவிப்பு பாத்திரத்தை மட்டும் ஏற்க முடியும். சேமிப்பு, முதலீடு, வளர்ச்சி, விலை நிலைத்திருத்தல் ஆகியவற்றுக்கான அடிப்படை சட்டகத்தை மட்டுமே பட்ஜெட் வகுத்தளிக்க முடியும். மேலும் அடிப்படையான பிரச்சனை அல்லது தூண்டுதல் என்பது கொள்கை மாற்றத்தைக் கோருவதாக இருந்தால் அது நிலையான இயல்பில் இல்லாமல் தற்காலிக இயல்பிலேயே இருக்கின்றது என்பதே பொருளாகும். ஓராண்டு நீடிக்கும் அரசு நிதிக்கொள்கை மாற்றம் என்பது நிலைத்தன்மையை தருவதை விட நிலைகுலைவையே அதிகமாக உருவாக்கச் செய்யும். நிலையான அல்லது நீண்ட காலம் நீடித்து நிற்கும் பிரச்சனைக்கு மட்டுமே அரசு நிதிக்கொள்கை மாற்றம் தேவைப்படும். விரும்பப்படும் பேரளவு பொருளாதாரக் கூட்டுத் தொகுதிகளில் எந்தவொரு நிதிக்கொள்கை சார்ந்த மாற்றத்தின் தாக்கமும் காலம் செல்லச் செல்ல உணரப்படும்.

## IV. மேற்கொள்ளப்படும் முன்னேற்பாட்டுச் செயல்கள்

இந்தியாவில் மத்திய பட்ஜெட் தயாரிப்பதில் மேற்கொள்ளப்படும் முன்னேற்பாட்டுச் செயல்கள் ஏறத்தாழ நான்கு மாத கால அவகாசத்தை எடுத்துக் கொள்கின்றது. பட்ஜெட் தயாரிப்புக்கான முன்னேற்பாடு என்பது நிதி அமைச்சகம் நவம்பர் மாதத்தில் அறிவிப்பு அனுப்புவதில் இருந்து தொடங்குகின்றது. மூலதன வருவாய் மற்றும் செலவினங்கள், வருவாய் பற்றிய விரிவான அறிக்கை, மூலதன வரவு ஆகியன பற்றி முறையான விரிவான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு ஏனைய அமைச்சகங்கள், துறைகள், இந்திய அரசின் கீழ் உள்ள முறையான அமைப்புகளுக்கு நிதியமைச்சகம் அறிவிப்பு அனுப்பும். அமைச்சகங்களும் துறைகளும் தங்களது வழக்கமான நடவடிக்கைகளைத் தொடர்வதற்குத் தேவையான மனிதவளம் மற்றும் நிதி ஆதாரங்கள் ஆகிய இரண்டின் தேவைகள் பற்றி தீவிரமாக மதிப்பீடு செய்யும். எதிர்வரும் நிதியாண்டில் புதிய செயல்பாடுகள், திட்டங்கள் ஆகியவற்றை மேற்கொள்வதற்கான மதிப்பீடும் செய்யப்படும். தற்போதைய நிலையில், முன்பே நடைமுறைப்படுத்தப்படும் செயல்பாடுகள், திட்டங்கள் ஆகியவற்றைத் தொடர அல்லது அப்படியே பராமரிக்கத் தேவைப்படும் மனித வளம் மற்றும் நிதி ஆதாரங்கள் பற்றி நியாயப்படுத்த அமைச்சகங்கள் மற்றும் துறைகள் எந்தவிதமான கூடுதல் முயற்சியையும் எடுக்கத் தேவையில்லை. ஏனெனில் அவை திட்டம் சாராத செலவினங்கள் என்ற வகைப்பாட்டின் கீழ் வருவதால் எந்தவிதமான கூடுதல் முயற்சியையும் எடுக்கத் தேவையில்லை.

எந்த ஒரு புதிய செயல்பாடு, திட்டம் மற்றும் ஏற்கனவே இருப்பவற்றை விரிவாக்குதல் உள்ளிட்ட செயல்திட்டங்கள் ஆகியவற்றுக்காக அமைச்சகங்களும் துறைகளும் தங்களது முன்மொழிவில் முழுமையாக நியாயப்படுத்தி இருக்க வேண்டும். இந்த முன்மொழிவுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் அவை வருவாய் மற்றும் மூலதன செலவு ஆகிய இரண்டும் பற்றிய கடப்பாடுகளை கவனத்தில் கொள்ள வேண்டும். அத்தகைய முன்மொழிவுகளுக்கான நியாயப்படுத்துதல் என்பது பொது விநியோகம் மற்றும் விற்பனைப் பொருட்களை வழங்குவதில் சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் துறைகள் எடுத்துரைத்துள்ள இலக்குகள், குறிக்கோள்களை நிறைவு செய்வதில் அத்தகைய செலவினங்கள் பங்கு என்ன என்பதன் அடிப்படையில் அமைய வேண்டும். இத்தகைய முன்மொழிவுகள் பெரும்பாலும் திட்டம் சார்ந்த செலவின வகைப்பாட்டைச் சேர்ந்ததாகும்.

நாடு முழுவதும் அரசு நிறுவனங்கள் பரந்து விரிந்துள்ள அளவையும் விரிவாக்கத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் இது ஒரு மிகப்பெரிய முயற்சி என்பது தெரியவரும். மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைகள் தங்களின் கீழ் செயல்படும் கள அலுவலகங்களில் இருந்து அத்தகைய முன்மொழிவுகளைப் பெற்றாக வேண்டும். இதற்கு ஒட்டுமொத்த நிறுவனமும் தன் விருப்பம் போல் செயல்படுவதாகவும் நடைமுறையில் மைய அதிகாரம் கொண்டதாகவும் இருக்க வேண்டும். அல்லது மையத்துக்கும் விளிம்பு நிலைக்கும் இடையில் மிகுந்த திறன்மிக்க,

பயன்மிக்க துடிப்புள்ள தொடர்பியல் வழிகள் இருந்தாக வேண்டும். நமது அரசாங்க நிறுவனங்கள் அதிக அளவு மையஅதிகாரம் கொண்ட சூழலில் அதாவது மேலிருந்து கீழாக அதிகாரப் பரவல் உள்ள நிறுவனங்கள் என்று பொதுவாக நம்பப்படுகின்றது. என்றாலும், அரசாங்கப் படிமுறையில் பல்வேறு நிலைகளில் அதிக அளவு நெகிழ்வுத் தன்மையும் சுதந்திரமும் தனித்தியங்கும் நிலையும் உள்ளன. இதன் தொடர்ச்சியாக, பட்ஜெட் முன்மொழிவுகள் குறிப்பிட்ட காலக்கெடுவுடன் மேல் மட்டத்தில் இருந்து கீழுள்ளவர்களிடம் கேட்கப்பட வேண்டும். மத்திய அமைச்சகம் அல்லது துறைக்கு மேல்மட்டத்துக்கு அளிக்கப்படும் முன்னர் பல்வேறு மட்டங்களில் பொருத்தமான முறையில் முன்மொழிவுகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். கட்டணம், அபராதம், வரிகள், தீர்வை முதலான வருவாய்கள் தொடர்ச்சியாக கிடைக்கும் அமைச்சகங்கள் மற்றும் துறைகள் வருவாய் தொடர்பாகவும் அத்தகைய முன்மொழிவுகளை திருத்தங்கள் ஏதும் இருந்தால் அவற்றுக்கான பரிந்துரைகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த ஒட்டுமொத்த நடைமுறைகளும் குறிப்பிட்ட கால அவகாசத்தை எடுத்துக் கொள்ளும். ஆனால் இந்த அளவு கால அவகாசம் என்பது மையஅதிகாரம் இல்லாத ஜனநாயக அமைப்பில் தவிர்க்க இயலாதது ஆகும். பல்வேறு நிலைகள் மற்றும் மட்டங்களில், அரசு நிறுவனம் பட்ஜெட் தயாரிப்பில் மக்களின் திறன்மிக்க பங்கேற்பைச் செய்ய முடியும். ஆனால் தற்போதைய நிலையில் நாட்டில் வருடாந்திர பட்ஜெட் தயாரிப்பில் மக்கள் பங்கேற்பு என்பது மிக மேலோட்டமானதாகவே இருக்கின்றது. அதுவும்கூட பலதுறைகளைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட சில நபர்களிடம் ஆலோசனை, பரிந்துரை, குறிப்பிட்ட உள்ளீடு கோருதல் என்பதாகவே இருக்கின்றது. அதேபோல் பல்வேறு தொழிற்சங்கங்கள், அமைப்புகள், கூட்டமைப்புகள், போன்றவற்றின் பிரதிநிதிகளிடம் இவ்வாறு கோருவதாக உள்ளது. நமது பட்ஜெட் தயாரிப்பு நடைமுறை என்பது அடிமட்ட அளவில் இருந்து சமுதாயத்தினர் மற்றும் பங்குதாரர்களின் திறன்மிக்க பங்கேற்பை அனுமதிக்கக் கூடியதாகவே இருக்கின்றது. கீழ்மட்ட அளவில் தெளிவான வழிகாட்டுதல்கள் இல்லாமையாலும் இது உண்மையில் நடப்பதில்லை. மேல்மட்டத்தில் இருந்து கிடைக்கப்படும் தாமதமான தகவல்தொடர்பே இதற்கு முக்கிய காரணமாகும்.

நிதி அமைச்சகத்தில் அந்தந்த மட்டத்தில் இத்தகைய அனைத்து முன்மொழிவுகளும் கீழிருந்து சேகரிக்கப்பட்டு, இணைக்கப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றன. பட்ஜெட் கணக்கீட்டில் ஒட்டுமொத்த சீர்மை இருக்க வேண்டும் என்பதற்காக தனியாக இத்தகைய நடைமுறையும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நிலையில், பட்ஜெட் வகுத்தல் என்பது செலவினம் மற்றும் வருவாய் ஆகிய இரண்டு பக்கங்களிலும் உள்ள பல்வேறு தடைகளை புரிந்து கொண்டதாக வேண்டும். வருவாய் பற்றாக்குறை, முதன்மை பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை மற்றும் ஒட்டுமொத்த பொதுக்கடன் ஆகியவற்றின் அளவுகள் அடிப்படையில் நிதி பொறுப்புடைமையும் பட்ஜெட் நிர்வாகமும் எஃப்.ஆர்.பி.எம் என்ற சட்டம் சுமத்தும் தடைகளையும் பட்ஜெட் வகுக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டும்.

வருவாய் தரப்பில் பல்வேறு வகையான வரி மற்றும் வரி அல்லாத பற்றுகளின் அடிப்படையில் கணக்கிடப்படும் கருதுகோள்களை முன்வைத்து தடைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்தக் கருதுகோள்கள் பேரளவு பொருளாதாரச் சூழல்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். பேரளவு ஒருங்கிணைப்புகளின் துல்லியமான கணக்கீடுகளின் மூலம் கிடைக்கும் பொருளாதாரத்தில் நிலவுகின்ற அல்லது அத்தகைய பொருளாதாரத்திற்கு ஏதுவான சூழல்கள் இவையாகும். அதாவது உண்மையான வருமானம் அல்லது துறை, இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் ஆகியோரின் வெளியீடு, விலையில் மாற்றங்கள், பரிமாற்ற விகிதம், நிறுவன லாபம், பரிமாற்றத்தின் அளவு மற்றும் இதுபோன்ற பேரளவு ஒருங்கிணைப்புகள் பற்றிய கணக்கீட்டுச் சூழல் முக்கியமானதாகின்றது.

இந்த அனைத்துவிதமான கணக்கீடுகளும் உண்மையான வருமான வளர்ச்சி (நிலையான விலையில் உள்நாட்டு மொத்த உற்பத்தி) மற்றும் வரும் ஆண்டில் நிலவக்கூடிய பணவீக்க விகிதம் ஆகிய இரண்டு அடிப்படை கருதுகோள்களுக்கு ஏற்ப அமையும். இவைதாம் பட்ஜெட்டுக்கு பின் நிற்கும் கருதுகோள்கள் ஆகும் அல்லது பட்ஜெட் வகுப்பதில் அடிப்படையாக உள்ள இலக்குகள்

ஆகும். இந்த இரண்டு இலக்குகளிலும் ஏற்படும் எந்த ஒரு விலகலும் வருவாய் மற்றும் எஃப். ஆர்.பி.எம் இலக்குகள் பற்றிய பட்ஜெட் கணக்கீடுகளை பொருத்தமில்லாததாக செய்து விடும். மேலும் பட்ஜெட் வகுக்கும் நடைமுறையின் தகுதிறனையே கேள்விக்கு உள்ளாக்கிவிடும். எனவே இடைக்கால சரிபார்ப்புகள் அடிக்கடி மேற்கொள்ளப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக வெளியுலக சக்திமிக்க மாற்றங்கள் அடிப்படையிலான கருதுகோள்கள் மற்றும் பட்ஜெட் இலக்குகளில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை தரும்போது இந்த சரிபார்ப்புகள் அவசியமானவை ஆகும்.

செலவினத் தரப்பில், ஒருங்கிணைந்த நிலையில் தடைகள் என்பது ஒத்துக்கொள்ளப்பட்ட செலவுகள் சார்ந்ததாக இருக்கும். கடந்த ஆண்டுகளில் கூட்டுமொத்த பொதுக் கடன்களுக்கான வட்டி பட்டுவாடா இதில் கட்டாயம் இடம் பெறும். அதேபோல், மத்திய அரசாங்கத்தின் ஓய்வூதிய கடப்பாடும் நிறைவு செய்யப்பட்டாக வேண்டும். வரும் ஆண்டுகளில் ஊழியர்கள் எண்ணிக்கையைக் குறைக்காதவரை தற்போது இருக்கும் அரசு ஊழியர்களுக்கான சம்பளத்தையும் வழங்க வேண்டிய பொறுப்புடைமையும் இருக்கிறது. மானியங்கள் என்ற பெயரில் மிகப் பெரும் அளவில் பொதுநிதி செலவினங்களுடன் அண்மையில் பல சட்டங்கள் இயற்றப்பட்டு உள்ளன. உதாரணமாக உணவு பாதுகாப்புச் சட்டம், அனைவருக்கும் கல்வி உறுதிச் சட்டம் முதலானவை ஆகும். மேலும் மக்களுக்கு மானியம் அளிக்கும் பிற திட்டங்களும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய செலவினங்களும் மற்றும் பாதுகாப்பு செலவினங்களும் எந்த ஒரு பொருளாதாரத்திலும் ஏற்கப்பட்ட செலவினமாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இது அரசியல் ரீதியிலும் நடைமுறை சார்ந்தும் உணர்வு ரீதியிலான செயலாக உள்ளது. அரசால் இது சார்புநிலை ஏற்கத்தக்க செலவினமாகக் கருதிக் கொள்ளப்படலாம். மேலே கூறிய ஏற்கத்தக்க செலவினங்கள் அனைத்தும் ஒதுக்கப்பட்டாக வேண்டும். இத்தகைய செலவினங்களை அரசாங்கம் நீக்குவதும் மறு ஒதுக்கீடு செய்வதும் ஏறத்தாழ இயலாத ஒன்றாகும்.

இந்தச் சூழ்நிலையில் 2013–14ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மேலே கூறிய ஏற்கப்பட்ட செலவினங்களின் அளவு கீழே தரப்பட்டுள்ளவாறு இருந்தது: வட்டி பட்டுவாடாக்களுக்காக 3.3 சதவிகிதம்; சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்குவதற்கு 2.3 சதவிகிதம்; முக்கியமான மானியங்களுக்கான 2.2 சதவிகிதம்; பாதுகாப்பு செலவினங்களுக்கு 1.1 சதவிகிதம் ஆகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இவை எல்லாம் சேர்ந்து மொத்தமாக 8.9 சதவிகிதமாக உள்ளன. ஆச்சரியமான வகையில் 2013–14ஆம் ஆண்டில் மத்திய அரசின் மொத்த வருவாய் என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.9 சதவிகிதமாக இருந்தது. எனவே மத்திய பட்ஜெட் 201314ல் அனைத்து வருவாய்களும் ஏற்கப்பட்ட செலவினங்களுக்காகவே நேர் செய்யப்பட்டு விட்டது. புதிதாக எந்த ஒரு செலவினம் அல்லது புதிய செயல்திட்டங்களும் கடன்சாராத மூலதன வரவில் இருந்துதான் எதிர்கொள்ளப்பட வேண்டும். அதாவது முதலீட்டில் இருந்து நிதி விடுவித்தல் மற்றும் புதியதாக பொதுக்கடன் பெறுதல் ஆகியவற்றின் மூலம் சமாளிக்கப்படலாம். ஆனால் இச்செயல்கள் அரசின் கடன் சுமையை அதிகரித்துவிடும்.

மத்திய பட்ஜெட் தயாரிக்கும் செயல்முறையில் கடைசி நிலை எதுவென்றால் மேலே விவாதித்த பேரளவு பொருளாதாரத் தடைகளைக் கவனத்தில் கொண்டு பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் இருந்து பெறப்பட்ட செலவினம், வருவாய் குறித்த அனைத்து முன்மொழிவுகளையும் நிதி அமைச்சகத்தின் உயர்மட்ட அளவில் ஒருங்கிணைப்பு செய்வதுதான். பட்ஜெட் தயாரிப்பில் இருக்கின்ற சுதந்திரம் மற்றும் நெகிழ்வுத்தன்மை என்பது அந்த வருடப் பட்ஜெட்டுக்கு பின்னணியில் உள்ள செயல்திட்டங்கள் மற்றும் பெருந்திட்டங்களை மறுகுழுவாக்கல் அல்லது மறுவடிவம் கொடுத்தல் என்பதாகவே உள்ளது.

எஃப்.ஆர்.பி.எம் சட்டத்துக்குப் பிறகு, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான நிதிக் காரணிகளைக் கணக்கில் கொண்டுதான் கொடுக்கப்பட்ட ஆண்டுக்கான பட்ஜெட்டை மத்திய அரசு தயாரித்தாக வேண்டும். நிதி அமைச்சகம் தெளிவான நிதி ஒருங்கிணைப்பு திட்டத்தை தயாரிக்கின்றது. பலவிதமான பொருத்தப்பாடு மிக்க நிதி மற்றும் பேரளவு ஒருங்கிணைப்புகள் பற்றிய கருதுகோள்கள்

மற்றும் குறிப்பிட்ட இலக்குகள் ஆகியவற்றைத் தெரிவிக்கின்ற நிதிசார் உத்தியை அறிவிப்பதன் வாயிலாக இத்திட்டம் தயாரிக்கப்படுகின்றது. இந்த அனைத்து ஆவணங்களும் மத்திய பட்ஜெட்டின் ஒருங்கிணைந்த அங்கமாக உள்ளன. இவை பொது விவாதத்துக்கும் பரிசீலனைக்கும் கிடைக்கின்றன.

## V. பொருளாதார ஆய்வறிக்கையின் பங்கு

மத்திய பட்ஜெட்டை வகுக்கும் முழு செயல்முறையில், இதற்கு இணையான ஒரு தனிப்பட்ட ஆய்வும் மேற்கொள்ளப்படுகின்றது. நிதி அமைச்சகத்திலேயே இருக்கும் முதன்மை பொருளாதார ஆலோசகர் தலைமையில் இயங்கும் தொழில்முறை பொருளாதார நிபுணர்கள் குழு இந்த ஆய்வைச் செய்கின்றனர். இவர்களுக்கு மத்திய புள்ளியியல் அலுவலகம் உதவுகின்றது. கடந்த காலத்தில், குறிப்பாக முந்தைய ஆண்டில் இந்தியப் பொருளாதாரத்தின் செயல்திறன் எப்படி இருந்தது என இவர்கள் விமர்சன ரீதியில் ஆராய்ந்து கூறுவார்கள். இந்தியப் பொருளாதாரம் எதிர்கொண்ட வலிமை, பலவீனம், வாய்ப்பு, சவால் (SWOT பகுப்பாய்வு முறை) ஆகியவற்றைப் பற்றிய ஆய்வாக இது இருக்கும். இதன் மூலம் எதிர்காலச் செயல்பாடு எப்படி அதிகச் செயல்திறன் கொண்டதாக உருவாக்கப்பட வேண்டும் என நிர்ணயிக்கப்படுகின்றது. மேலும் கிடைக்கின்ற மூலவளங்களை எப்படிச் சரியான அளவில் பயன்படுத்துவது என்பதும் நிர்ணயம் செய்யப்படுகின்றது. பொருளாதாரம் தற்போது எதிர்கொண்டுள்ள சிக்கல்களையும் இது தெளிவாக எடுத்துச் சொல்கின்றது. இந்தச் சிக்கல்களை சமர்ப்பிக்கப்பட இருக்கும் பட்ஜெட் எதிர்கொள்ளும். பொருளாதார ஆய்வறிக்கை என்ற சட்டகத்துக்குள் பட்ஜெட்டை மதிப்பீடு செய்வது என்பது சரியானதாக இருக்கும்.

கொள்கை மாற்றங்களுக்கான குறிப்பிட்ட பாதையை இது வழங்குகின்றது. அரசாங்கம் கடைபிடிக்க வேண்டிய புத்தாக்க நடவடிக்கைகளை முன்மொழிகின்றது. நிதிக் கொள்கையில் எங்கெங்கு மத்திய அரசு சிறப்பு கவனம் செலுத்த விரும்புகிறதோ அத்தகைய பிரிவுகள் மற்றும் அம்சங்களை இது உள்ளடக்கியதாக உள்ளது. சுருக்கமாகக் கூறுவதென்றால், இடைப்பட்ட தூரத்தில் இருந்து நெடுந்தூரத்துக்கு மத்திய அரசு நினைக்கும் நிதிக்கொள்கை மாற்றங்களைச் செய்வதற்கு ஏற்ற தெளிவான பாதையை பொருளாதார ஆய்வறிக்கைத் தருகின்றது.

பொருளாதார ஆய்வறிக்கையில் தரப்பட்டுள்ள நிதிக் கொள்கை பற்றிய குறிப்பிட்ட பரிந்துரை அல்லது பாதையில் இருந்து நிதி அமைச்சர் விலகிச் செல்கின்றார் என்றால் அதுபற்றி அவர் வெளிப்படையாகப் பட்ஜெட்டில் குறிப்பிடுகிறார். இதில் ஒரு சில விதிவிலக்குகளும் இருக்கின்றன. தற்காலிகமாக தான் ஏன் விலகிச் செல்கிறேன் என அவர் விரிவான நியாயங்களையும் எடுத்துரைப்பார். நம் நாட்டில் 1991 சீர்திருத்தங்களுக்குப் பிறகு இது குறிப்பிடத்தக்க போக்காக மரி உள்ளது. இது பொருளாதார ஆய்வறிக்கையை நம்பத்தகுந்த ஆவணமாக மாற்றி உள்ளது. அரசு கடைபிடிக்க விரும்பும் நிதிக்கொள்கை பாதையை தருவதாக இந்த ஆவணம் உள்ளது. எதிர்கால நிதிக்கொள்கை மாற்றங்கள் பற்றிய தேவையற்ற ஊகங்களைக் குறைக்க இது உதவுகின்றது. நீண்டகால உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிச்சயமற்ற தன்மையை குறைக்க உதவும் சூழ்நிலையை இது உருவாக்கித் தருகின்றது.

## VI. சீர்திருத்தத்துக்கான செயல்திட்டம்

நீண்ட கால இலக்குகள் மற்றும் பேரளவு பொருளாதார சூழலில் உள்ள நிரந்தர பிரச்சனைகள் ஆகியவற்றை எதிர்கொள்ளும் விதமாக நிதிக்கொள்கை இருக்க வேண்டும் என்பதை பொருளாதார நிபுணர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இந்தியா போன்ற ஐக்கிய குடியரசு நாடுகளில், அதிலும் இந்திய ரிசர்வ் வங்கி ஓரளவு தன்னாட்சி பெற்றிருக்கும் நிலையில் நிதிசார்ந்த பிரச்சனைகளை மதிநுட்பமாக அணுகுவதை அரசியல் சார்புத்தன்மை மேலாதிக்கம் செய்து விடுகின்றது. எனவே, அரசுகளை நெறிப்படுத்த சில கடுமையான நிதிசார்ந்த விதிகள் கடைபிடிக்கப்பட வேண்டும் என்ற தேவை உணரப்பட்டு வருகின்றது. நிதிசார்ந்த மதிநுட்ப நெறிகளை மிகச் சரியாக ஏற்றுக்கொண்டு நடப்பதை உறுதி செய்யும் வகையில் இந்த விதிகள் இருக்க வேண்டும் எனச் சொல்லப்படுகின்றது. இதனை நோக்கிய ஒரு முயற்சியே எஃப்.ஆர்.பி.எம் சட்டம் ஆகும். ஆனாலும்கூட, அதில் வரையறுத்துள்ள விதிகள், அதாவது ஜீரோ வருவாய் பற்றாக்குறை, அல்லது நிதிப் பற்றாக்குறை ஜி.டி.பி.யில் 3

சதவிகிதத்துக்கு அதிகமாகக் கூடாது போன்ற விதிகள் பொருளாதாரத்தில் ஏற்படும் சுழல்வட்ட ஏற்றத்தாழ்வுகளின் கீழ் நிதிக் கொள்கையில் தர்க்கரீதியாக மாற்றங்கள் செய்யப்படுவதை உறுதி செய்வதற்கு போதுமானதாக இல்லை. முதலில் எதிர்ச்சுழல் நிதிக்கொள்கை விதிகள் ஒத்துக்கொள்ளப்பட வேண்டும். பின்பு அது பட்ஜெட் வகுக்கும் செயல் முறையில் சேர்க்கப்பட வேண்டும். தேவைப்படும் மற்றொரு சீர்திருத்தம் எதுவென்றால் நாட்டிற்கான அரசுநிதிக் கொள்கையை தயாரிப்பதற்கு பொறுப்பாக இருக்கக்கூடிய பொருளாதார நிபுணர்கள் மற்றும் பேரளவு பொருளாதார மேலாளர்கள் அடங்கிய உயர் அதிகாரக் குழுவை உருவாக்க வேண்டும் என்பதுதான். இது ஏற்கனவே முன்மொழியப்பட்டுள்ள நாணயக் கொள்கை போன்றதுதான். இவ்வாறு நிபுணர் குழுவை அமைப்பதால் தொழில்நிபுணத்துவம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை ஆகியன ஒட்டுமொத்த செயல்முறையிலும் உறுதிப்படுத்தப்படும். இதனால் முதலீட்டாளர்களும் உற்பத்தியாளர்களும் பட்ஜெட் உருவாக்கும் ஒட்டுமொத்த நடைமுறை மீது அதிக நம்பிக்கை அடைவார்கள். இந்த நம்பிக்கை அவர்களை பிரச்சனைகள் குறைந்த சூழல் என்ற உணர்வைப் பெற வைப்பதோடு நிச்சயமற்ற தன்மையை நிர்வகிக்கவும் உதவும்.

இறுதியாக, மேலே விவரிக்கப்பட்ட பட்ஜெட் செயல்முறைகள் பல்வேறு நிலைகளில் மக்கள் மற்றும் சமுதாயத்தினரை திறம்பட பங்கேற்கச் செய்வதற்கு பயன்படுத்தப்படலாம். பல நிலைகள் கொண்ட பட்ஜெட் வகுக்கும் செயல்முறையில் முடிவு எடுத்தல் என்பது மையப்படுத்தப்படாமல் பரவலாக்கப்படும் வகையில் இருக்க வேண்டும் என்ற கருத்தாக்கத்தோடு இது ஒத்துப் போகின்றது. அதிக அளவு நிதி சுதந்திரத்தை நோக்கி நாடு வேகமாக முன்னேறி வரும் நிலையில், மையத்துக்கு முக்கியத்துவம் தரும் அமைப்புகளில் இருந்து குறைந்த நிலை அரசு உறுப்புகளின் பொறுப்புடைமையும் அதிகரித்து வரும் நிலையில், மக்கள் பங்கேற்பை உள்ளடக்கும் வகையில் தற்போதைய செயல்முறைகளை சீரமைப்பது ஒன்றே தர்க்கரீதியில் சரியானதாகும்.

---

## ரயில்வே பட்ஜெட் : 2015 - 2016

**முக்கிய அம்சங்கள் :**

**பயணிகள் கட்டணத்தில் உயர்வு இல்லை**

**திட்ட ஒதுக்கீடு 52% அதிகரித்து ரூ.1,00,011 கோடியாக இருக்கும்**

**பயணிகள் வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்கான ஒதுக்கீட்டில் 67% அதிகரிப்பு**

**இந்திய பொருளாதாரத்தின் முக்கிய உந்து சக்தியாக ரயில்வே இருக்கும். இதற்கென 5 ஆண்டுகால செயல்திட்டம் வரையப்படும்**

**கூடுதல் முதலீட்டிற்கென நிதி ஆதாரங்கள் திரட்டப்படும்**

### ரயில் பயணம் பாதுகாப்பாக அமைவதற்கான நடவடிக்கைகள் மேம்படுத்தப்படும் :

**பயண டிக்கட்டுகளை விரைவாக பெறுவதற்கு வசதி**

**விரும்பிய உணவைப்பெறும் வசதி**

**மேலும் 200 ரயில் நிலையங்கள் மாதிரி ரயில் நிலையங்களாக மேம்படுத்தப்படும்**

**பி–பிரிவு ரயில் நிலையங்களில் "வை–பை" வசதி**

**பயணிகளின் குறைகளையும் புகார்களையும் தெரிவிக்க 24 மணி நேர தொலைபேசி வசதி**

**மகளிர் பாதுகாப்பிற்கென புறநகர் ரயில் பெட்டிகளில் கண்காணிப்பு கேமராக்கள்**

**குறிப்பிட்ட பயணிகள் ரயில்களில் கூடுதல் பொதுப் பெட்டிகள்**

**9 ரயில் தடங்களில் வண்டிகளின் வேகம் 160 கி.மீ லிருந்து 200 கி.மீட்டராக அதிகரிப்பு**

**தெரிவு செய்யப்பட்ட ரயில் பாதைகளில் ரயில் பாதுகாப்பிற்காக முன்னெச்சரிக்கை அமைப்புகளும் மோதலை தடுக்கும் அமைப்புகளும் அறிமுகப்படுத்தப்படும்**

**9,400 கி.மீ பாதை இரட்டை வழி / மூன்று வழி / நான்கு வழி பாதைகளாக மாற்றும் வகையில் 77 புதிய திட்டங்கள் மேற்கொள்ள உத்தேசம்**

**இரயில்களிலும் ரயில் நிலையங்களிலும் தூய்மையைக் பராமரிக்க புதிய துறை.**

# பொருளாதார ஆய்வு அறிக்கை – 2015– 16

வரும் ஆண்டில் வளர்ச்சி வீதம் 8 சதவீதத்திற்கும் கூடுதலாக இருக்கும். பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கை அடைவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இத்தகைய வளர்ச்சி அனைவரின் கண்ணீரையும் துடைக்க வழிவகுக்கும். இந்திய இளைஞர்களின் கனவை நனவாக்கவும் துணைபுரியும். சீர் திருத்தத்திற்கு அரசியல் அங்கீகாரம் உள்ளது. உகந்த வெளிப்புற சூழ்நிலை நிலவுகிறது. பெருமளவு சீர்திருத்தத்திற்கு வாய்ப்புகள் உள்ளன.

இந்திய பொருளாதாரம் உலகின் பெரியபொருளாதாரத்திற்கு ஈடாக பிரகாசமாகி உள்ளது. நிதி அமைச்சர் திரு. அருண் ஜெட்லி இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 2014–15ம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வு அறிக்கை சீர்திருத்தத்திற்கு அரசியல் அங்கீகாரம் கிடைத்திருப்பதை சுட்டிக் காட்டுகிறது. நிலவிவரும் சாதகமான வெளிப்புற சூழல் இந்திய பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கத்தை எட்ட வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மந்த நிலைமை, பணவீக்கம், அதிகரித்துவரும் நிதி பற்றாக்குறை, குறைந்து வரும் உள்நாட்டு தேவை, வெளிநாட்டு கணக்கில் ஏற்றத்தாழ்வுகள் ரூபாயின் மதிப்பில் நிலையற்ற தன்மை ஆகியவற்றை இந்திய பொருளாதாரம் இப்பொழுது கடந்துவிட்டதை இந்த அறிக்கை மேலும் எடுத்துக்காட்டுகிறது.

தேசிய கணக்கீட்டிற்கான அடிப்படை ஆண்டில் மத்திய புள்ளியல் அலுவலகம் மாற்றி அமைத்திருப்பதை சுட்டிக்காட்டிள்ள ஆய்வு 2015–16ம் ஆண்டில் வளர்ச்சி சந்தை விலை அடிப்படையில் 8.1% லிருந்து 8.5% மாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மொத்த உள்நாட்டு வளர்ச்சி விகிதம் 2011–12ம் ஆண்டு சந்தை விலைகளின் அடிப்படையில் நிலையாகக் கொண்டால் 2012–13ம் ஆண்டில் 5.1% மாகவும் 2013–14ம் ஆண்டில் 6.9% மாகவும் இருக்கும். 2014–15ம் ஆண்டில் முன்கூட்டிய மதிப்பீட்டின்படி வளர்ச்சி விகிதம் 7.4%ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ச்சியை கணக்கிடுவதற்கு புதிய வழிமுறையை அறிமுகம் செய்துள்ள மத்திய புள்ளியியல் அலுவலகம் பல்வேறு துறைகளின் நிலைகளில் காணப்படும் மொத்த கூடுதல் மதிப்பு அதிகரிப்பையும் கணக்கில் கொள்வதற்கு வகை செய்துள்ளது.

பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப் பட்டுள்ள மற்றும் நடைமுறைபடுத்த திட்ட மிட்டுள்ள சீர்திருத்தங்களின் பயனாக இந்த உயர் வளர்ச்சி விகிதம் எதிர்பார்க்கப்படுவதாக பொருளாதார ஆய்வு கூறுகிறது. டீசல் விலைக்கான கட்டுப்பாட்டை நீக்கி இருப்பது, எரிசக்தி பொருட்களுக்கு வரி, சமையல் எரிவாயுக்கான மானிய முறை மாற்றி நேரடியாக பட்டுவாடா, நிலக்கரி துறையில் சீர்திருத்தத்தை செயல்படுத்துவதற்கு அவசர சட்டம், பாதுகாப்பு போன்ற துறைகளில் அந்நிய நேரடி முதலீட்டிற்கான உயர் அளவை அதிகரித்தல் போன்ற சீர்திருத்தங்களை இந்த ஆய்வு அறிக்கை பட்டியலிட்டுள்ளது.

14வது நிதி ஆணையம் மத்திய மாநில அரசுகளுக்கிடையே வருவாயை பகிர்ந்து கொள்வது குறித்து பரிந்துரைத்துள்ள முற்போக்கான புதிய யோசனைகளை இந்த ஆய்வு வரவேற்றுள்ளது.

2013ம் ஆண்டு பிற்பகுதியில் இருந்து பணவீக்க விகிதம் 6% அளவில் குறைந்து இருப்பதை சுட்டிக் காட்டியுள்ள இந்த ஆய்வு அறிக்கை நடப்பு கணக்கு பற்றாக்குறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியையும் எடுத்துக்காட்டுகிறது. 2012–13ம் ஆண்டின் மூன்றாவது காலாண்டின் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.7% என்ற உயர் அளவில் இருந்த பற்றாக்குறை வரும் நிதி ஆண்டில் ஒரு சதவீதமாக இருக்கும். இந்தியாவில் முதலீடு செய்வதற்கு இது நல்ல வாய்ப்பாக அமைகிறது என்று ஆய்வு அறிக்கை குறிப்பிடுகிறது.

உகந்த பொருளாதார சூழ்நிலை, வரும் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் உயர் வளர்ச்சி விகிதம் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கத்தை எட்டுவதற்கான பெறும் வாய்ப்பாக அமைந்துள்ளது. இந்த சூழ்நிலை எளிய மற்றும் நலிந்த மக்களின் கண்ணீரை துடைக்க வேண்டும் என்ற குறிக்கோளை எட்டுவதற்கு வழிவகுத்துள்ளது என இந்த ஆய்வு கூறுகிறது. மேலும், இளைஞர்கள், மத்தியதர வர்க்கத்தினர் தங்களுடைய எதிர்பார்ப்புகளை எட்டும் வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது. அரசு தனது முதலாவது முழு பட்ஜெட்டை சமர்ப்பிக்க உள்ள நிலையில் நாடு நல்லதொரு நிலையை எட்டியிருப்பதை சுட்டிக்காட்டும் இந்த ஆய்வு அறிக்கை சீர்திருத்தங்களை பெரிய அளவில் செயல்படுத்துவதற்காக பெரும் வாய்ப்பு ஏற்படுத்தி இருப்பதாக கூறுகிறது.

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு பருவ மழை இயல்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதால் சாதகமான சூழ்நிலையில் வளர்ச்சி வீதம் 8% இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. எனினும் வேளாண்துறையில் அடிப்படை விலைகளில் கணக்கில் கொள்ளப்பட்ட கூடுதல் மதிப்பீட்டின்படி வளர்ச்சி வீதம் 2013–14ம் ஆண்டில் 3.7% லிருந்து குறையக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சாதகமான பருவ மழை இல்லாத 2014–15ம் ஆண்டு இந்த வளர்ச்சி 1.1%ஆக இருக்கும்.

பொருளாதாரத்தை பாதிக்கக்கூடிய சில தேக்க நிலைகளையும் வீழ்ச்சி சூழலையும் இந்த ஆய்வு அறிக்கை கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.

2014–15ம் ஆண்டு வளர்ச்சி விகிதம் பெரும் அளவில் உள்நாட்டு தேவையில் ஏற்பட்ட அதிகரிப்பை சார்ந்திருந்தது. இந்த ஆண்டில் வெளிநாட்டு ஆதரவு அதிக அளவில் இல்லை. ஏற்றுமதி வளர்ச்சி 0.9% ஆகவும் இறக்குமதி வளர்ச்சி 0.5% ஆகவும் இருந்ததை இந்த ஆய்வு அறிக்கை காட்டுகிறது. இறக்குமதியில் ஏற்பட்டுள்ள குறைவிற்கு சர்வதேச சந்தையில் கச்சா எண்ணையில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.

மொத்த உள்நாட்டு சேமிப்பு வீதத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியையும் இந்த ஆய்வு அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. 2011–12ம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 33.9%மாக இருந்த சேமிப்பு அளவு 2012–13ம் ஆண்டு 31.8%மாகவும் 2013–14ம் ஆண்டு 30.6%மாகவும் குறைந்தது. வீட்டு சேமிப்பில் ஏற்பட்டுளள வீழ்ச்சியே இதற்கு காரணமாகும்.

கடந்த ஆண்டுகளில் முதலீட்டு வீதமும் குறைந்திருப்பதையும் இந்த ஆய்வு அறிக்கை எடுத்துக் கூறுகிறது. மொத்த மூலதன அமைப்பு கணக்கீட்டின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2011–12ம் ஆண்டு 38.2% மாக இருந்த இந்த முதலீடு 2012–13ம் ஆண்டு 36.6%மாகவும் 2013–14ம் ஆண்டு 32.3%மாகவும் குறைந்தன.

முதலீடு பற்றி குறிப்பிடும் இந்த ஆய்வு நீண்டகால வளர்ச்சிக்கு தனியார் முதலீடு முக்கிய உந்து சக்தியாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. மேலும், வளர்ச்சிக்கும், தொலைதூர தொடர்பிற்கும் பொதுத்துறை முதலீடு குறிப்பாக ரயில்வே துறையில் முதலீடு முக்கிய பங்காற்றமுடியும். குறைந்தது இடைக்கால நடவடிக்கையாக இது இருக்க வேண்டும் என்று இந்த ஆய்வு அறிக்கை கூறுகிறது.

அரசு பெறும் கடன் சுழற்சி முதலீட்டிற்கான நிதியாக இருக்க வேண்டுமே இன்றி நடப்பு செலவீனத்தை எதிர்கொள்வதற்காக இருக்கக் கூடாது என்று ஆய்வு அறிக்கை கூறுகிறது. இதுவே நிதிக் கொள்கையின் சிறந்த விதியாக அமைய வேண்டும் என்று இந்த ஆய்வு அறிக்கை கூறுகிறது. மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3% அளவிற்கு குறைப்பதை நோக்கமாக கொண்டு அரசு செயல்பட வேண்டும் என்று இந்த ஆய்வு அறிக்கை அரசை வலியுறுத்தி உள்ளது.

மேலும் சில விறுவிறுப்பான கருத்துகளையும் இந்த ஆய்வு அறிக்கை தெரிவித்திருப்பது கவனத்திற்குரியதாகும். அத்தியாவசியப் பொருட்களுக்கு விலைகளுக்கு அளிக்கப்படும் மானியம் எளிய மக்களின் வாழ்க்கைத்தரத்தில் நேரடி மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பது போன்று தோன்றுகிறது என்று இந்த ஆய்வு அறிக்கை கூறுகிறது. எனினும் இந்த மானியம் எளிய மக்கள் பணவீக்கத்தையும் விலைகளில் ஏற்படும் ஏற்றத்தையும் எதிர்கொள்ள உதவி உள்ளது. இந்த மானியங்கள் குறித்து கூர்ந்து கவனம் செலுத்த வேண்டும் என்று ஆய்வு அறிக்கை கருத்துத் தெரிவித்துள்ளது. இந்த மானியங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 4.24% அளவிற்கு அதாவது ஏறக்குறைய ரூ.3,78,000 கோடியாக இருப்பதை எடுத்துக்காட்டி உள்ளது. வறுமையை எதிர்த்துப் போரிடுவதற்கு இது சிறந்த ஆயுதமாக இருக்க இயலாது என்பதை இந்த ஆய்வு அறிக்கை எடுத்துரைக்கிறது. எளிய மக்களுக்கான பல்வேறு மானியங்களை பற்றி குறிப்பிடும் இந்த ஆய்வு அறிக்கை மானியங்கள் பல சமயங்களில் பிற்போக்கு நடவடிக்கையாகவே இருக்கும் என்று கூறுகிறது. இப்போது வழங்கப்படும மானியங்கள் பற்றிய ஆய்வு, இந்த மானியங்களால் எளிய மக்களைவிட பொருளாதார ரீதியில் மேம்பட்ட குடும்பங்கள் பயன் பெற்றுவருகிறார்கள் என்று கூறுகிறது. பல்வேறு உதாரணங்களை எடுத்துக்காட்டியுள்ள இந்த ஆய்வு அறிக்கை மின்சாரத்திற்கான மானியத்தால் ஓரளவு பொருளாதார ரீதியில் உயர்நிலையில் உள்ளவர்களுக்கு பயன் கிடைக்கும் என்று கூறுகிறது. எனினும், மானியங்களை அகற்றுவதோ அல்லது படிப்படியாக குறைப்பதோ விரும்பத்தக்கதும் அல்ல சாத்தியமானதும் அல்ல என்றும் கருத்து தெரிவித்துள்ளது. ஜன்தான் திட்டம், ஆதார், செல்பேசி எண் ஆகிய மும்முனை “ஜாம்” முறையை கடைப்பிடிப்பது மானியம் எளிய மக்களை சென்றடைவதற்கு வழிவகுக்கும் என்று கூறியுள்ளது. மேலும் இதன் பயன்கள் உரியவர்களுக்கு சேதாரம் இல்லாமல் கிடைக்கச்செய்யும்.

பல திட்டங்கள் தேக்கம் அடைந்திருப்பது குறித்து கவலை தெரிவித்துள்ள இந்த ஆய்வு அறிக்கை இந்த போக்கு அன்மைகாலத்தில் அதிகரித்து இருப்பதை சுட்டிக் காட்டுகிறது. எனினும், இந்த தேக்க நிலை இப்போது நிலைத்தன்மை அடைந்திருப்பதை குறித்து இந்த அறிக்கை ஆறுதல் தெரிவித்துள்ளது. பொதுத்துறை, தனியார் பங்களிப்புடனான முதலீட்டிற்கு உத்வேகம் அளிக்கும் யோசனையை இந்த ஆய்வு அறிக்கை கூறியுள்ளது.

பொருளாதார வளர்ச்சிக்கு உற்பத்தி மற்றும் சேவைத்துறைகளின் பங்களிப்பை பற்றி குறிப்பிட்டும் இந்த ஆய்வு அறிக்கை இந்தியப் பொருளாதார சூழலுக்கு இவை இரண்டுமே முக்கியமானவை என்று கூறுகிறது. இந்தியாவில் திறமையை வளர்க்கும் முயற்சி போன்று "இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள் என்ற இயக்கத்திற்கும்" கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று இந்த ஆய்வு அறிக்கை கூறுகிறது.

வேளாண்மை பொருட்களுக்கான பொது வான தேசிய சந்தைப்பற்றி குறிப்பிடுகையில் சில குறிப்பிட்ட வேளாண் பொருட்களின் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்த தேசிய சந்தை ஏற்படுத்துவதற்கு அரசியல் சாசன விதி முறைகளை பயன்படுத்தலாம் என்று யோசனை தெரிவித்துள்ளது.

14வது நிதி ஆணையத்தின் பரிந்துரைப் பற்றிக் குறிப்பிடுகையில் முதல் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு மற்றும் இன்றைய பிரதமர் திரு. நரேந்திர மோடியின் கருத்துகளை எடுத்துக்காட்டியுள்ளது. 14வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்துவதும் நிதி அயோக்கை உருவாக்குவதும் கூட்டுறவு முறையிலான ஒன்றிய அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற அரசின் நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு பெரிதும் உதவும் என்று இந்த ஆய்வு அறிக்கை கூறியுள்ளது. ●


FORM IV

Statement about ownership and other particulars about Thittam (YOJANA-TAMIL)

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of publication | : | CHENNAI |
| 2. | Periodicity of its publication | : | MONTHLY |
| 3 | Printer's Name | : | Dr. Ms. Sadhana Rout |
| | Nationality | : | INDIAN |
| | Address | : | Publications Division,Govt.of India<br>Soochna Bhavan, New Delhi 110 003 |
| 4. | Publisher's Name | : | Dr. Ms. Sadhana Rout |
| | Nationality | : | INDIAN |
| | Address | : | Publications Division, Govt.of India<br>Soochna Bhavan, New Delhi 110 003 |
| 5. | Editor's Name | : | A.ELANGOVAN |
| | Nationality | : | INDIAN |
| | Address | : | THITTAM, PUBLICATIONS DIVISION,<br>SHASTRI BHAVAN, CHENNAI -600 006 |
| 4 | Names and addresses of Individuals who own the Newspaper and partners, or shareholders holding more than one per cent of the total capital | : | wholly owned by Ministry of Information & Broadcasting, Government of India New Delhi – 110 003 |

I, Sadhana Rout, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Sd…..
(Dr. Sadhana Rout)
Additional Director General

DATED : 10.02.2015

# பட்ஜெட் 2015–2016
# நிதி அமைச்சர் உரை

இந்திய பொருளாதாரம் கடந்த 9 மாதங்களில் பெரும் மாற்றம் அடைந்திருப்பதாக நிதி அமைச்சர் திரு. அருண் ஜெட்லி கூறியிருக்கிறார். நாடாளுமன்ற மக்களவையில் இன்று 2015–16ம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட்டை சமர்பித்து பேசிய அவர் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7.4% எட்டும் என்றும் இதன் வாயிலாக இந்தியா விரைவான வளர்ச்சிக் கொண்ட நாடாக திகழும் என்றும் கூறினார். பொருளாதாரத்தில் உறுதியான நிலைமை எட்டடப்பட்டிருக்கிறது. வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு, நிலையான இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை அடைவதற்குரிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். அரசின் மூன்று முக்கிய சாதனைகளைப் பற்றி குறிப்பிட்ட அவர் ஜன் தன் திட்டத்தின் வாயிலாக 100 நாட்களுக்குள் 12.5 கோடி குடும்பங்கள் பொது நிதி நீரோட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் கூறினார். மாநிலங்களின் வருவாய் ஆதாரங்களை பெருக்கும் வகையில் நிலக்கரி படிம ஏலத்தில் கடைபிடிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். இந்தியாவிற்கு புத்துணர்ச்சி அளிக்கும் வகையில் தூய்மை இந்தியா இயக்கம் துவங்கப்பட்டு இருப்பதாகவும் அவர் கூறினார். இந்தியாவை மாற்றியமைக்கும் மேலும் இரண்டு பெரிய சீர்திருத்த செயல்பாடுகளை அரசு மேற்கொண்டு இருப்பதாக நிதி அமைச்சர் கூறினார். சரக்கு மற்றும் சேவை வரியும், மானியங்களை நேரடியாக பயனாளிகளுக்கு அளிக்க வகை செய்யும் ஜன்தன், ஆதார், செல்பேசி ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய "ஜாம்" என்ற முத்தரப்பு அணுகுமுறையும் இதில் அடங்கும். சரக்கு மற்றும் சேவை வரி திட்டம் மறைமுக வரி விதிப்பு முறையில் நவீன அணுகுமுறையை அறிமுகப்படுத்தும் என்றும் 2016ம் ஆண்டு ஏப்ரல் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்றும் அமைச்சர் கூறினார். ஜாம் திட்டம் மானியங்கள் பயனாளிகளுக்கு எவ்வித சேதாரமும் இன்றி சென்றடைவதை உறுதி செய்யும் என்று கூறினார்.

குறைந்துவரும் பணவீக்கம் அரசின் சாதனை என்று குறிப்பிட்ட நிதி அமைச்சர் இது கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டு இருப்பதை எடுத்துக் காட்டினார். நுகர்வோர் விலை குறியீடு பணவீக்கம் இந்த ஆண்டு இறுதியில் 5% ஆக இருக்கும். நாணய கொள்கையை மேலும் எளிமை படுத்துவதற்கு இது உதவும். பணவீக்கத்தை 6%க்கும் குறைவாக வைத்திருப்பதற்காக ரிசர்வ் வங்கியுடன் நாணய கொள்கை வரையறை ஒன்று எட்டடப்பட்டிருப்பதாக திரு. ஜெட்லி கூறினார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி புதிய அணுகுமுறையின்படி 2014–15ம் ஆண்டு 7.4% ஆக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு வளர்ச்சி வீதம் 8 முதல் 8.5% இருக்கும். இரட்டை இலக்க வளர்ச்சியை விரைவில் எட்டுவது சாத்தியமாகும். வளர்ச்சியில் பெரிய அளவை எட்டுவது குறித்து இந்தியா சிந்திக்க வேண்டும். இந்தியா விடுதலை பெற்று 75வது ஆண்டான 2022ம் ஆண்டு "அம்ரூத் பெரும் நடைபெறும். இந்திய அணி என்று பிரதமரால் அழைக்கப்படும் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி மாநில அரசுகள் இந்தியாவை முன்னெடுத்து செல்லவேண்டும் என்று அவர் தெரிவித்தார். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வீடு கிடைப்பதை இது வகை செய்கிறது. இதற்கு நகர்புறங்களில் 2 கோடி வீடுகள் அமைக்கப்படவேண்டும். மேலும் ஊரக பகுதிகளில் 4 கோடி வீடுகள் கட்டப்படவேண்டும். ஒவ்வொரு வீட்டிற்கும் 24 மணிநேர மின்சார விநியோகமும், நல்ல குடிதண்ணீரும், கழிப்பறை வசதியும், சாலைப்போக்குவரத்தும், ஏற்படுத்தும் தொலைநோக்கு திட்டத்துடன் இது வரையப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தது ஒருவருக்காவது வாழ்வாதாரம் உறுதி செய்யப்படுவதுடன் வறுமையை ஒழிப்பதில் கணிசமான முன்னேற்றத்தை எட்டுவதற்கும் இத்திட்டம்

வகை செய்கிறது. 20 ஆயிரம் கிராமங்களுக்கு 2020ம் ஆண்டுக்குள் மின்வசதி கிடைப்பதற்கும், ஒரு லட்சத்து 78 ஆயிரம் குடியிருப்புகள் சாலைவசதியை பெறுவதற்கும் ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும், மருத்துவசேவையை விரிவுபடுத்துவதற்கும், ஒவ்வொரு குழந்தைக்கும் 5 கிலோ மீட்டர் தொலைவிற்குள் மேல்நிலைப்பள்ளி படிப்பிற்கு வசதி செய்து தரவும், இத்திட்டம் வழிவகுக்கிறது. மேலும், கிராமப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும், பாசன வசதியை மேம்படுத்துவதற்கும், எல்லா கிராமங்களுக்கும் தகவல் தொடர்பு வசதியை விரிவுபடுத்துவதற்கும், திறமை மேம்பாட்டு திட்டத்தின் பயனாக இந்தியாவை உலகின் உற்பத்தி மையமாக உருவாக்குவதற்கும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள் என்ற திட்டத்தை செயல்படுத்துவதற்கும், தொழில் முயற்சியை ஊக்குவிப்பதற்கும், வடகிழக்கு மாநிலங்கள் மற்ற மாநிலங்களைப் போல் வளர்ச்சி பெறுவதற்கும் இது வழி செய்கிறது.

இந்திய பொருளாதாரம் எதிர்கொண்ட 5 பெரிய சவால்களையும் நிதியமைச்சர் பட்டியலிட்டார். வேளாண் வருவாயில் வீழ்ச்சி, கட்டமைப்பு பணிகளில் நலிவடைந்த தனியார் முதலீடு, உற்பத்தி குறைவு, நிதி ஆதார முடக்கம், நிதிக்கொள்கையில் ஒழுங்கு ஆகியவை இந்த 5 பிரச்சனைகளாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப்பற்றாக்குறையை 4.1 சதவீதமாக வைத்திருக்க வேண்டிய பெரும் சவாலை நாடு எதிர்கொள்ளும் என்று நிதியமைச்சர் உறுதியளித்தார். அரசின் நிதி அணுகுமுறை பற்றி குறிப்பிட்ட அமைச்சர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதி இலக்கு 3 சதவீதமாக இருக்கவேண்டும் என்ற குறிக்கோளை எட்ட அரசு உறுதியுடன் இருக்கிறது. இந்த குறிக்கோளை எட்டுவதற்கான பயணம் 3 ஆண்டிற்குள் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்தியர்கள் நியாயமான கருணை உள்ளம் கொண்டவர்கள் என்ற முன்னணி நிலையை நாடு மீண்டும் பெற அரசு உறுதிபூண்டுள்ளது. மானியங்கள் உரியவர்களுக்கு சென்றடைவதை உறுதி செய்வது அவசியமாகும். மானியங்களில் கசிவு ஏற்படுவதை குறைக்கவேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்திய அமைச்சர், மானிய விநியோகத்தை சீரமைக்க திட்டமிட்டிருப்பதாக கூறியிருக்கிறார். பயனாளிகள் நேரடியாக பயன் பெறும் திட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்குவது முதலில் தொடங்கப்பட்டது. இது மேலும் விரிவுபடுத்தப்படும். இதனால் பயனாளி எண்ணிக்கை ஒரு கோடியில் இருந்து 10.3 கோடியாக உயரும் என்று தெரிவித்தார்.

விவசாயிகளின் நலனில் அரசு மிகுந்த அக்கறை கொண்டிருப்பதை வலியுறுத்திய அமைச்சர், வேளாண் அமைச்சகத்தின் இயற்கை விவசாய திட்டத்திற்கு முழுஒத்துழைப்பு வழங்க உத்தேசித்து இருப்பதாக கூறினார். பிரதம மந்திரி கிராம நீர் பாசனத் திட்டம் ஒவ்வொரு விவசாயியின் நிலத்திற்கும் பாசன வசதி கிடைப்பதை உறுதி செய்கிறது. ஒவ்வொரு துளி நீரையும் பயன்படுத்தி விளைச்சலை அதிகரிக்கும் வகையில், நீரின் பயன்பாட்டை அதிகரிக்க வழிவகுக்கிறது. நுண் பாசனத் திட்டம், நீர்வள மேம்பாட்டுத் திட்டம், பிரதமர் விவசாயி திட்டம் ஆகியவற்றிற்கு உதவி அளிப்பதற்காக ரூ.5,300 கோடி ஒதுக்கப்படும் என்று நிதியமைச்சர் கூறினார்.

வேளாண்மை துறைக்கு உதவி அளிக்கும் வகையில் கீழ்க்கண்ட ஒதுக்கீடுகளை அமைச்சர் அறிவித்தார். நபார்டு வங்கியில் ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்திற்காக 25,000 கோடி ஒதுக்கீடு செய்யும் யோசனையை அமைச்சர் அறிவித்தார். நீண்டகால ஊரக கடன் நிதியத்திற்காக ரூ.15,000 கோடி, குறுகிய கால ஊரக கூட்டுறவு மறு கடன் உதவி நிதியத்திற்காக ரூ.45,000 கோடி மண்டல ஊரக வங்கிகளின் மறுநிதியத்திற்காக ரூ.15,000 கோடி வேளாண் கடன்களை வழங்குவதற்காக ரூ.8.5 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வேலை வாய்ப்பிற்கு உதவி செய்யும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கு ரூ.34,699 ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

முத்ரா என்ற நுண்ணிய அலகுகள் மேம்பாட்டு மறுநிதியுதவி முகமை வங்கியை ஏற்படுத்த ரூ.20,000 கோடி வழங்க யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. கடன் வசதிக்காக ரூ.3000 கோடி ரூபாய் மற்றும் கடன் உத்தரவாத நிதியாக ரூ.3000 கோடி வழங்கப்படுகிறது.

பிரதம மந்திரி முத்ரா யோஜனா திட்டத்தின் கீழ் நுண்ணிய நிதி உதவிக்கழகங்களுக்கு உதவி வழங்க இத்தொகை பயன்படுத்தப்படும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நாட்டில் பெரும்பான்மையான மக்களுக்கு எத்தகைய காப்பீடு வசதியும் இல்லாது இருப்பதுகுறித்து கவலை தெரிவித்த அமைச்சர், பிரதம மந்திரி சுரக்க்ஷா பீமாயோஜனா விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று கூறினார். ஆண்டு ஒன்றுக்கு ரூ.12 பிரீமியம் செலுத்துவதன் வாயிலாக, விபத்தினால் ஏற்படும் இழப்பிற்கு ரூ.2 லட்சம் காப்பீடு கிடைக்கும். மேலும், அடல் ஓய்வூதிய திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சர் அறிவித்தார். பயனாளிகளின் பங்களிப்பு மற்றும் காலத்திற்கேற்றவாறு ஓய்வூதியம் வழங்கப்படும். இத்திட்டத்தில் மக்கள் சேருவதை ஊக்குவிக்கும் வகையில் அரசு 50 சதவீத பிரீமியத்தொகையை செலுத்தும். 2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் தேதிக்கு முன் தொடங்கப்படும் புதிய கணக்குகளுக்கு 5 ஆண்டு காலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1000 வழங்க வரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமாயோஜனா என்ற 3வது சமூக பாதுகாப்பு திட்டத்தையும் அமைச்சர் அறிவித்தார். இயற்கை அல்லது விபத்தால் ஏற்படும் மரணங்களுக்கு ரூ.2 லட்சம் வரை காப்பீடு பெற இத்திட்டம் வழிவகை செய்கிறது. அதற்கான பிரிமீயம் தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூ.330 ஆகும். 18 முதல் 50 வயது வரை உள்ளவர்களுக்கு பொருந்தும். இத்திட்டத்திற்கு நாள் ஒன்றுக்கு செலுத்தப்படும் தொகை ஒரு ரூபாய்க்கும் குறைவாகும்.

பொது – தனியார் பங்கு மற்றும் தொழிலாளர் வைப்பு நிதிகளில் உள்ள கோரப்படாத தொகையை பற்றி பேசுகையில், இந்த தொகை அனைத்தும் மூத்த குடிமக்கள் நல நிதி போன்ற சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கான மானியத்தை உயர்த்த பயன்படும், என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கட்டமைப்பில் பொது முதலீட்டை அதிகரிக்க வேண்டிய அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தினார். சாலை மற்றும் ரயில்வேக்கான ஒதுக்கீடு அதிகரிக்கும். சாலை திட்டங்களுக்காக கூடுதலாக ரூ.14,031 கோடி, ரயில்வேக்கான பட்ஜெட் ஒதுக்கீடாக கூடுதலாக ரூ.10,050 கோடி வழங்கும் யோசனையை அவர் தெரிவித்துள்ளார். தேசிய முதலீடு மற்றும் கட்டமைப்பு நிதியம் ஒன்று ஆண்டு ஒன்றுக்கு ரூ.20,000 கோடி மூலதனத்துடன் தொடங்கும் யோசனையையும் அவர்அறிவித்தார். ரயில்வே, சாலை மற்றும் பாசனத்துறை திட்டங்களுக்காக வரியில்லா கட்டமைப்பு பத்திரங்களை அனுமதிக்கும் யோசனையையும் அவர் தெரிவித்துள்ளார். தனியார் மற்றும் பொதுத்துறை பங்களிப்புடன் கூடிய கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மறுமதிப்பீடு செய்யப்பட்டு புதிய உத்வேகம் அளிக்கப்படும்.

அரசு நித்தி ஆயோக் நிறுவனத்தில் அடல் புதுமை இயக்கத்தை உருவாக்க உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இது புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் ஒரு வழியாக அமையும். இதற்காக ரூ. 150 கோடி ஒதுக்கப்படும்.

சுய வேலைவாய்ப்பு மற்றும் திறமை பயன்பாடு முறையை அரசு துவக்க உள்ளது. இது புதிய தொழிலை தொடங்குதல் மற்றும் மற்ற சுய வேலைவாய்ப்பு நடவடிக்கைகளுக்கு உதவி புரியும். இதற்காக நித்தி ஆயோக்கில் ரூ. 1,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசு ஐந்து பெரிய எரிசக்தி திட்டங்களை அமைக்க திட்டமிட்டுள்ளது. இதில் ஒவ்வொன்றும் 4000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் கொள்திறன் உடையதாக இருக்கும்.

இந்தியாவின் வெளிநாட்டு கடன்களையும் உள்நாட்டு கடன்களையும் முறைப்படுத்த பொது கடன் மேலாண்மை முகமை ஏற்படுத்தப்படும். பொது கடன் மேலாண்மை முகமை ஏற்படுத்துவதன் மூலம் இந்தியாவின் பத்திரங்கள் சந்தையை சர்வதேச பங்கு சந்தைக்கு சமமாக மாற்றமுடியும் என்று அமைச்சர் கூறினார்.

தொழிலாளர் வைப்பு நிதியை பொருத்தவரை மத்திய நிதி அமைச்சர் திரு.அருண் ஜெட்லி தொழிலாளர்களுக்கு இரண்டு வாய்ப்புகள் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். இதன்படி, முதலாவதாக தொழிலாளர்கள் வைப்பு நிதியோ அல்லது புதிய ஓய்வுதிய திட்டத்தையோ தேர்ந்தெடுக்கலாம்.

இரண்டாவது, மாத வருவாய் குறைவாக உள்ள தொழிலாளர்களுக்கு தொழிலாளர் வைப்பு நிதியில் பணம் செலுத்துவது அவரது விருப்பமாக கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களை பாதிக்காத வகையிலும், அல்லது தொழில் அதிபர்கள் இந்த நிதிக்கு செலுத்தும் தொகையை குறைக்காத நிலையிலும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து கவலைத் தெரிவித்த அமைச்சர் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனின் இலக்கு 2022 வரை 1,75,000 மெகாவாட் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். மின்னனு வாகனங்கள் விரைவாக இயக்குவது மற்றும் உற்பத்தி திட்டத்தை அரசு துவங்க உள்ளது. இத்திட்டத்திற்காக முதல் கட்டமாக ரூ.75 கோடி வழங்கப்பட உள்ளது.

முறையான திறன் பயிற்சி குறித்து பேசிய அமைச்சர், அரசு விரைவில் தேசிய திறன் இயக்கத்தை கொண்டுவரும் என்று தெரிவித்தார். தீனதயாள் உபாத்யாயா கிராம பசுக்கள் பாதுகாப்பு திட்டத்திற்கு ரூ.1500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்வி கடன் திட்டத்தை கண்காணிக்கவும் நிர்வகிக்கவும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நிதி உதவி ஆணையம் அமைக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

பல்வேறு புதிய நிறுவனங்களை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. கர்நாடகாவில் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் அமைக்கப்படும். தன்பாத்தில் உள்ள இந்திய சுரங்க கல்வி மையம் இந்திய தொழில்நுட்ப நிறுவனமாக மேம்படுத்தப்படும். ஜம்முகாஷ்மீர், பஞ்சாப், தமிழ்நாடு, இமாச்சல பிரதேசம் மற்றும் அசாமில் அகில இந்திய மருத்துவக் கல்வி நிறுவனங்கள் அமைக்கப்படும். பீகாரிலும் இது போன்ற நிறுவனம் ஒன்று அமைக்கப்படும். அமிர்தசரசில் தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான முதுநிலை நிறுவனம் அமைக்கப்படும். மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் சட்டீஸ்கரில் மருந்து தயாரிப்பு, கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான நிறுவனம் அமைக்கப்படும். ஒடிசா மற்றும் நாகாலாந்தில் அறிவியல் மற்றும் கல்வி ஆராய்ச்சி நிறுவனம் அமைக்கப்படும். ஜம்முகாஷ்மீர் மற்றும் ஆந்திர பிரதேச மாநிலங்களில் இந்திய மேலாண்மை நிறுவனம் அமைக்கப்படும்.

டிஜிட்டல் இந்தியா பயணம் சிறப்பாக அமைந்துள்ளது. தேசிய கண்ணாடி இழை இணைப்புகள் திட்டம் 7.5 லட்ச கி.மீ தூரத்தில் பதிக்கப்பட்டுள்ளது. இது 2.5 லட்ச கிராமங்களை இணைக்கின்றது. மேலும், விருப்பமுள்ள மாநிலங்களில் இந்த திட்டம் மேற்கொள்ளப்படும்.

மாநிலங்களுக்கு அதிக அளவில் அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட்டாலும் ஏழைகளின் நலனுக்கான திட்ட வசதிகள் செய்துதரப்படுகின்றது. கல்வித் துறைக்கு ரூ.68,968 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மத்திய உணவுத் திட்டமும் அடங்கும். சுகாதாரத் துறைக்கு ரூ.33,152 கோடியும் ஊரக வளர்ச்சிக்கு ரூ.79,526 கோடியும் (தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் உட்பட) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டிற்கு ரூ.22,407 கோடி, பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டிற்கு ரூ.10,351 கோடியும், நீர்வளம் மற்றும் தூய்மையான கங்கைக்கு ரூ.4,173 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆயுதப்படைகளுக்கு தேவையான நிதியும் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூ.2,22,370 கோடி செலவினம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2015-16ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 2,46,727 கோடியாகும்.

2015-16ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்யும் போது அமைச்சர் திரு. அருண் ஜெட்லி நிதி ஆண்டிற்கான திட்டமில்லா செலவு ரூ. 13,12,220 கோடியாக இருக்கும் என்று மதிப்பிட்டுள்ளார். திட்டமிட்ட செலவு ரூ.4,65,277 கோடியாக இருக்கும். இது ஏறத்தாழ 2014-15ம் ஆண்டின் மறு மதிப்பீடு தொகைக்கு ஈடாகும். மொத்த செலவீனம் ரூ.17,77,477 கோடியாக இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வரிவசூல் ரூ.14,49,490 கோடியாக இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கான பகிர்வு தொகை ரூ.5,23,958 கோடியாக இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் பங்கு ரூ.9,19,842 கோடியாக இருக்கும். அடுத்த நிதி ஆண்டிற்கான வரியில்லா வருமானம் ரூ.2,21,733 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்டுள்ள

மதிப்பீடுகளை வைத்து பார்க்கும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.9% நிதி பற்றாக்குறை இருக்கும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருமான பற்றாக்குறை 2.8 சதவீதமாக இருக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

### வரிவிதிப்பு யோசனைகள்:

கருப்பு பணத்திற்கு எதிரான அரசின் போராட்டம் நமது வரி நிர்வாகத்தின் முக்கிய அம்சமாக இருப்பதை நிதியமைச்சர் அருண்ஜேட்லி சுட்டிக்காட்டினார். வரி விதிப்பு சமூக பொருளாதார பெரியியலில் முக்கிய கருவியாக உள்ளது. கல்வி, உடல்நலம், வீட்டு வசதி மற்றும் அடிப்படை வசதிகளை வழங்குவதற்கும் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கும் வறுமை, வேலைவாய்ப்பின்மை, மந்தமான வளர்ச்சி ஆகியவற்றை எதிர்கொள்வதற்கும் வரி சேகரிப்பு அரசுக்கு பெரும் உதவியை அளித்து வருகிறது. இந்த குறிக்கோளை எட்டும் வகையில் நிலையான வரிவிதிப்பு கொள்கையையும் சாதகமான வரி நிர்வாகத்தை ஊக்குவிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நமது பொருளாதார செயல்பாட்டில் சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி முக்கிய பங்காற்றுகிறது. நிறுவனங்களுக்கான வரி வீதம் அடுத்த 4 ஆண்டுகளில் 30 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக குறைக்கும் யோசனையையும் அமைச்சர் தெரிவித்தார். கூடுதல் முதலீட்டிற்கும், உயர் வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பினை பெருக்குவதற்கும் இது வழிவகுக்கும். வரி விதிப்பு யோசனைகளை ஈடு செய்வதற்கு கீழ்கண்ட அணுகுமுறை கையாளப்பட்டது.

### கருப்பு பணத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்

வளர்ச்சியையும், முதலீட்டையும் ஊக்கு விப்பதின் வாயிலாக வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்

உள்நாட்டில் உற்பத்தியை ஊக்குவிப்பதுடன் இந்தியாவை உற்பத்தி மையமாக மேம்படுத்துதல்

எளிதாகப் பணிகளை செயல்படுத்தும் வகையில் குறைந்த அளவு அரசு தலையீடு, உயரளவு ஆளுமை

### வரி செலுத்தும் மத்திய தர பிரிவினருக்கு சலுகைகள்

தூய்மை இந்தியாவின் முன்முயற்சியின் பயனாக வாழ்க்கை தரத்தையும், பொது சுகாதாரத்தையும் மேம்படுத்துதல்

### பொருளாதாரத்தின் பயன்கள் அதிகரிக்கும் வகையில் சிறப்பு யோசனைகள்

கருப்பு பணத்தை குறிப்பாக வெளிநாடுகளில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள கணக்கில் வராத பணம் குறித்த பிரச்சனையை எதிர்கொள்ளும் வகையில் விரிவான சட்டம் கொண்டு வர அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான மசோதா நடப்பு கூட்டத்தொடரில் அறிமுகப்படுத்தப்படும். வருமானம் மற்றும் சொத்து விபரங்களை மறைத்தல், வெளிநாட்டு சொத்துகள் மீது வரி கொடுப்பதை தவிர்த்தல் போன்ற குற்றங்களுக்காக 10 ஆண்டுகள் வரை கடுங்காவல் விதிக்க வகை செய்வது இந்த சட்டத்தில் முக்கிய அம்சமாக இருக்கும். இந்த குற்றங்களுக்கான அபராத தொகை, வருமானம் பற்றிய விபரங்களை அளிக்க தவறுதல் அல்லது வெளிநாட்டு சொத்துகள் குறித்து முழு விபரங்களை அளிக்க தவறுவது போன்ற குற்றங்களுக்காக 7 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்க இந்த மசோதா வழிசெய்கிறது.

உள்நாட்டு கருப்பு பணத்தை கட்டுப்படுத்தும் வகையில் புதிய விரிவான பினாமி பரிமாற்ற தடுப்பு மசோதா நடப்பு கூட்டத்தொடரில் அறிமுகம் செய்யப்படும். பினாமி சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கும் சட்ட நடவடிக்கைகளை தொடர்வதற்கும் இந்த மசோதா வகை செய்யும். பினாமி சொத்துகள் வாயிலாக குறிப்பாக நிலப் பரிமாற்றத்தின் மூலம் கருப்பு பணம் உருவாவதற்கும், வைத்திருப்பதற்கும் உள்ள வழிமுறைகளை இந்த சட்டம் தடுக்கும். ஒரு லட்சம் ரூபாய்க்கும் கூடுதலான மதிப்புள்ள பொருட்களை வாங்குவதற்கும், விற்பதற்கும் பான் நம்பரை குறிப்பிடுவது கட்டாயமாக்கப்படும். சட்டங்களை நடைமுறைப்படுத்துவதை மேம்படுத்தும் வகையில், அமலாக்கப்பிரிவுகளின் தொழில்நுட்பம் மேம்படுத்தப்படும். இதனால் ஒரு துறையின் தகவலை மற்றவர் பெற இயலும்.

வேலைவாய்ப்புகளை உருவாக்குவது வரிவிதிப்பு யோசனையின் மற்றொரு

நோக்கமாகும். வளர்ச்சி, முதலீட்டை ஊக்குவித்தல், உற்பத்தியை பெருக்குதல், இந்தியாவை உற்பத்தி மையமாக உருவாக்குதல் போன்றவற்றின் வாயிலாக வேலைவாய்ப்புகள் பெருக வழிவகை செய்யப்படும்.

நிதி நிர்வாகிகள் இந்தியாவிற்கு வருவதை ஊக்குவிக்கும் வகையில் நிரந்தர அமைப்பு நியதிகள் மாற்றியமைக்கப்படும். ஜி.ஏ.ஏ.ஆர் என்ற விதிமுறைகள் அமலாக்கம் 2 ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்கப்படும். நடைமுறைக்கு வரும்போது, 10.4.2014ம் அன்றோ அதற்கு பிறகோ செய்யப்படும் முதலீட்டிற்கு இது பொருந்தும். இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தொழில் நுட்ப சேவைகளுக்காக ராயல்டி மற்றும் கட்டணம் மீதான வருமானவரி 25 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக குறைக்கப்படும். வேலைவாய்ப்பை பெருக்கும் வகையில், புதிதாக நியமிக்கப்படும் பணியாளர்களுக்காக வழங்கப்படும் கழிவு எல்லா வர்த்தக அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும். இந்த சலுகை பெறுவதற்கான குறைந்தபட்ச பணியாளர்களின் எண்ணிக்கை 100லிருந்து 50ஆக குறைக்கப்படுகிறது. 22 பொருட்களுக்கான இடுபொருட்கள், மூலப்பொருட்களுக்கான அடிப்படை சுங்கவரி குறைக்கப்படுகிறது. வரி ஏய்ப்பால் ஏற்படும் தாக்கத்தை குறைக்கும் வகையில் இந்த யோசனை கூறப்பட்டுள்ளது.

சொத்துவரியை நீக்கும் யோசனையை அமைச்சர் கூறியுள்ளார். அதற்கு பதிலாக ஒருகோடி ரூபாய்க்கும் கூடுதலான வருவாய் உடைய உயர்நிலை செல்வந்தர்களுக்கு 2 சதவீத கூடுதல் சர்சார்ச் வசூலிக்கப்படும். இந்த 2 சதவீத கூடுதல் வரி விதிப்பின் விளைவாக ரூ.9,000 கோடி வசூலிக்க குறுகிய அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரியை விலக்கிக் கொள்வதன் மூலம் ஏற்படும் இழப்பு ரூ.1008 கோடியாகும். அந்நிய நேரடி முதலீட்டுக்கான குறைந்தபட்ச மாற்று வரி விதிப்பு சரத்துக்களை சீரமைக்கும் யோசனையையும் அவர் தெரிவித்தார்.

கல்வி மீதான வரி மற்றும் நடுநிலை உயர் நிலைக் கல்வி வரி ஆகியவற்றை முறையாக வகைப்படுத்தி கலால் வரியுடன் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது உள்ள 12.36 சதவீத கலால்வரி 12.5 சதவீதமாக மாற்றியமைக்கப்படுகிறது. கலால் வரி மதிப்பீட்டின்படி 12 சதவீதத்துக்கும் குறைவாக உள்ளவையும் 12 சதவீதம் அதிமாக உள்ளவையும் உள்ள சிலவற்றுக்கும் வரிவிதிப்பு விகிதத்தை அதிகரிக்கும் நோக்கம் இல்லை. காலணிகள் தோலால் செய்யப்பட்ட மேல் பகுதி ஆகியவற்றிற்கு விதிக்கப்படும் கலால் வரி ரூ.1000 மதிப்புக்குள்ள ஒரு ஜோடி காலணிக்கு 6 சதவீதமாக வரி குறைக்கப்படுகிறது. மத்திய கலால் வரியும் சேவையும் வரிக்குமான பதிவு இரண்டு நாட்களில் செய்து முடிக்கப்படும். இதற்காக ஆன்லைன் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

சமூகத்தின் நலனுக்கு ஏற்ப சுற்றுச் சுழலும் வீடும் தூய்மையாக இருக்கவேண்டியது அவசியமாகும். தூய்மை பாரத இயக்கத்தின் ஒரு முயற்சியாக வழங்கப்படும் நிதிக்கு 100 சதவீதம் வரை விலக்கு அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதே மாதிரியான வரி விதிப்பு முறையை கங்கை தூய்மை நிதி திட்டத்திலும் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் தூய்மை சுற்றுச்சூழலுக்கான நிதி நடவடிக்கைகளுக்கு 1 டன் நிலக்கரி மீதான வரி ரூ.100 லிருந்து ரூ.200 ஆக உயர்த்தப்படும். அதே போன்று தொழிற்சாலை பயன்பாட்டுக்கு அல்லாத கோணி, பிளாஸ்டிக் பைகளுக்கான வரி 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்படுகிறது. தேவை ஏற்பட்டால் சில குறிப்பிட்ட சேவைகள் மீதான துய்மை பாரதம் செஸ் வரி 2 சதவீதம் வரை வசூலிக்கப்படும். பொதுவான கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் மூலம் இயங்கும் வாகனங்கள் சுங்கவரி மற்றும் கலால் வரி சலுகைகள் வரும் 31.3.2016 வரை தொடரும்.

2015–16ம் நிதியாண்டின் தொழில் நிறுவனங்கள் மற்றும் தனிநபர் ஈட்டும் வருமானவரியில் மாற்றமில்லை. தனிநபர், நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், உள்ளூர் அமைப்புகள் ஆகியவற்றின் வருவாய் ஒரு கோடி வரை உள்ள வருவாய்க்கு 12 சதவீதம் வரை சர்சார்ச் வசூலிக்கப்படும். ஒரு கோடிக்கும்

அதிகமாகவும் 10 கோடிக்கு குறைவாகவும் ஈட்டும் உள்நாட்டு நிறுவனங்களுக்கு 7 சதவீதம் சர்சார்ச் வசூலிக்கப்படும். ரூ.10 கோடிக்கும் அதிகமாக வருவாய் ஈட்டும் நிறுவனங்களுக்கு 12 சதவீதம் சர்சார்ச் வசூலிக்கப்படும்.

வெளிநாட்டு நிறுவனங்கள் ஈட்டும் வருவாய் ஒரு கோடிக்கு மேல் ரூ.10 கோடிக்கு குறைவாகவும் உள்ள நிறுவனங்களுக்கு 2 சதவீதம் சர்சார்ச் வசூலிக்கப்படும். ரூ.10 கோடிக்கு மேல் வருவாய் ஈட்டும் நிறுவனங்களுக்கு 5 சதவீதம் சர்சார்ச் வசூலிக்கப்படும். ஈவு தொகை பங்குகளை மீண்டும் வாங்கி கொள்வது, மீச்சுவல் நிதி, பாதுகாப்பு அறக்கட்டளை ஆகியவை அளிக்கும் வருவாய்க்கு விதிக்கப்பட்டு வந்த 10 சதவீதம் சர்சார்ச் 12 சதவீதமாக அதிகரிக்கப்படுகிறது.

2015–16 ஆம் நிதி ஆண்டில் தரமான கல்வி அளிப்பதற்காக வசூலிக்கப்படும் வருமான வரி மீதான 2 சதவீதம் கல்வி தீர்வை மேலும் கூடுதலாக ஒரு சதவீதம் சேர்த்து வசூலிக்கப்படும். இது நடுத்தர உயர் கல்வி தீர்வை என அழைக்கப்படும்.

அ) 1) நடுத்தர மக்களுக்கு பயனளிக்கும் வகையில் அவர்களுக்கு வரி விதிப்பு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. சுகாதார காப்பீடு பிரிமீயத்திற்கான கட்டுப்பாட்டு அளவு ரூ.15000 லிருந்து ரூ.25000 ஆக அதிகரிக்கப்படுகிறது. மூத்த குடிமக்களுக்காக வழங்கப்படும் சலுகை ரூ.20000 லிருந்து ரூ.30000 ஆக அதிகரிக்கப்படுகிறது.

2) சுகாதார காப்பீட்டின் கீழ் வராத 80 வயது, அதற்கு மேல் உள்ள மூத்த குடிமக்களுக்கு ரூ.30000 வரை வருமானத்திலிருந்து விலக்கு அளிக்கப்படும். இது மருத்துவ செலவுக்காக அனுமதிக்கப்படுகிறது.

ஆ) சில குறிப்பிட்ட தீவிர நோய் உள்ளவர்களுக்கு ரூ.60000 லிருந்து ரூ.80000 வரை மூத்த குடிமக்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது.

இ) மேலும், கூடுதலாக பிரிவு 80 டிடி மற்றும் 80 யு வருமான வரி சட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.25,000 வரை கூடுதலாக விலக்கு அளிக்கப்படுகிறது.

ஈ) ஓய்வூதிய நிதி, புதிய ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றில் செலுத்தப்படும் வருமான வரி விலக்கு ரூ.1 லட்சத்து 5 ஆயிரம் வரை அதிகரிக்கப்படுகிறது.

உ) வருமான வரிப்பிரிவு 80 சிசிடியின்படி புதிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் செலுத்தப்படும் பங்கு தொகைக்கு கூடுதலாக ரூ.50,000 வரை விலக்கு அளிக்கப்படுகிறது.

ஊ) வருமான வரி சட்டம் பிரிவு 80 'சி'யின் படி குழந்தை மேம்பாட்டு திட்டத்திற்கு செலுத்தப்படும் தொகைக்கு முழு விலக்கு அளிக்கப்படும். முதலீடுகளுக்கு ஏற்கனவே விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் பெறும் வட்டி மீதான வருவாய்க்கும் முழு அளவில் விலக்கு அளிக்கப்படுகிறது. தற்போது வழங்கப்பட்டு வரும் போக்குவரத்து படிக்கான வருமான வரி விலக்கு ரூ.800 லிருந்து ரூ. 1200 ஆக அதிகரிக்கப்படுகிறது.

**எ) மூத்த குடிமக்களுக்கு பயனளிக்கும் வகையில் சேவை வரியில் விலக்கு அளிக்கப்படுகிறது.**

மாற்றம், வளர்ச்சி, வேலைவாய்ப்பு நலிந்த மற்றும் உண்மையான மேம்பாடு ஆகிய குறிக்கோள்களை எட்ட அரசு உறுதி பூண்டு இருப்பதை எடுத்துரைத்த அமைச்சர், அரசியல் சாசனம் உறுதி செய்துள்ள சமத்துவம் மற்றும் நீதி, ஜாதி, மதக்கொள்கை வேறுபாடுகள் இன்றி அனைவருக்கும் கிடைக்கச் செய்வதில் அரசு உறுதியாக இருப்பதாக கூறினார்.அனைவரும் மகிழ்ச்சியுடன் இருக்கட்டும் என்று உபநிஷத் பிரார்த்தனையுடன் நிதி அமைச்சர் நமது பட்ஜெட் உரையை நிறைவு செய்தார்.

## பட்ஜெட் 2015 - 2016

## உள்கட்டமைப்பு துறைக்கு கூடுதலாக ரூ.70,000 கோடி

**நிதி ஆண்டு 2015–16ல் உள்கட்டமைப்பு துறைக்கு கூடுதலாக ரூ.70,000 கோடி வழங்கப்பட உள்ளது என்று மத்திய நிதி துறை அமைச்சர் திரு.அருண்ஜேட்லி தெரிவித்துள்ளார். இந்த நிதி மத்திய அரசின் நிதியிலிருந்தும் மத்திய பொது துறை நிறுவனங்களிலிருந்தும் வழங்கப்படும். நமது வளர்ச்சி இலக்குகளுக்கு ஏற்ப நமது உள்கட்டமைப்பு நிலை இல்லை என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

# 2015-16ம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட் : சில முக்கிய அம்சங்கள்

*2015–16ம் ஆண்டிற்கான மத்திய வரவு செலவு திட்ட அறிக்கை ஒத்துழைப்புடன் கூட்டுறவு ஆட்சிமுறைமையயின் தொடக்கத்தை குறிப்பதாக அமைகிறது. மாநிலங்களை அதிகாரம் படுத்த வகை செய்கிறது. பல புது திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.*

*நுண்ணியநிதிநிறுவனங்களுக்குஉதவிவழங்கும் வகையில் "முத்ரா" என்று அழைக்கப்படும் நுண்ணிய அலகுகள் மேம்பாட்டு மறு நிதி முகமை தொடங்கப்படுகிறது.*

*விபத்தில் உயிர் இழப்பவர்களுக்கு காப்பீடு வழங்கும் பிரதம மந்திரி "சுரக்ஷா பீம யோஜான" திட்டம்.*

*ஆண்டு ஒன்றிற்கு ரூ 12 பிரிமியம் செலுத்துவதன் வாயிலாக ரூ. 2 லட்சம் காப்பீடு பெற வசதி;*

*"அடல் ஓய்வூதியத் திட்டம்" பிரிமியத்தில் 50% அரசு வழங்கும்*

*இயற்கை மற்றும் விபத்து உயிர் இழப்பிற்கு காப்பீடு வழங்க பிரதம மந்திரி "ஜீவன் ஜோதி பீமா யோஜனா"*

*மூத்த குடிமக்கள் நல நிதியம் அமைக்க யோசனை*

*தேசிய முதலீடு மற்றும் கட்டமைப்பு நிதியம் உருவாக்கப்படும்*

*ரயில், சாலை மற்றும் பாசனத் திட்டங்களுக்கென வரி இல்லாத கட்டமைப்பு பத்திரங்கள்*

*புதிதாக வர்த்தகம் தொடங்குபவருக்கு உதவி வழங்க "சேது" என்றழைக்கப்படும் சுய வேலை வாய்ப்பு மற்றும் திறன் பயன்பாட்டு அமைப்பை ஏற்படுத்த யோசனை*

*5 பெரிய மின் திட்டங்கள் அமைக்கப்படும்*

*தற்போது நடைமுறையில் உள்ள தங்க சேமிப்பு மற்றும் தங்க உலோக கடன் திட்டங்களுக்கு மாற்றாக செல்லத்தக்க தங்கத் திட்டம்*

*"நிர்பயா" நிதியத்திற்கு மேலும் ரூ. 1000 கோடி*

*மேலும் பல இடங்களில் புதிய அகில இந்திய மருத்துவ கழகங்கள், இந்திய தொழில்நுட்ப கழகங்கள் மற்றும் இந்திய மேலாண்மைக் கழகங்கள்*

*மதிப்பிடப்பட்டுள்ள மொத்த செலவீனம் ரூ. 17,77,477 கோடி*

*நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.9%மாக இருக்கும்*

*நிலையான வரிக் கொள்கையும் சாதகமான வரி நிர்வாகமும் குறிக்கோளாக இருக்கும்*

*கருப்பு பணத்துக்கு எதிரான போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும்*

*சரக்கு மற்றும் சேவை வரியை அடுத்த ஆண்டிலிருந்து செயல்படுத்த பல்வேறு முனைகளில் முயற்சி*

*தனிநபர் வருமான வரி விகிதத்தில் மாற்றம் இல்லை*

*அடுத்த நிதி ஆண்டுகளில் அதாவது 4 ஆண்டுகளில் நிறுவன வரியை 30% விருந்து 25% ஆகக் குறைக்க யோசனை*

*பல்வேறு வரி விலக்குகளை சீரமைக்கவும் அகற்றவும் நடவடிக்கை*

*வரி தகராறுகளை குறைக்க ஊக்குவிப்பு; வரி நிர்வாகத்தில் மேம்பாடு*

*சேமிப்பை ஊக்குவிக்கும் வகையில் தனிநபருக்கு வழங்கப்படும் விலக்கு தொடரும்.*

## தமிழ்நாட்டில் எய்ம்ஸ் நிறுவனம்

**இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் (எய்ம்ஸ்) தமிழ் நாட்டில் நிறுவப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் திரு. அருண் ஜெட்லி கூறியுள்ளார். 2015–16 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை அவர் தாக்கல் செய்தார். அப்போது தமிழ் நாடு, ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், இமாச்சல பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களில் எய்ம்ஸ் நிறுவனம் அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.**

**அதேபோல், பீகாரில் மருத்துவ அறிவியலை மேம்படுத்த எய்ம்ஸ் போன்ற மருத்துவ நிறுவனம் தொடங்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.**